REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN 92 தினகரன்
2024 ஓகஸ்ட் 6 செவ்வாய்க்கிழமை
1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 186 | Tuesday 06, August, 2024 | 16பக்கங்கள் | 50/-




## மெனிக்திவெல மத்திய கல்லூரி மாணவரின் கோரிக்கையை நிறைவேற்றிய ஜனாதிபதி

### விளையாட்டுத் துறையில் திறமை காட்டிய மாணவர்களுக்கும் பாராட்டு



தமது பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறையொன்றைப் பெற்றுத் தருமாறும் விளையாட்டு மைதானத்தை நவீனமயப்படுத்துமாறும் கண்டி, மெனிக்திவெல மத்திய கல்லூரி மாணவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம்

06

## தேர்தல் சட்டவிதி மீறல்களை அறிவிக்க தொலைபேசி இலக்கம்

ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெறும் தேர்தல் சட்ட விதி மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் விசேட வேலைத்திட்டமொன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

இதன்படி, 0767914696 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது 0112505566 என்ற தொலைநகல் இலக்கத்துக்கோ முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியுமென ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்துவதற்கு பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் தொடர்ச்சியான வழிகாட்டல்களை வெளியிட்டது.

## கலபொட ஞானிஸ்ஸர தேரரின் இறுதிக் கிரியைகள்



அமரத்துவமடைந்த கொழும்பு நவகோரளே பிரதம சங்கநாயக்க ஹுணுப்பிட்டிய கங்காராம விகாராதிபதி சங்கைக்குரிய கலாநிதி கலபொட ஞானிஸ்ஸர தேரரின் இறுதிக் கிரியைகள், நேற்று நடைபெற்றன. பூதவுடலைத் தாங்கிய பேழையை தேரர்கள் சுமந்து சென்றனர். இந் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார். (படம்: சுலோச்சன கமகே)

# ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் கட்சிகள், குழுக்களை ஒன்றிணைத்து புதிய கூட்டணி

### பிரதமரின் மக்கள் ஐக்கிய முன்னணி தலைமையில் பாரிய அரசியல் கூட்டு

**வெற்றியை உறுதிப்படுத்த பல வியூகங்கள்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களை ஒன்றிணைத்து புதிய அரசியல் கூட்டணி ஆரம்பிக்கப்படவுள்ளது. மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் இந்த அரசியல் கூட்டணியை உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கூட்டணியை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இப்போதே ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்த கட்சிகள், பிரதமர் தினேஷ் குணவர்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட குழுவினர், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பிரிந்த குழு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அதிருப்திக்குழு, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் தேசிய காங்கிரஸ் என்பன எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரிக்கத் தீர்மானித்துள்ளன. இந்நிலையில் இக்கட்சிகளை ஒன்றிணைத்து பிரதமர் தலைமையில் புதிய அரசியல் கூட்டணி உருவாக்கப்படவுள்ளது. இன்னும் சில தினங்களில் மேலும் பல அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கவிருப்பதால், அனைத்து கட்சிகள் மற்றும் குழுக்களின் பங்கேற்புடன் இந்த புதிய கூட்டணி உருவாக்கப்படும் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பொருளாதாரத்தை குறுகிய காலப்பகுதிக்குள் மீளக்கட்டி எழுப்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தில் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளதால், பெரும்பாலான அரசியல் கட்சிகளும், எம்.பிக்களும் இந்த தீர்மானத்துக்கு வந்துள்ளனர்.

எதிர்வரும் தேர்தலில் கட்சி பேதமின்றி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு உழைப்பது, நாட்டின் எதிர்காலம் பற்றிய நலனுக்காகவே. இதன் அடிப்படையில் இன்னும் சிலர் எதிர்காலத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வரவுள்ளனர். இவர்களையும் இணைத்து பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைக்கும் தேவையை கட்சித் தலைவர்கள் உணர்ந்துள்ளனர். இதை நோக்காகக் கொண்டு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் புதிய அரசியல் கூட்டணி அமைக்கப்படவுள்ளது.

இப்புதிய கூட்டணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு உழைக்கவுள்ளது. நாட்டின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 எம்.பிக்களில் எட்டுப்பேர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ள அதேவேள, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தொண்ணூறு வீதமானவர்கள் ஜனாதியின் வெற்றிக்கு உழைக்கவுள்ளனர். இந்த வெற்றிக்காக ஒருங்கிணைந்த அடிப்படையிலும் ஒற்றுமையுடனும் வேலைசெய்ய இப்புதிய கூட்டணி முன்வரவுள்ளது.

## தபால் மூல வாக்களிப்பு விண்ணப்ப காலம் நீடிப்பு

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் காலம் ஆகஸ்ட் 09 நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் காலம் நேற்று 5ஆம் திகதி நள்ளிரவுடன்

06

### சிரேஷ்ட பிரஜைகள் வங்கி வைப்புத்தொகை

## வட்டி வீதத்தை திருத்துவதற்கான தீர்வு முன்மொழிவு ஜனாதிபதியிடம் கையளிப்பு

சிரேஷ்ட பிரஜைகளின் வங்கி வைப்புகளுக்கான வட்டி வீதத்தை திருத்துவதற்கான தீர்வு யோசனை அடங்கிய அறிக்கை, ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் நேற்று (05) காலை இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார்.

**எதிர்காலத்தில் சாதகமான பதில் வழங்கப்படும் - நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய**

அங்கு பேசிய அவர்: பல சிரேஷ்ட பிரஜைகளின் முக்கிய வருமானம், அவர்களின் ஓய்வு காலத்தின் போது வழங்கப்படும்

06



இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா நேற்று (05) பிரதமர் தினேஷ் குணவர்தனவை அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார். இச்சந்திப்பில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் பொருளாதார, கலாசார உறவுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டை நிரூபித்தால் பதவி விலகத் தயார்

### சாணக்கியனுக்கு வியாழேந்திரன் பகிரங்க சவால்!!



தம்மீது சுமத்தப்பட்டுள்ள இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அரசியலிலிருந்து விலகுவதாக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், தம்மீது அபாண்டமாக குற்றம் சுமத்தி கறைபூச துடிப்பதாகவும் அமைச்சர் வியாழேந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார். தமது பிரத்தியேக செயலாளர் மற்றும் உதவியாளர் இலஞ்ச, ஊழல் அதிகாரிகளினால் கடந்த சில நாட்களுக்கு முன்னர்

06

### பங்களாதேஷ் போராட்டம் தீவிரம்

## பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக்ஹசீனா வெளிநாட்டில் தஞ்சம்

### பாராளுமன்றத்துக்கும் தீ வைப்பு





பங்களாதேஷில் மாணவர் போராட்டம் தீவிரமடைந்ததால் பிரதமர் ஷேக் ஹசீனா, பதவியை இராஜினாமா செய்து வெளிநாடொன்றுக்கு தப்பிச் சென்றுள்ளார். அவர் இந்தியாவுக்கு புறப்பட்டிருக்கலாமென வெளிநாட்டு ஊடகங்கள் தெ ரிவிக்கின்றன. இதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று மாலை பாராளுமன்ற கட்டடத்துக்கு தீ வைத்ததாகவும் வெளிநாட்டு ஊடக ங்கள் தெரிவித்தன.

கடந்த 1971ஆம் ஆண்டு பங்களாதேஷில் விடுத லைப் போராட்டத்தில் உயிரிழந்த படைவீரர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வாய்ப்புகளில் 30 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்ற நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, கடந்த ஜூலை மாதம் மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய

06

## இலங்கையை உண்மையான அணிசேரா நாடாக முன்னெடுத்து வருபவர் ஜனாதிபதி

### அவரது சமச்சீர் கொள்கைக்கு நாம் நன்றி கூறவேண்டும்



வெளியுறவுக் கொள்கையில் இலங்கை எவ்வாறான நிலைப்பாட்டுடன் செயற்படுகின்றதென்பற்கு பதில் வழங்க முடியாதளவுக்கு உள்ளதாக, நவ ஜனதா பெரமுனவின் தலைவர் சுகீஸ்வர பண்டார தெரிவித்தார்.

சீனாவுக்கு ஆதரவா? அல்லது இந்தியாவுக்கு சார்பாகவா? என்று எவரேனும் கேட்டால், பதில்

06

## வேறு வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க அனுமதி கிடையாது

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர் ஒருவர் நாட்டின் எந்தவொரு வாக்களிப்பு நிலையத்திலும், வாக்களிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல்கள், உண்மைக்குப் புறம்பானவையென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இவ்வாறான எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லையென ஆணைக்

06

## கட்டுப்பணம் செலுத்தினார் பீல்ட் மார்ஷல் பொன்சேக்கா




ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா, சுயேச்சை வேட்பாளராக கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

தேர்தலில் அவர் சுயேச்சை

06

### நீதிமன்ற அவமதிப்பு

## டயனாவுக்கு எதிரான வழக்கு நிராகரிப்பு



நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு, நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று (05) பிரிதி பத்மன்

06

### ஜனாதிபதித் தேர்தலில்

## வாக்களிக்க இம்முறை 1,71,40,354 பேர் தகுதி

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு இம்முறை ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 (1,71,40,354) வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 2024 வாக்காளர் பட்டியலில் இத்தகவல் வெளியாகியுள்ளது.



03

## தமிழக மீனவர்களின் விவகாரம் அண்ணாமலை டெல்லி பயணம்

### ஜெய்சங்கருடன் சந்தித்து பேச முடிவு

# கங்காராம விகாராதிபதியின் இறுதிக்கிரியைகள்
























படங்கள் : சுதத் மலவீர, சுலோச்சன கமகே

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஓகஸ்ட் 6 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN



தொழுகை நேரம்
சுபஹ் - 04.45
லுஹர் - 12.18
அஸர் - 03.38
மஃரிப் - 06.29
இஷா - 07.43

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆடி 21
ராகுகாலம் : மாலை : 3.04 - 4.34வரை
சுபநேரம் : காலை : 10.34 - 12.04வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# சட்டவிரோதமாக சொத்துக்கள் சேர்க்கும் சகலரும் தண்டிக்கப்படுவர்




வக ரயில் நிலையத்துக்கு அருகிலிருந்து பின்னவல மொரக்கெலே வீதி வரையான அபிவிருத்திப் பணிகள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் ஆரம்பிக்கப்பட்டன.

1500 கிலோமீற்றர் வீதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இவ்வீதி புனரமைக்கப்படவுள்ளது.இவ்வீதி நீண்ட நாட்களாக சீரமைக்கப்படாததால்,மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். இதுகுறித்து இப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கைக்கு ஏற்ப இந்த வீதியை கார்பட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர்,நெடுஞ்சாலைகள் அமைக்கும் பணிகள் இதற்கு முன்னர் பல்வேறு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையை மாற்ற ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் பணம் ஒதுக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒவ்வொரு தொகுதியிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்களுக்கு இப்பணிகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.இருந்தபோதும் ஆரம்பிக்கப்பட்ட வீதித் திட்டங்கள் நிறைவடையவி ல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையால், அரச துறையைச் சேர்ந்தவர்களோ அல்லது வேறு யாருமோ திருடினாலும் பலன் கிடைக்காது. அரசு ஊழியர்கள் மட்டுமின்றி அவர்களது குடும்ப உறுப்பினர்கள், குழந்தைகள் கூட தங்களது உண்மையான சொத்துக்களை வெளியிட வேண்டும். சட்டவிரோதமான முறையில் சொத்துக்கள் அதிகரித்திருந்தால், சட்டம் மிகக் கடுமையாக அமுல்படுத்தப்படும்.

மக்கள் பிரதிநிதிகள் மாத்திரம் இந்த சட்டத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல. அனைத்து அரசு ஊழியர்களும், தனியார் நிறுவன ஊழியர்களும் லஞ்சம் மற்றும் ஊழல் கமிஷன்களைப் பெற முடியாத வகையில் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன என்றார்.

## தேர்தல் சட்டவிதி மீறல்களை அறிவிக்க தொலைபேசி இலக்கம்

ஜனாதிபதித் தேர்தலின் போது இடம்பெறும் தேர்தல் சட்ட விதி மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் விசேட வேலைத்திட்டமொன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

இதன்படி, 0767914696 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது 0112505566 என்ற தொலைநகல் இலக்கத்துக்கோ முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியுமென ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்துவதற்கு பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் தொடர்ச்சியான வழிகாட்டல்களை வெளியிட்டது.

## ரயில்வே தொழிற்சாலையில் இரும்பு திருடிய ஐவர் கைது

ரயில்பெட்டிகளை இணைக்கும் screw coupling எனப்படும் இணைப்புகள் உள்ளிட்ட பல்வேறு இரும்புப் பொருட்களை திருடிய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை ரயில்வே தொழிற்சாலையிலிருந்து இந்த ரயில் பெட்டிகளுக்கு பயன்படுத்தப்படும் screw coupling இரும்பு பாகங்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஐந்து சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் (04) கைது செய்யப்பட்டுள்ளதாக கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர். திருடப்பட்ட இரும்பு பாகங்களின் மொத்த மதிப்பு சுமார் 03 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியானதென பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்மலானை, பிலியந்தலை மற்றும் மொரட்டுவை பகுதிகளைச் சேர்ந்த 22 முதல் 29 வயதுக்குட்பட்ட ஐந்து பேரே, கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம்

## இரத்து செய்யக் கோரி 41 முன்னணி தொழிற்சங்கங்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி, நாட்டிலுள்ள 41 முன்னணி தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதன் சாதக பாதகங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ள தொழிற்சங்கங்கள், அதனை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இச்சட்டம் நாட்டிலுள்ள மக்களின் கருத்து சுதந்திரத்தை ஒடுக்கும் சட்டமாக காணப்படுவதாகவும் அதே நேரம் பிரஜைகளின் சுதந்திரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாக அது அமைந்துள்ளதாகவும் அந்த தொழிற்சங்கங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளன.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்ட மூலம் அண்மையில் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பின்னர் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

# எமது அரசியலை வெளிநாடுகளில் முன்னெடுப்பது பிரயோசனமற்றது

அமைதியாக வாழும் இலங்கையருக்கு இது, சிக்கல்களையே தோற்றுவிக்கும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மிகவும் அமைதியான வாழ்க்கை வாழும் நிலையில்,எமது நாட்டு அரசியலை வெளிநாடுகளில் முன்னெடுப்பது அவர்களின் வாழ்க்கையை சிக்கலுக்குள்ளாக்கும்

செயலாகும் என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையின் அரசியலை அந்த நாட்டில் முன்னெடுக்க செயற்படுவது எந்தளவு பிரயோசனமானது என புரியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜே பி பி யினரால் குவைத் நாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இசை நிகழ்ச்சியில் பங்கு பற்றிய 24 பேர், அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



அது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதே வேளை,அவ்வாறான இசை நிகழ்ச்சிகளை வெளிநாடுகளில் நடத்துவதானால் அந்த நாட்டின் சட்டங்களுக்கு அமைய அவற்றை ஏற்பாடு செய்வது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

குவைத்தில் ஜேவிபியினர் ஏற்பாடு செய்த 'அக்கரையில் நாம்' என்ற இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தபோது கடந்த 2ஆம் திகதி 24 பேர் அந்த நாட்டு பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் .

அதனையடுத்து அங்குள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளின் தலையீட்டினால் 24 இலங்கையர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எந்த ஒரு இலங்கையரும் வெளிநாடுகளில் சிக்கல்களை எதிர்கொள்ளநேர்ந்தால்,அந்நாட்டிலுள்ள தூதுவராலயங்கள் அவர்களை அதிலிருந்து விடுவிப்பதற்கு கடமைப்பட்டுள்ளன. எனவே, அவ்வாறான நிகழ்ச்சிகளை வெளிநாடுகளில் செய்வதானால் அந்த நாட்டின் சட்டங்களுக்கு

06

## தமிழக மீனவர்களின் விவகாரம் அண்ணாமலை டெல்லி பயணம்

ஜெய்சங்கருடன் சந்தித்து பேச முடிவு

இலங்கை இந்திய மீனவர் விவகாரம் தொடர்பில் மத்திய அரசுடன்பேச பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை, தமிழக மீனவர் பிரதிநிதிகளுடன் புதுடில்லி பயணமாகியுள்ளார்.

தமிழக மீனவ பிரதிநிதிகளுடன் நேற்று டெல்லி செல்லும் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்துபேசவுள்ளார். தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை ஓரிரு மாதங்களில் வெளிநாடு செல்லவுள்ளார். இங்கிலாந்தில் சில மாதங்கள் தங்கியிருந்து அரசியல் தொடர்பான படிப்பு மேற்கொள்ள உள்ளார். கடந்த 03 நாட்களுக்கு முன்பு அண்ணாமலை திடீர் டெல்லி பயணம் மேற்கொண்டார்.

அங்கு பாஜக தேசிய தலைமை அலுவலகத்தில் முக்கிய தலைவர்களை சந்தித்து இங்கிலாந்து பயணம், தமிழக அரசியல் நிலவரம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இதனிடையே, இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிய தமிழக மீனவர் கைதுசெய்யப்படுவதாகவும் புதுக் கோட்டையை சேர்ந்த 4 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

06

## தேர்தல் அலுவலகங்கள் சுமுகமாக இயங்குவதை உறுதி செய்வதற்கு பொலிஸ் உயரதிகாரிகள் நியமனம்

ஜனாதிபதித் தேர்தலில், மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் சுமுகமாக இயங்குவதை உறுதி செய்வதற்கும் தேர்தல் தொடர்பான சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கும் பொலிஸார் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கமைவாக 22 மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கும் தலா 11 பொலிஸ் உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்தல் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கும் அலுவலகங்களின் செயற்பாடுகளை திறம்பட ஒருங்கிணைப்பதை உறுதி செய்வதற்கும் பொறுப்பாக இந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவில் ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட 10 அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். சிலாபம், ஆராச்சிக்கட்டுவ மற்றும் குளியாப்பிட்டிய ஆகிய பகுதிகளில் இருந்து தேர்தல் தொடர்பான மூன்று முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன.

தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்தல், சுவரொட்டி

06

## கொழும்பு தமிழ் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

நாளை 07ஆம் திகதி நடத்த ஏற்பாடு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பேரவை உறுப்பினர் திருமதி வசந்தி தயாபரன் தலைமையில் நாளை( 07)

அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் 864 ஆவது அறிவோர் ஒன்றுகூடலாக நடைபெறவுள்ளது.

நூற்றாண்டை முன்னிறுத்தியதாக "ஈழத்து இலக்கியத்

06

## தனமல்விலவில் கஞ்சா செடிகளுடன் நால்வர் கைது

தனமல்வில, ஹம்பேகமுவ பிரதேசத்தில் கஞ்சா செடிகளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைதாகினர். இந்நடவடிக்கையின்போது பயிரிடப்பட் டிருந்த 50,000 கஞ்சா செடிகளும் கண்டுப்பிடிக்கப்பட்டுள் ளன.கஞ்சா செடிகள் அனைத்தும் தீ வைத்து கொளுத்தப்பட்டன. கஞ்சா செடிகளின் மொத்த மதிப்பு சுமார் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமானதென பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகத்தின் பேரில் நான்கு பேர், கைது

06

## இஸ்ரேலிலுள்ள இலங்கையர் பாதுகாப்பாகவே உள்ளனர்

இலங்கை தூதுவர் தெரிவிப்பு

இஸ்ரேலில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலையால் அங்குள்ள இலங்கையர் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையென, இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். இஸ்ரேலின் வடபகுதியை இலக்கு வைத்து ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லாஹ் அமைப்புகள் வான்வழித் தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றன.

இந்தத் தாக்குதல்கள் தானியங்கி வான் பாதுகாப்பு அமைப்பினூடாக முறியடிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலில் உள்ள 70 சதவீதமான இலங்கையர் பராமரிப்பாளர்களாக உள்ளனர். அவர்கள் வீடுகளுக்குள்ளேயே இருப்பதனால் பாதுகாப்பாக இருப்பதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

## தெங்கு செய்கை உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வு

தொலைபேசி, Coconut App அறிமுகம்

தெங்கு செய்கை உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தொலைபேசியூடாக தீர்வை பெற்றுக்கொள்வதற்கு தெங்கு அபிவிருத்தி அதிகார சபை வசதி செய்துள்ளது.

இதற்காக 1916 என்ற உடனடி தொலை இலக்கமும் Coconut App செயலியும் நேற்று (05) முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

விவசாய மற்றும்

06




## அனுராதபுரம் முன்னாள் ASPயின் முன் பிணை மனு நிராகரிப்பு

தாம், கைது செய்யப்பட்டால் பிணையில் விடுதலை செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிடுமாறு அநுராதபுரம் முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மகாநாம விடுத்த கோரிக்கையை, அநுராதபுரம் மேலதிக நீதவான் திருமதி மனோதி ஹேவாவசம் நிராகரித்தார். சம்பவம் தொடர்பிலான வழக்கு நேற்று (05) அநுராதபுரம் மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர், முறைப்பாட்டாளரான சஞ்சீவ மகாநாம சமர்ப்பித்த பிணை விண்ணப்பத்தை நிராகரிக்குமாறு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

தாம், கைது செய்யப்பட்டால், முன் பிணையில் விடுதலை செய்யுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிடுமாறு முறைப்பாட்டாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மகாநாம விடுத்த கோரிக்கையை மேலதிக நீதவான் திருமதி மனோதி ஹேவாவசம் நிராகரித்தார். என்னகாரணத்துக்காக? என்ன குற்றத்துக்காக? என்று முறைப்பாடு செய்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மகாநாம நீதிமன்றத்தில் குறிப்பிடத் தவறியுள்ளார் . அத்துடன், விண்ணப்பதாரரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மகாநாம பொலிஸ் திணைக்களத்தின் முறையான முன் அனுமதியின்றி வெளிநாடு சென்றுள்ளதாகவும், அதன் பிரகாரம் அவரை பிணையில் விடுவிக்குமாறு அனுராதபுரம் முன்னாள் ASPயின்

06

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 21ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 30

## குறள் தரும் சிந்தனை



ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

ஒருவர்க்கு உயர்வு தரக் கூடியது ஒழுக்கம் என்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிட மேலானதாகப் போற்றப்படுகிறது.

# சர்வதேச நாணய நிதியத்தின் பாராட்டை பெற்றுள்ள இலங்கை

பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த இலங்கை, கட்டம் கட்டமாக மீட்சி பெற்று பொருளாதார மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்து பயணித்துக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்த பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களின் பயனாக குறுகிய காலப்பகுதிக்குள் இவ்வாறான முன்னேற்றங்களை இந்நாட்டினால் அடைந்து கொள்ள முடிந்திருக்கிறது.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட தவறான பொருளாதார வேலைத்திட்டங்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் 19 பெருந்தொற்று என்பவற்றின் விளைவாக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்தது. மக்களும் பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

அந்தச் சூழலில் நாட்டின் தலைமையை விட்டு அன்றைய ஆட்சியாளர்கள் வெளியேறினர். ஆனால் அச்சமயத்தில் நாட்டின் தலைமையை ஏற்று பொருளாதார ரீதியில் நாட்டை மீளக்கட்டியெழுப்பவோ, மக்களது நெருக்கடிகளுக்கு நிவாரணங்களையும் தீர்வுகளையும் பெற்றுக்கொடுக்கவோ எவரும் முன்வராத துர்ப்பாக்கிய நிலை உருவானது. அந்தச் சூழலில் சில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நாட்டினதும் மக்களினதும் நலன்களை விடவும் தமதும் கட்சியினதும் நலன்களுக்கு மாத்திரமே முன்னுரிமை அளித்து தீர்மானங்களை எடுத்தனர். ஆபிரிக்க நாடுகளில் போன்று வன்முறைகளும் வழிப்பறிக் கொள்ளைகளும் தலைதூக்கி சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தால் கூட பரவாயில்லை என்ற அடிப்படையிலேயே அவர்களது தீர்மானங்களும் செயற்படுகளும் அமைந்திருந்தன.

அந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றதோடு பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களையும் ஆரம்பித்தார். அந்த வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதி முதல் பிரதிபலன்களை அளிக்கத் தொடங்கின. அதன் பயனாக பொருளாதார வீழ்ச்சி நிலவிய போது மக்கள் முகம்கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கலாயின. அதன் பிரதிபலன்கள் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இப்பின்புலத்தில் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க சர்வதேச நாணய நிதியமும் முன்வந்தது. நாடு பொருளாதார ரீதியில் தொடர்ந்தும் முன்னேற்றப்பாதையில் பயணிக்க இது பக்கத்துணையாக அமைந்தது. நாட்டின் உற்பத்தி மற்றும் சேவைகள் துறையில் தொடரான முன்னேற்றங்கள் பதிவாகலாயின. அதாவது உல்லாசப் பயணிகளின் வருகை, வெளிநாடுகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் அனுப்பும் அந்நியச் செலாவணி என்பன அதிகரிக்கத் தொடங்கின. ஏற்றுமதி வருவாயும் உயர்வடையத் தொடங்கியது.

இவ்வாறு நாட்டின் பொருளாதாரம் அனைத்துத் துறைகளிலும் நம்பிக்கை அளிக்கும் வகையில் முன்னேற்றங்களை வெளிப்படுத்தியது. இதன் விளைவாக மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் ஏற்பட்டன.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னேற்றகரமான பாதையில் பயணிக்கும் நிலை உருவாகியுள்ளது.

அந்த வகையில் அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீற்றர் ப்ரூவர் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் குறித்து பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அரச வருமானத்தை அதிகரிக்கவும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் அந்நியச் செலாவணி கையிருப்பை மேம்படுத்தவும் ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருப்பதைக் குறிப்பாகப் பாராட்டியுள்ளார். அவ்வேலைத்திட்டங்கள் நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் சாதகமான பிரதிபலன்களை அளித்து வருகின்றன.

பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாட்டை பொருளாதார ரீதியில் மீளக்கட்டியெழுப்பவென முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்து வருவதன் பயனாக பொருளாதாரம் முன்னேற்றமான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

அதனால் இவ்வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். நாட்டில் இனியொரு போதும் பொருளாதார நெருக்கடி ஏற்படக் கூடாது. அதற்கு இடமளிக்கவும் கூடாது என்பதே மக்களது எதிர்பார்ப்பாகவும் உள்ளது. அதன் காரணத்தினால் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் இப்பொருளாதார வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்திட்டங்களை சீர்குலைக்கவோ, நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படவோ துணைபோகலாகாது.

editor.tkn@lakehouse.lk

# அதானி காற்றாலை மின்திட்டங்களை தொடர்வதற்கு சாதகமான சமிக்ஞை



அதானி காற்றாலை திட்ட வழக்கை விசாரிக்க பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்ட உயர்நீதிமன்றத்தின் முழுமையான ஐவரடங்கிய குழு முன்னிலையில், இலங்கையின் பொருளாதாரம் மற்றும் வலுசக்தியின் நிலைபேறான தன்மைக்கு இந்த தேசிய திட்டம் முக்கியத்துவமானது என்பது எடுத்துக் கூறப்பட்டதைத் தொடர்ந்து, மனுதாரர்கள் முன்வைத்த முன்கூட்டிய விசாரணை மற்றும் விசாரிப்பதற்கு ஆதரவான நாட்களை நீடிப்பதற்கான கோரிக்கையை மன்று நிராகரித்துள்ளது.

அத்துடன் வழக்கை எதிர்வரும் ஒக்டோபரில் எடுத்துக் கொள்ள நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை (02) உத்தரவு வழங்கியுள்ளது. இடைக்கால உத்தரவு வழங்க முடியாது எனவும் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் 20 வருடங்களுக்கு அதானி நிறுவனத்திடம் இருந்து ஒரு KW அலகிற்கு 8.26 சத டொலர்கள் எனும் விலையில் காற்றாலை மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான, மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையில் (PPA) நுழைவதற்கான விலைமனுகோரலை அதானி குழுமத்திற்கு வழங்க, கடந்த 2024 மே 06ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுத்த முடிவை எதிர்த்து, வனவிலங்கு இயற்கை பாதுகாப்பு சங்கம் (WNPS), கலாநிதி ரொஹான் பெத்தியகொட உள்ளிட்ட சில விஞ்ஞானிகள் தாக்கல் செய்த ஆட்சேபனை மனு கடந்த வெள்ளிக்கிழமை பரிசீலனைக்குட்படுத்தப்பட்டது. அப்போதே உயர்நீதிமன்றம் மனுதாரர்கள் கோரிய இடைக்கால எந்தவொரு தடையுத்தரவையும் வழங்கவில்லை.

அதானியின் காற்றாலைத் திட்டமானது, இலங்கையில் 1 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான மிகப் பாரிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி முதலீடாகும். இந்த முதலீட்டில் 484 MW திறன் கொண்ட நாட்டின் மிகப்பெரிய காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை அபிவிருத்தி செய்வதும் உள்ளடங்குகின்றது. இத்திட்டத்தை சாதனைமிக்க இடைவெளியில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி, இத்திட்டமானது 1,200 MW திறன் கொண்ட புதிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மின்னுற்பத்தி நிலையங்களை இணைப்பதில் மிக நீண்ட 400 kV பரிமாற்ற பிரதான மின் இணைப்பு பாதையைக் கொண்டுள்ளது. இவ்வாறு உருவாக்கப்படும் காற்றாலை மின்சக்தி மூலம் இலங்கை வருடாந்தம் சுமார் 30 பில்லியன் ரூபாவை சேமிக்க முடியும். இதனால் பாவனையாளர்களுக்கான மின்சாரக் கட்டணங்கள், அலகொன்றிற்கு ரூ. 17 ரூபாவினால் குறைக்கப்படும். அது மாத்திரமன்றி, இதன் மூலம் இலங்கையானது புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் போட்டியிடும் ஒரு நாடாக மாறும். அத்துடன், நாட்டில் நடைமுறைப்படுத்தக்கூடிய மிகக் குறைந்த காற்றாலை மின்சக்திக் கட்டணங்களை வழங்க இந்த திட்டம் உறுதியளித்துள்ளது.

தற்போது, இவ்வாறான திட்டமானது 50 MW திட்டம் போன்ற சிறிய முதலீடுகள் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு, அது வெளிநாட்டு பங்களிப்பு இல்லாமல், உள்ளூர் முதலீட்டாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது.

# நந்தவனம் சந்திரேசேகரனின் 'லகான் இல்லாத சாம்பல்நிறக் குதிரை' கவிதை நூல் வெளியீட்டு விழா

இனிய நந்தவனம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரனின் 'லகான் இல்லாத சாம்பல்நிறக் குதிரை' கவிதை நூல் வெளியீட்டு விழா திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம் பிரீஸ் ரெசிடென்சியில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது.

இனிய நந்தவனம் கௌரவ ஆலோசகர் மேஜர் டோனர் ரொட்டேரியன் கே. சீனிவாசன் தலைமையேற்று நூலை வெளியிட, எழுத்தாளர் கேத்தரின் ஆரோக்கியசாமி முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். திருச்சி பாட்சா பிரியாணி உரிமையாளர் முகம்மது அபுபக்கர் சித்திக், அரிமா முகம்மது சபி, மருத்துவர் நிவ்யா, கவிஞர் ஆனிதா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கவிஞர் ம.திருவள்ளுவர், கல்வியாளர் இரா. ஜெயலட்சுமி ஆகியோர் நூலாய்வு செய்ய, 'உயிர் எழுத்து' மாத இதழின் ஆசிரியர் சுதீர் செந்தில் சிறப்புரையாற்றினார். முன்னதாக கவிஞர் தனலெட்சுமி பாஸ்கரன் தமிழ் வாழ்த்துப் பாட, இனிய நந்தவனம் மக்கள் தொடர்பாளர் பா.தனபால் அனைவரையும் வரவேற்றார்.

நூலாசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் ஏற்புரையாற்றி அனைவருக்கும் நன்றி தெரிவிக்க, முனைவர் ஜா சலேத் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் கவிஞர் பா. தென்றல், கவிஞர் கோவிந்தசாமி, கவிஞர் ஜனனி அந்தோனிராஜ், இரா. தங்கையா, மருத்துவர் இலட்சுமி நந்தகுமார், கவிஞர் ரெங்கராஜ், கவிஞர் பா. சேதுமாதவன், சமூக சேவகர் விஜயகுமார், எழுத்தாளர் நித்யா மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.







# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வழங்கும் மருத்துவ உதவி

இலங்கையில் புகழ்பெற்ற இந்துக் கோயில்களுள் உகந்தைமலை வேலாயுத சுவாமி கோயிலும் ஒன்றாகும். குன்றம் எறிந்த குமாரவேள் அவுணர்குல மன்னனை அழித்த பின்னர், எறிந்த வேலானது ஆறு பொறிகளாகியது. அவற்றுள் முதன்மையானது இம்மலையில் தங்கியதாக ஐதீகம். வடக்கு கிழக்கின் ஆறுபடை வீடுகளான திருப்படை கோயில்களுள் இதுவும் ஒன்றாகும்.

கதிர்காமம் திருவிழாக் காலத்தையொட்டி இங்கும் திருவிழா முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கதிர்காமம் செல்லும் பக்தர்கள் அத்தனைபேரும் இங்கு தங்கிச் செல்வது வழமையாகும். வடக்கு கிழக்கில் உள்ள தமிழ், சிங்கள மக்கள் முருகப் பெருமானை தரிசிக்க ஒன்றுகூடும் இடங்களுள் கதிர்காமத்திற்கு அடுத்ததாக உகந்தை ஆலயம் காணப்படுகின்றது.





அந்த வகையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஊடாக 6 ஆவது வருடமாக பாத யாத்திரிகர்களுக்கான மருத்துவ உதவி இம்முறையும் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மிக நீண்ட தூரம் நடைப் பயணம் மேற்கொள்ளும் பாத யாத்திரிகளின் உடலில் ஏற்படும் அசாதாரண நிலைகளை மேம்படுத்தும் பொருட்டு ஆயுர்வேத மருந்து வகைகள் வழங்கி வைக்கப்பட்டன.

மூன்று வார காலம் இந்த மருத்துவ முகாம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் என். சிவலிங்கம் வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக சுதேச மருத்துவத்துறையின் கிழக்கு மாகாண ஆணையாளர் வைத்தியர் திருமதி ஜெயலட்சுமி பாஸ்கரனின் வழிகாட்டுதலில் பிரதி மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் தலைமையில் இம்மருந்துப் பொதிகள் வழங்கும் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் திருமதி ஷஹிலா இஸ்ஸடீன், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்தியர் எம்.சீ.எம். மாஹிர் உட்பட பிரிவுகளுக்கான பொறுப்பாளர்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

கல்முனை பிராந்திய ஆயுர்வேத வைத்தியசாலைகளின் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் நிகழ்வில் கலந்துகொண்டு யாத்திரிகர்களுக்கு தேவையான மருந்துகளை வழங்கியதுடன், நோயாளர்களுக்கு அவ்விடங்களிலே ஒத்தடங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

றிசாத் ஏ காதர்
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# புனித மக்காநகரில் சர்வதேச ஒன்பதாவது இஸ்லாமிய விவகார, வக்ஃப் மாநாடு

எதிர்வரும் முஹர்ரம் மாதம் 28 முதல் ஸஃபர் மாதம் இரண்டு வரை (04.08.2024_ 07.08.2024) மூன்று நாட்களுக்கு புனித மக்கா நகரில் சர்வதேச 9 ஆவது இஸ்லாமிய விவகார, வக்ஃப் மாநாடு நடைபெறுகின்றது. உலகெங்கிலும் உள்ள 60 நாடுகளில் இருந்து இஸ்லாமிய விவகார மற்றும் வக்ஃபு வாரிய, தாஃவா விவகாரம் சார்ந்த அமைச்சர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகளுக்கு இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

'நடுநிலைச் சிந்தனையை ஊக்குவிப்பதிலும், அதன் பெறுமானங்களை வேரூன்றச் செய்வதிலும் முஸ்லிம் விவகார அமைச்சுக்கள் மற்றும் அமைப்புக்களின் வகிபாகம்' எனும் தொனிப்பொருளில் நடைபெறுகின்ற இம்மாநாடு சவூதி அரேபிய மன்னரும் இரு ஹரம் ஷரீஃப்களின் ஊழியருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் வழிகாட்டலின் கீழ் நடைபெறுகின்றது.

இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளில் இஸ்லாமிய விவகார அமைச்சின் முக்கிய பொறுப்பு வகிக்கும் அதிகாரிகள், உலமாக்கள், முஃப்திமார்கள், தாஃவா நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் தலைமைகள் என பல்வேறு முக்கியஸ்தர்களும் கலந்து கொள்கின்றார்கள். இம்மாநாட்டை சவூதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சரும், இம்மாநாட்டின் நிறைவேற்று சபைத் தலைவருமான மதிப்புக்குரிய அப்துல்லா பிப் பின் அப்துல் அஸீஸ் ஆல்சேக் தலைமையேற்று நடத்துகின்றார்.

இம்மாநாட்டில் கலந்தாலோசிக்கப்படும் தலைப்புகள்:

★இன்றைய முஸ்லிம் சமூகத்தில் நடுநிலை தாஃவா போக்கையும்



பல்லின மதத்தினருக்கு மத்தியில் சக வாழ்வையும் போதித்து இஸ்லாத்தின் பெயரால் வன்முறைகளோ தீவிரவாத செயல்பாடுகளோ கடும்போக்கோ ஏற்பட்டுவிடாமல் தடுப்பதிலும் தாஃவா நிலையங்களை நடுநிலைப்படுத்துவதிலும் இஸ்லாமிய விவகார அமைச்சுக்களின் கடமைப் பாடும் பங்களிப்பும்.

★மின்பர் மேடைகள், மஸ்ஜிதின் தஃவா நிகழ்ச்சிகளின் ஊடாக இவ்வாறான கடும்போக்கு விசக் கருத்துக்கள் பரப்பப்படாமல் தடுப்பதற்கான இஸ்லாமிய விவகார அமைச்சுக்களின் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள்.

★வக்ஃபு வாரியங்கள் தமது பொறுப்பிலுள்ள வக்புச் சொத்துக்களை முறையாகப் பராமரித்தல், இலாபமீட்டல், அதன் வருமதிகளை திறைசேரியூடாக நல்லறப் பணிகளில் செலவிடல் போன்றவைகளுக்கான வழிகாட்டல்கள்.

★மஸ்ஜித்களுக்கு இமாம்கள், கதீப்கள், போதகர்கள், முஅத்தின்களை நியமிப்பதில், தஃவா நிகழ்ச்சிகளை நடத்துவதில் கவனிக்கவேண்டிய வழிகாட்டல்கள்.



★அமைச்சுக்களும் திணைக்களங்களும் ஃபத்வா மார்க்கத்தீர்ப்புக்கள் வழங்குவோர் விடயத்தை நன்கு ஆராய்தல், அவசரப்படுவதன் விபரீதங்களை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெளிவூட்டல், சில முஃப்திகளின் அவசர பத்வாக்களால் முஸ்லிம் நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிய தெளிவூட்டலும்.

★ முஸ்லிம் நாடுகளின் இஸ்லாமிய விவகார அமைச்சுக்களும் திணைக்களங்களும் நாடுகடந்த ரீதியில் தமக்கிடையில் பரஸ்பர உதவி ஒத்துழைப்புக்களை மேற்கொள்வதன் அவசியமும் சமூகப் பிரச்சினைகளுக்கு பொறுப்புக் கூறும் கடமைப்பாடும்.

★ முஸ்லிம் விவகார, வக்ஃபு அமைச்சுக்களும் திணைக்களங்களும், சபைகளும் தமது அனைத்து நடவடிக்கைகள் செயற்பாடுகளையும் இஸ்லாத்தின் அடிப்படையான அல்குர்ஆன், அஸ்ஸூன்னா, மற்றும் ஸலபுப் ஸாலிஹீன்களான ஸஹாபாக்கள், தாபியீன்களின் வழிகாட்டல்களுக்கு அமைவாக அமைத்துக் கொள்வதன் அவசியமும் அதைப் புறக்கணித்ததால் ஏற்பட்டுள்ள சமூக அவலங்களும்.



MMM. MANSOOR (MATHANI)
DIPUTY DIRECTER
MAHATHUS SUNNAH
ARABIC COLLEGE
KATTANKUDY_01

# பரதகுல பாதுகாவலி பனிமய அன்னைக்கு கொழும்பு புறக்கோட்டையில் திருவிழா

கொழும்பு புறக்கோட்டை தூய பிலிப் நேரியார் ஆலயத்தில் கொலுவீற்றிருக்கும் தூய பனிமய அன்னையின் திருச்சுரூபம் அக் கோயிலுக்கு கையளிக்கப்பட்ட 86 ஆவது வருடாந்த நிறைவை கொழும்பு வாழ் பரத குல மக்கள் அனைத்து சமூகத்துடனும் சேர்ந்து கொண்டாடுகிறார்கள்.

ஆகட்டும் என்ற ஒரே வார்த்தையில் தன்னை முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணித்த அன்னை மரியாள் தன்னைத் தாழ்த்திக் கொண்டதால், இறைவனின் வார்த்தைக்கு எவ்வித மறுப்புமின்றி கீழ்படிந்ததால் விண்ணுலக, மண்ணுலக அரசியாகத் திகழ்கின்றார்.

மூவொரு கடவுளுக்கும் அன்னை மரியாளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. உலகெல்லாம் படைத்து காத்து வழிநடத்தும் உன்னத கடவுளுக்கு திருமகளாகவும், இறைமகள் இயேசுவுக்கு கன்னித் தாயாகவும், தூய ஆவியான கடவுளுக்கு பரிசுத்த பக்தையாகவும் அவர் திகழ்கின்றார்.

அன்னை மரியாள் பல இடங்களில் பல கோணங்களில் தம் பக்தர்களுக்கு காட்சியளித்திருக்கின்றார். அவள் தோன்றிய இடங்களின் பெயர்களை அடைமொழியாக வைத்து மரியாளை அழைப்பது வழக்கம். உதாரணமாக பாத்திமா மாதா, லூர்து மாதா, வேளாங்கண்ணி மாதா, வில்லியனூர் மாதா, மருதமடு மாதா போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதே போன்றதொரு தோற்றம் தான் பனிமய மாதா.

கி.பி. 352 ஆம் ஆண்டு ரோமாபுரியில் வாழ்ந்து வந்த அருளப்பன் என்ற தனவந்தனுக்கும் அதே காலப் பகுதியில் பதவியிலிருந்த லிபேரியன் என்ற திருத்தந்தைக்கும் ஒரே சமயத்தில் அன்னை மரியாள் கனவில் தோன்றி, தனக்கொரு ஆலயம் கட்ட வேண்டும் என்றும் எஸ்களின் மலைக்கு வரும்படியும், அங்கே கோயில் கட்ட வேண்டிய இடத்தைக் காட்டப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படியே அவர்களும் எஸ்களின் மலையை நோக்கி சென்றிருக்கின்றார்கள். அங்கு அவர்கள் கண்ட காட்சி அவர்களை மெய் சிலிர்க்க வைத்துள்ளது. கோடை வெய்யிலிலும் அன்னை பனிமயமாகத் தோன்றி காட்சி தந்திருக்கின்றார்..

அதனைத் தொடர்ந்து எஸ்களின் மலை உச்சியில் மாதாவுக்கென்று ஓர் ஆலயம் எழுப்பப்பட்டது. இதுவே மாதாவுக்கென்று கட்டப்பட்ட முதலாவது ஆலயமாகக் கருதப்படுகிறது. பனிமயமாக தோற்றமளித்ததால் பனிமய மாதா என்றும், எஸ்களின் மலையில் காட்சியளித்ததால் எஸ்கலின் மாதா என்றும் தஸ்நேவிஸ் மாதா என்றும் மாதா அழைக்கப்படுகின்றார்.

பனிமய அன்னைக்கும் பரகுல சமூகத்திற்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்தால்;

பதினைந்தாம் நூற்றாண்டில் கீழைத் தேசங்களுக்கு விஜயம் செய்த போர்த்துக்கேயர் பாமர மக்களை மன மாற்றம் செய்து மதம் மாறச் செய்தனர். அவ்வாறு மதம் மாறிய கிறிஸதவ மதத்தைத தழுவிக் கொண்ட தூத்துக்குடி கரையோர மீனவர்கள அவர்கள் தங்கள் விசுவாசத்தில் நிலைக்கச் செய்ய 1542ஆம் ஆண்டளவில் புனித பிரான்சிஸ் சவேரியார் அங்கு வந்து சேர்ந்தார். அவரது போதனையால் ஈர்க்கப்பட்ட பக்தர்கள் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

இந்த பரதவர்கள் வழிபடுவதற்காகவும் வணக்கம் செலுத்துவதற்காகவும் ஒரு பெண் தெய்வத்தை ஏற்பாடு செய்தால் நல்லது என்று புனித பிரான்சிஸ் சவேரியார் உணர்ந்து தான் பிலிப்பைன்ஸ் நகருக்கு விஜயம் செய்த போது அங்கிருந்த ஒரு கன்னியர் மடத்தில் தான் கண்ட ஓர் அழகான மாதா சுரூபத்தை அவர்களுக்கு வழங்கும்படி பரிந்துரை செய்தார்.

ஆனால் அவர் எவ்வளவோ முயன்றும் அவர் உயிரோடு இருந்த காலத்தில் அவரால் அது கைகூடாமல் போயிற்று. அந்த கன்னியர்களும் அந்த சுரூபத்தை மிகவும் நேசித்ததால் புனித பிரான்சிஸ் சவேரியாரின் விருப்பப்படி அதை பரதவர்களுக்கு வழங்க மறுத்து விட்டனர்.

புனித சவேரியார் அமரத்துவம் அடைந்த பிறகு அந்த மடத்தைச்சேர்ந்தகன்னியர்கள்என்னநினைத்தார்களோ தெரியவில்லை, அன்னையின் திருச் சுரூபத்தை பிலிப்பைன்ஸ் நகரிலிருந்து தூத்துக்குடிக்கு கப்பல் மூலம்



அனுப்பி வைத்தார்கள். பரதவர்களுக்கு சொல்லொனா மகிழ்ச்சி. ஆனந்தத் தாண்டவம் ஆடினார்கள். ஆரத் தழுவிக் கொண்டார்கள். அச்சுரூபத்தை தங்களுக்கு கிடைத்த அரிய பொக்கிஷமாக நினைத்து பூஜித்து வந்தார்கள். அவர்கள் மாதாவை கைவிடவில்லை. கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். மாதாவும் அவர்களைக் கைவிடவில்லை. அதன் பின் அவர்கள் வழிபட 16ஆம் நூற்றாண்டில் தூத்துக்குடியில் ஆலயமொன்று எழுப்பப்பட்டது.

மரியாயின் பக்தர்களில் ஒரு சாரார் புலம் பெயர்ந்து. கொழும்பு வந்து வணிகத்தில் ஈடுபட்டார்கள். குறிப்பிட்ட ஒரு இடம் என்றில்லாமல் வெவ்வேறு இடங்களில் ஒரு சிறிய சுரூபத்தை வைத்துக் கொண்டு, அன்னையின் திருவிழாவை அவர்கள் சிறப்பித்து வந்தார்கள்.

புனித சவேரியார் மத போதனையை கீழைத் தேசங்களில் ஆரம்பித்த காலப்பகுதியான பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து நான்கு நூற்றாண்டுகள் நினைவாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் 1938 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கஸ்பார் கோமஸ் என்பவர் தூத்துக்குடி பனிமய மாதா ஆலயத்தில் கொலு வீற்றிருக்கும் அன்னையின் சுரூபத்தைப் போன்று மற்றுமொரு சுரூபத்தை உருவாக்கி தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து கொழும்பு துறைமுகத்துக்கு அனுப்பி வைத்தார்.

அழகே உருவான அன்னையின் வதனம், இடது கரத்தில் ஏந்தியிருக்கும் பாலன் யேசு, வலது கரத்தில் இருக்கும் அப்பிள் பழத்தை உற்று நோக்கி இடது கை நீட்டி கேட்பது போல் அமைந்திருக்கிறது அந்த சுரூபம். அது கடந்த 86 ஆண்டுகளாக் கொழும்பு புறக்கோட்டை புனித பிலிப்நேரியார் ஆலயத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டு வருகின்றது. கொழும்பில் இயங்கிவரும் மனிமயமாதா சங்கம் பொறுப்பேற்று வருடந்தோறும் விழாவெடுத்துக் கொண்டாடி வருகின்றது.

அந்த அடிப்படையில் இந்த வருடம் 86ஆவது வருடாந்த திருவிழா 02.08.2024 அன்று கொடியேற்றத்துடன் அரம்பமானது. தினசரி ஜெபமாலை பிரார்த்தனை, திருப்பலி என 09.08.2024 வரை இடம்பெறும். 10ஆம் திகதி மாலை வெஸ்பர்ஸ் ஆராதனையும் இடம்பெற்று11ஆம் திகதி திருவிழா கூட்டுத் திருப்பலி இடம் பெறவுள்ளது. அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி ஜேசுதாஸ் அவர்கள் மறையுரைகளை வழங்குகிறார்.

விண்ணக, மண்ணக அரசியாக புனித பிலிப்நேரியார்ஆலயத்தில் கொலு வீற்றிருக்கும் இறைவனின் முதல் கனியான அன்னை மரியாளிடமிருந்து எமக்குத் தேவையான இரக்க கனிகளைப் பெற்றுக் கொள்வோம்.

**ஜெயக்குமார் பெர்னாண்டோ**

# தலவில புனித அன்னம்மாள் திருவிழா









தலவில புனித அன்னம்மாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. சிலாபம் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு விமல் ஜயசூரிய ஆண்டகையின் தலைமையில் ஆயர்கள் அருட்தந்தையர்கள் அருட் சகோதரிகளின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த திருவிழாவில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான விசுவாசிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அன்புச் செயல் புரிய இறைவனின் அழைப்பு

துன்பங்கள் தொடர்ந்து வரும் போது "ஏன்? எது வரை? எவ்வளவு காலம்?" (காண் : திபா. 12) என்பன போன்ற கேள்விகள் எழுவது வழக்கமே. இஸ்ரயேலரும் இதற்கு விதிவிலக்கன்று.

பாலைவனத்தில் இஸ்ரயேலர் இறைவனுக்கும் மோயீசனுக்கும் எதிராக முறுமுறுத்ததும், இறைவன் இவர்களுக்கு மன்னாவும் காடைகளும் அளித்ததும் இந்த ஞாயிறு வாசகமாக அமைகிறது. இந்நிகழ்ச்சியிலே வெறும் புதுமையைக் காண்பதைவிட, இறைவன் தம் மக்களைக் கண்ணும் கருத்துமாய்க் கண்காணிப்பவர், பாதுகாத்து வழிநடத்துபவர் என்பதை உணர முடிகிறது

இஸ்ரயேலரும் பழைய காலத்தை எண்ணி வருந்துகின்றனர். எகிப்து நகர அற்ப மகிழ்ச்சிகளை நினைத்து ஏங்குகின்றனர்.

நமது வாழ்விலும் இது எவ்வளவு உண்மை? ஒரு நொடிப்பொழுது துன்பம் நம்மை எதிர்ப்படும்போது மனம் தளர்கிறோம், இறைவனுடைய நன்மைத்தனத்தில் ஐயப்படுகிறோம். சில வேளை இறைவனையே குறை கூறுகிறோம். பழங்காலத்தை எண்ணி மனம் வருந்துகிறோம். உற்றுழி உதவுபவர் இறைவன் என்பதை மறந்து விடுகிறோம். கணப்பொழுதுத் துன்பத்தைப் பெரிதுபடுத்துகிறோம்.

"நீர் போகும்போதும் உள்ளே வரும்போதும், இப்போதும் எப்போதும் ஆண்டவர் உம்மைக் காத்தருள்வார்' (திபா.121) என்பதை உணர்வதில்லை. இஸ்ரயேலருக்கும் நமக்கும் வேறுபாடு இல்லையே?

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" உதவிடுபவர் நம் இறைவன், "பால்குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத் தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? அவர்கள் மறந்திடினும், நான் உன்னை மறக்கவே மாட்டேன்" (எசா.49 : 1416) என்று கூறியவர் நம் கடவுள்.

தம் பிள்ளைகளாகிய இஸ்ரயேலரின்



கூக்குரலைக் கேட்டு இரங்குகிறார். பசி தவிர்க்க மன்னாவும் உருசியூட்டக் காடைகளும் அளிக்கிறார். தம் மக்கள் துயர் கண்டு தாயாய் வந்து உதவுபவர் நம் கடவுள் என்பதை ஏற்போம். புதுமை செய்தும், பாவிகள், பிணியாளர், பசித்திருப்போருக்கு நல்வாழ்வு அளிப்பவர் நம் கடவுள் என்பதை அறிவோம்.

**ஞாயிறு வாசகம் தரும் சிந்தனை**

"கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று கூறியவர் மட்டுமன்று, கேட்பதைத் தருபவர் நம் கடவுள் என்பதை நம்புவோம். நாம் ஒடுக்கப்பட்ட வேளையிலே ஓடோடி வந்து நமக்கு உதவுபவர் நம் கடவுள் என்பதைத் தெளிவோம்.

அதேவேளையிலே, நாமும் இவ் இறை பண்பை நமதாக்குவோம். இல்லையென வந்தோருக்கு ஈந்தளிப்போம்; துன்பம் என்று வந்தோர் துயர் களைவோம்; பசியென்று வந்தோருக்குப் புசிக்கக் கொடுப்போம்; அபயம் என்று வருபவர்க்கு அடைக்கலம் தருவோம். "நான் பசியாய் இருந்தேன், "நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை " (மத். 25 : 42) என்று நம்மைப் பற்றிக் கூறப்படக் கூடாத நிலையில் நம் வாழ்க்கையை அமைப்போம்.

கிறிஸ்தவ வாழ்வு கிறிஸ்துவின் வாழ்வு. கிறிஸ்தவர்கள் கிறிஸ்து+அவர்கள் என வாழவேண்டும்; கிறிஸ்துவுக்குள் வாழ வேண்டும். "புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள்" (4 : 24);"இயேசு கிறிஸ்துவை அணிந்துகொள்ள வேண்டும்" (உரோ. 13 : 14).

புனிதம் என்பது பாவத்தைக் களைவதில் மட்டுமன்று நேர்வழிப் படுத்துவது, அர்ச்சிப்பது என்பதிலும் அடங்கும் "தூயோராய் இருங்கள். ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர் (லேவி. 19 : 2) என்பது புதுவாழ்வுக்கு நமக்கு விடுக்கப்படும் அழைப்பு எனலாம்.

இப்புது வாழ்வை, புனித வாழ்வை இயேசு "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள் " (லூக். 6 : 36) என்பதன் மூலம் சுட்டிக் காட்டுகிறார். ஆம், கிறிஸ்துவில் புது வாழ்வு என்பது கிறிஸ்து போதித்த, கிறிஸ்து வாழ்ந்து காட்டிய வாழ்வை நாமும் வாழ்வதே. "நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை" (யோ. 15 : 12; 13 : 34) என்பதே கிறிஸ்து நம்மை இப் புதுவாழ்வுக்கு அழைக்க விடுக்கும் சவால்.

ஆகஸ்டில் சிறப்பிக்கப்படும்

# அற்புதம் நிறைந்த புனித மரியாள் பேராலய அர்ச்சிப்புத் திருவிழா

"ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகிறது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக் 1: 47 48)

உரோமை நகரில் ஐந்து பேராலயங்கள் இருக்கின்றன. லாத்தரன் பேராலயம், புனித பேதுரு பேராலயம், புனித பவுல் பேராலயம், புனித லோரன்ஸ் பேராலயம், பெரிய நாயகி பேராலயம் என்பவையே அந்த ஐந்து பேராலயங்களாகும். இந்த ஆலயங்களுள் அன்னை மரியாளுக்கென்று நேர்ந்தளிக்கப்பட்ட பேராலயம்தான் பெரிய நாயகி பேராலயம் பிரதி வருடமும் ஆகஸ்ட் 5ஆம் திகதி அங்கு திருவிழா கொண்டாடப்படுகிறது.

நான்காம் நூற்றாண்டின் மையப்பகுதியில் உரோமையில் யோவான் என்ற அன்னை மரியாளின் பக்தர் ஒருவர் இருந்தார். அவருக்கு மரியாளின்மீது ஆழமான பக்தி இருந்தது.

ஆனால், அவருக்கோ குழந்தை பாக்கியம் இல்லை. எனவே அவர் மரியாளிடம், "அன்னையே! நீர் எனக்கு ஒரு குழந்தையைத் தந்தால், நான் என்னுடைய உடைமைகளை எல்லாம் விற்று உமக்கு ஓர் ஆலயம் கட்டுவேன்" என்று வேண்டினார்.

அவரது வேண்டுதலுக்கு செவி சாய்த்து மரியன்னை அவருக்குக் கனவில் தோன்றி, "நீ நகருக்கு வெளியே உள்ள பணி உறைந்திருக்கும் எஸ்களின் மலையில் ஓர் ஆலயம் கட்டு.நான் உனக்கொரு குழந்தையைத் தருகிறேன்" என்று சொல்லிவிட்டு மறைந்துபோனார்.

கனவில் மரியன்னை சொன்ன இந்த செய்தியைக் கேட்டு யோவான் மிகவும் சந்தோசப்பட்டார். பின்னர் அவர் நம்பிக்கை நிறைந்த உள்ளத்தினராய் அப்போது திருத்தந்தையாக இருந்த லிபேரியசிடம் சென்று, நடந்தது அனைத்தையும் எடுத்துச் சொன்னார்.

அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த திருத்தந்தை பாப்பரசர் அவர்கள் உடனே ஆலயம் கட்டுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு, விரைவில் அந்த ஆலயம் கட்டி முடிக்கப்படவும் உதவி செய்தார்.

திருத்தந்தை லிபெரியஸ், மரியன்னைக்காக ஆலயம் கட்டுவதற்கு உதவிகள் செய்ததற்கு மற்றுமொரு காரணமும் இருந்தது. அது என்னவென்றால், அவருடைய காலத்தில் நொஸ்டோரியஸ் என்ற ஆயர், இயேசு வெறும் மனிதர் மட்டுமே, அவருக்கு இறை தன்மை கிடையாது என்றும் ஆதலால், மரியா மனித இயேசுவுக்கு மட்டும்தான் தாய் என்று சொல்லிவந்தார்.

இந்த சமயத்தில்தான் மரியன்னையின் இக்



காட்சி நிகழ்ந்தது. அதனால் அவர் மரியாள் இறைவனின் தாய் என முழுமையாக நம்பி, அவருக்கு ஆலயம் கட்டியெழுப்பப்பட எல்லா வகையிலும் உதவினார்.

மரியன்னை கனவில் யோவானுக்கு வாக்குறுதி அளித்தது போன்று அவருக்கு ஒரு குழந்தை பிறந்தது. இது நடந்து ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு அதாவது, 431 ஆம் ஆண்டு எபேசில் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது. அதில் மரியாள் இறைவனின் தாய் என பிரகடனம் செய்யப்பட்டது. அதன் பின்னர் சில ஆண்டுகள் கழித்து திருத்தந்தை மூன்றாம் சிக்ஸ்துஸ் என்பவர் பெரிய நாயகியின் பேராலயத்தை புதுப்பிக்கத் தொடங்கினார். அவர் முன்னெடுத்த முயற்சியின் பலனாக அப்பேராலயம் காண்பவரை வியக்கும்படி வானளாவி நிற்கின்றது.

**நோபர்ட் பெர்னாண்டோ**

# SLFP யின் பெரும்பான்மையானோர் ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கின்றனர்

## போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உத்தியோகபூர்வமாக தீர்மானித்துள்ளதாகவும், சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நிறைவேற்று சபையின் 90 வீதமானோரின் இணக்கப்பாட்டுடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பலமான வலையமைப்பு ஏற்கனவே செயற்பட ஆரம்பித்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (05) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண இதனைக் குறிப்பிட்டார். மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்:

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உத்தியோகபூர்வமாக தீர்மானித்துள்ளது.

அந்த தீர்மானத்தை எமது கட்சியின் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் செயலாளர் நாயகம் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட கட்சியின் அதிகாரிகள் மட்டுமன்றி சு.கவை பிரதிநிதித்துவப்படுத்தி பொதுஜன பெரமுனவின் கீழ் பாராளுமன்றத்திற்கு தெரிவான 14 உறுப்பினர்களில் 08 உறுப்பினர்கள் இந்த தீர்மானத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு நிறைவேற்று சபையிலுள்ள 90 வீத உடன்பாட்டுடன் இந்த முடிவு எடுக்கப்பட்டது . எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பலமான ஏற்பாட்டு வலையமைப்பு தற்போதே தீவிரமாக செயற்பட ஆரம்பித்துள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

(06.08.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
சொந்த தொழிலில் புதிய வாடிக்கையாளர்களும் வந்து இணைவர். நினைத்த காரியங்களை தீவிர முயற்சியுடன் செய்து முன்னேறுவீர்கள்.

**ரிஷபம் :**
சொந்த தொழிலில் புதிய வாடிக்கையாளர்கள் வருகையும் அவர்களால் பொருளாதார முன்னேற்றமும் உண்டு.

**மிதுனம்:**
சொந்தத் தொழிலில் பரபரப்பாக வேலை நடைபெறும். ஓய்வின்றி உழைப்பீர்கள். எதிர்பார்க்கும் பணம் கைக்கு வந்து சேரும்.

**கடகம்:**
உறவினர்களிடமும் நண்பர்களிடமும் சுமூகமாக நடந்து கொள்வீர்கள். வெளிநாட்டு தகவலில் மகிழ்ச்சி ஏற்படும்.

**சிம்மம்:**
அவசரமாக செய்து முடிக்க வேண்டிய காரியங்களை திட்டமிடுவீர்கள். முக்கிய நண்பர்களின் துணை கொண்டு கடினமான பணிகளை செய்து முடிப்பீர்கள்.

**கன்னி:**
பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். சகல விடையங்களிலும் அதிக கவனம் செலுத்துவது நல்லது.

**துலாம்:**
அலுவலகத்தில் தங்கள் எதிர்பார்ப்புகளை அடைவதில் சிக்கல் ஏற்படலாம். செய்யும் காரியங்களில் கவனமும் நிதானமும் தேவை.

**விருச்சிகம்:**
வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்களில் நிதானமான முடிவை எடுங்கள்.

**தனுசு:**
சொந்தத் தொழிலில் எதிர்பார்க்கும் ஆதாயம் கிடைக்கும். வரவேண்டிய தன வரவுகள் தாமதம் இல்லாமல் வந்து சேரும்.

**மகரம்:**
எதிர்பார்க்கும் பண வரவு குறித்த காலத்தில் வந்து சேரும். எதிர்பார்த்திருந்த கடன் உதவியும் கிடைத்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:**
எதிர்பார்த்த பண வரவும் அலுவலகத்தின் மூலம் கிடைக்கப்பெறும். முயற்சியுடன் செயல்பட்டு காரியங்களில் வெற்றி அடைவீர்கள்.

**மீனம்:**
அனேக காரியங்களில் தீவிரமாக முயற்சி செய்தாலும் சில வற்றிலேயே எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்கும்

## கட்டுப்பணம் செலுத்தினார்...

வேட்பாளராக போட்டியிடுகிறார். பீல்ட் மார்ஷல் சார்பில் தொழிற்சங்கவாதியான தம்மிக்க ரத்னாயக்க தேர்தல்கள் செயலகத்தில் நேற்று கட்டுப்பணம் செலுத்தினார்.

சரத் பொன்சேக்கா தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கிறார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக போட்டியிட்டு இவர், தோல்வியடைந்தார்.

## டயனாவுக்கு எதிரான...

சூரசேன, யசந்த கோதாகொட மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது. அதன்பின், 03 பேர் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகளின் உடன்பாட்டின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட மனுவை தள்ளுபடி செய்ய முடிவு செய்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வெலிகம முன்னாள் மேயர் ரெஹான் ஜயவிக்ரமவினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## தபால் மூல வாக்களிப்பு...

நிறைவடைவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது. எனினும் நேற்றைய தினம் அதற்கான காலம் எதிர்வரும் (090 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணத்தை பொறுப்பேற்கும் காலம் ஜூலை 26 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 14ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வழங்கப்பட்டுள்ளது.

அதே வேளை,ஆகஸ்ட் 15 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் முற்பகல் 11:30 மணிவரை வேட்புமனு தாக்கல் இடம் பெறவுள்ளது.

அந்த காலத்துக்குள்ளேயே ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## வட்டி வீதத்தை திருத்துவதற்கான தீர்வு...

பணிக்கொடை அல்லது வங்கி வைப்புத்தொகை போன்றவற்றில் பெறப்படும் நிலையான வட்டியே. கடன் பெற்றவர்கள் கடந்த காலங்களில் வங்கி வட்டி வீதத்தை குறைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்கமைவாக வங்கி வட்டி வீதமும் கடன் வட்டி வீதத்தை குறைக்கும் போது குறைவடைந்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

கடந்த காலங்களில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்ட போது அரசாங்கம் குறிப்பிட்ட சதவீத வட்டியை சேர்த்து சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்கியது. அதன்படி, ஒருபுறம், வங்கிகளுக்கு 88 பில்லியன் ரூபாய் செலுத்த வேண்டியுள்ளது, மறுபுறம், கிட்டத்தட்ட 15 லட்சம் கணக்கு வைத்திருப்பவர்கள் வட்டி விகிதத்தைக் குறைப்பதில் சிக்கலை எதிர்கொண்டனர்.

ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி இப்பிரச்சினைக்கு திறைசேரி வழங்கக்கூடிய பதில் தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கை,ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் சாதகமான பதில் வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டை...

கல்லடி கடற்கரையில் வைத்து கைது செய்யப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பில் தனியார் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சாணக்கியன், தமது நற்பெயருக்கு களங்கம் விழைவிக்கும் வகையில் பேசியுள்ளார். சம்பவம் நடந்த போது நான் அங்கு இருந்ததாகவும் இலஞ்ச, ஊழல் அதிகாரிகள் வந்தபோது அங்கிருந்து முச்சக்கர வண்டியொன்றில் தப்பிச் சென்றதாகவும் பொய் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். இதன்மூலம் சாணக்கியன் அரசியல் இலாபம் காண துடித்து வருகிறார். எவரிடமும் தாம்,இலஞ்சம் வாங்கவில்லை.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் கடமையில் இருக்கும்போது அவ்விடத்தில் தாம், இருக்கவில்லை. தனது மெய்ப்பாதுகாவலர் மூலம் அதனை நிரூபிக்க முடியுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சாணக்கியனின் குற்றச்சாட்டை நிரூபித்தால் பதவி விலக தாம்,தயார். நிரூபிக்காவிட்டால் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அரசியலிலிருந்து விடை பெறுவாரா? என பகிரங்க சவால் விடுப்பதாகவும் அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

## பிரதமர் பதவியை இராஜினாமா செய்த...

தாக்குதலில் 200 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பொலிஸாரை ஏவி போராட்டக்காரர்களைக் கொன்றதற்கு நீதி கேட்டு ஞாயிற்றுக்கிழமை பல்லாயிரக்கணக்கான மாணவர்கள், பங்களாதேஷ் தலைநகர் டாக்காவின் மத்திய சதுக்கத்தில் குவியத் தொடங்கினர். மேலும், பல்வேறு நகரங்களிலும் பங்களாதேஷில் போராட்டங்கள் வெடித்தன.

பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டுமென்று கோரிக்கை விடுத்த போராட்டக்காரர்கள், இனி மக்கள் யாரும் அரசுக்கு வரி செலுத்தக் கூடாது என்றும், அரசு ஊழியர்கள் மற்றும் மற்றும் ஜவுளித் துறை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் மேற்கொள்ள வேண்டுமென்றும் நாடு தழுவிய ஒத்துழையாமை போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர்.

கட்டடங்கள், வாகனங்களுக்கு போராட்டக்காரர்கள் தீவைத்தனர். போராட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் எறி குண்டுகளை வீசினர். போராட்டக்காரர்களும் பொலீஸார் மீது பதில் தாக்குதல் நடத்தினர். நேற்று முன்தினம் போராட்டத்தில் மட்டும் 94 பேர் உயிரிழந்தனர். இதன் காரணமாக இதுவரை போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300 ஐ கடந்துள்ளது. முப்படை தளபதிகள், காவல் துறை தலைவர் உட்பட பல்வேறு பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்து நேற்று ஆலோசனை நடத்திய பிரதமர் ஷேக் ஹசீனா “அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் மாணவர்கள் இல்லை. அவர்கள் தீவிரவாதிகள். நாட்டை சீர்குலைக்கும் நோக்கில் இந்தப் போராட்டத்தில் அவர்கள் இறங்கியுள்ளனர். மக்கள் இந்த நாச வேலையை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும்” என தெரிவித்தார். பிரதமர் ஷேக் ஷசீனா பதவி விலக வலியுறுத்தி மாணவர்கள் போராட்டம் தீவிரமடைந்ததுடன், நேற்று முன்தினம் நாடு தழுவிய ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. இணைய சேவையும் முடக்கப்பட்டது. அதோடு, 03 நாள் தேசிய விடுமுறையும் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், தலைநகர் டாக்கா நோக்கிய பேரணியை மாணவர்கள் தீவிரப்படுத்தினர். இதனால், போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் நேற்று திங்கள் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பல்வேறு நகரங்களில் இருந்தும் டாக்கா வந்தடைந்த மாணவர்கள், பிரதமர் ஷேக் ஹசீனாவின் மாளிகைக்குள் நுழைந்தனர். இதனால் அங்கு நிலைமை பதற்றம் நிறைந்ததாக மாறி இருக்கிறது.

இதனிடையே, பங்களாதேஷில் இராணுவத் தலைமைத் தளபதி மற்றும் அரசியல் தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொண்ட ஷேக் ஹசீனா, பிரதமர் பதவியை இராஜினாமா செய்துள்ளார். மேலும், பாதுகாப்பு கருதி அவர் அங்கிருந்து வெளிநாட்டுக்கு ஹெலிகாப்டரில் புறப்பட்டுவிட்டதாகவும் தகவல் வெளியாகியது. இந்நிலையில் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்றிய இராணுவத் தலைமை தளபதி வாக்கர் உஸ் ஜமான், “இடைக்கால அரசை இராணுவம் அமைக்கும். அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதன் பின்னணியில் இருந்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள்” என தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் தேசிய கட்சி, ஜதியா கட்சி, ஜமாத் இ இஸ்லாமி உள்ளிட்ட அரசியல் கட்சிகளுடன் ராணுவத் தளபதி ஆலோசனை மேற்கொண்டிருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

## வேறு வாக்களிப்பு நிலையங்களில்...

குழு அறிவித்துள்ளது. வாக்காளர் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு மாறாக வேறொரு நிலையத்தில் எவரும் வாக்களிக்க முடியாதெனத் தேர்தல்கள் ஆணைக்குழு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது .

ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு நாட்டின் எந்தவொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்களிப்பதற்குரிய வசதி செய்யப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் எந்தவொரு உத்தியோகபூர்வ தீர்மானமும் அல்லாத, முற்றிலும் உண்மைக்குப் புறம்பான விடயங்களை உள்ளடக்கிய பிழையான ஒரு செய்தி ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் வெளிவந்துள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளரின் முகவரிக்கு வாக்காளர் பெயர், வாக்களிக்கக்கூடிய வாக்கெடுப்பு நிலையம், தேர்தல் நடைபெறும் திகதி, நேரம் என்ற விபரங்கள் குறிப்பிடப்பட்ட உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்று தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

குறிப்பிடப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்துக்குப் புறம்பான வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அறிவிப்பு அல்லாத உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்து ஊடகங்களுக்கும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.இவ்வாறான உண்மைக்குப் புறம்பான செய்திகளுக்கு ஏமாந்துவிடாமல் வாக்காளர் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்துக்கு சென்று வாக்களிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க கேட்டுள்ளார்.

## இலங்கையை உண்மையான அணிசேரா...

சொல்வது கடினமான கேள்வியாகத்தான் இருக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.உண்மையான அணிசேரா நாடாக இலங்கையை கொண்டு செல்லும் திறமை ஜனாதிபதிக்கே உண்டென்றும் அவர் குறிப்பிட்டார்.

இரத்தினபுரி பதிய நகரில் அண்மையில் நடைபெற்ற அறிவுசார் மன்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே சுசீஸ்வர பண்டார இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

இதுபற்றி மேலும் குறிப்பிட்ட அவர்;

சுதந்திரமடைந்த நாள் முதல், அணிசேரா நாடு என்று சொல்லிக் கொள்ள விரும்பினாலும் ஒரு பக்க அல்லது மற்றொறு சார்பான சமச்சீரற்ற நிலைப்பாட்டுடனேயே செயல்பட்டு வந்தோம். நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் சிலர் அமெரிக்க சார்புடையவர்கள், சிலர் சீன சார்பு மற்றும் சிலர் இந்திய வழியில் செயல்பட்டனர். எனினும், முதல் தடவையாக நாம் எந்த பக்கமும் சாராது சமச்சீரான நிலைப்பாட்டுடன் செயல்பட்டுவருகிறோம்.

தற்போது நாம் சர்வதேச அரங்கில் முதற் தடவையாக எந்த பக்கமும் சார்பின்றி சமச்சீரான நிலைப்பாட்டில் செயல்பட்டுவருகிறோம்.

தனது அமைப்பான நவ ஜனதா பெரமுனவின் கொள்கைகள் குறித்து கருத்து தெரிவித்த சுசீஸ்வர பண்டார, பசுமைப் பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகப்படுத்துவதற்கு தமது கட்சி முழுமையாக அர்ப்பணிப்புடன் இருப்பதாகத் தெரிவித்தார். பசுமைப் பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றவில்லை என்றால் எதிர்காலம் இல்லையென்றும் நவ ஜனதா பெரமுனவின் தலைவர் சுசீஸ்வர பண்டார மேலும் கூறினார்.

## மெனிக்திவெல மத்திய கல்லூரி மாணவரின்...

முன்வைத்த கோரிக்கையை உடனடியாக நிறைவேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் பிரகாரம் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, துறைமுக நகரம், மத்திய வங்கி, பாராளுமன்றம் உள்ளிட்ட கொழும்பை சுற்றியுள்ள கல்வியுடன் முக்கிய தொடர்புள்ள விசேட இடங்களை பார்வையிடும் வாய்ப்பு பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மெனிக்திவெல மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் சுமார் 570 மாணவர்கள் நேற்று (05) களப்பயணத்தில் இணைந்திருந்ததோடு அவர்களுக்கு ஜனாதிபதி மாளிகையை பார்வையிடவும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி அலுவலகத்துக்கு வருகை தந்து தங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க வாய்ப்பளிக்குமாறு மாணவர்கள் கோரினர்.

கடுமையான வேலைப் பழு இருந்த போதும் மாணவர்களைப் புறக்கணிக்காமல் அவர்களைச் சந்தித்த ஜனாதிபதி, அவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடியதுடன் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

ஸ்மார்ட் வகுப்பறையொன்றை தமது பாடசாலைக்கு வழங்குமாறும், விளையாட்டு மைதானத்தை நவீனமயப்படுத்துமாறும் மாணவர்கள் விடுத்த கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, அதற்கான பணிகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். இராணுவத்தினரின் பங்களிப்புடன் கல்லூரியின் மைதானத்தை நவீனமயப்படுத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

கல்லூரியில் விளையாட்டுத் துறையில் திறமை செலுத்தும் சிறார்களையும் ஜனாதிபதி இதன் போது பாராட்டினார். பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாணவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

இதேவேளை, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவையும் மாணவர்கள் சந்தித்து சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டனர்.

## கொழும்பு தமிழ் ...(03ஆம் பக்கம் தொடர்ச்சி)

தளத்தில் வரதர்'' எனும் தலைப்பில் வெயாங்கொடை சியன தேசிய கல்விக் கல்லூரி விரிவுரையாளர் சிவகுருநாதன் கேசவன் உரை நிகழ்த்தவுள்ளாரென சங்கத்தின் பொதுச்செயலாளர் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன்தெரிவித்துள்ளார்.

## தேர்தல் அலுவல...(03ஆம் பக்கம் தொடர்ச்சி)

தொடர்பாக தகராறு , சட்டவிரோதமாக சுவரொட்டிகளை ஒட்டுதல் ஆகிய மூன்று சம்பவங்கள் குறித்தே இவ்வாறு முறைப்பாடு கிடைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

## அனுராதபுரம் ... (03ஆம் பக்கம் தொடர்ச்சி)

குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு முன் பிணை மனு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அதனை நிராகரிப்பதாகவும் நீதவான் தெரிவித்தார்.

முன் பிணை மனுவை நிர்ணயிக்கும் போது நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட வேண்டிய சட்ட நிபந்தனைகள் குறித்து, நீண்ட விளக்கமளிக்கும் போதே நீதவான் இவ்வாறு தெரிவித்தார். அவர் கைது செய்யப்பட்டால் அவரை பிணையில் விடுவிக்க குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிடுமாறு அநுராதபுரம் முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மகாநாம சிரேஷ்ட சட்டத்தரணி உபாலி ஜயமான்ன மூலமே கோரிக்கையயை விடுத்திருந்தார். இந்த முன் பிணை மனுவை பரிசீலித்த போது, அநுராதபுரம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் கார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில், இதுவரை சந்தேக நபர் எவரும் அடையாளம் காணப்படவில்லையென குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்தது.

## தனமல்விலவில் ...(03ஆம் பக்கம் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## எமது அரசியலை ... (03ஆம் பக்கம் தொடர்ச்சி)

அமைய அவற்றை முன்னெடுக்க வேண்டும். எவ்வாறாயினும் எமது நாட்டு அரசியலை அந்த நாட்டில் முன்னெடுப்பது எந்தளவு பிரயோசனமானது என்பது புரியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தெங்கு செய்கை ... (03ஆம் பக்கம் தொடர்ச்சி)

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவின் தலைமையில் நேற்று (05) விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

வெற்றிகரமான உற்பத்தி மற்றும் அதிக அறுவடை போன்றவற்றில் விவசாயிகள் எதிர்கொள்ளும் நோய்கள் தொடர்பான அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வழங்க, இந்த தொலை பேசி எண் மற்றும் Coconut App செயலியையும் பயன்படுத்த முடியும்.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மும்மொழிகளிலும் தமது பிரச்சினைகளுக்கான பதில்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான தென்னை உற்பத்தியாளர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் இன்று எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை தெங்கு செய்கையில் பரவும் பல்வேறு நோய்கள் தொடர்பானதாகும். குறிப்பாக வெள்ளை ஈ ,சிவப்பு வண்டு, கறுப்பு வண்டு மற்றும் வெலிகம தென்னை இலை நோய் போன்ற நோய்கள் பிரதானமானவை என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

தென்னை அறுவடைக்கு ஏற்றவகையில் உரங்கள் முறையாக இடுவதில்லை. தற்போது நாட்டில் வருடாந்தம் 3,000 மில்லியன் தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த தொகையை 3,600 மில்லியனாக அதிகரிப்பதே எமது இலக்காகும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த இலக்கை அடைய தொழில்நுட்பத்துடன் கூடிய வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.


## தமிழக மீனவர்களின் (03ஆம் பக்கம் தொடர்ச்சி)

உடனடியாக மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து மனு அளிக்க நேற்று தமிழக மீனவ பிரதிநிதிகளுடன் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை டெல்லி செல்கிறார். அவருடன் இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் பகுதிகளை சேர்ந்த மீனவ பிரதிநிதிகள் செல்கின்றனர்.

# சமனலவெவ நீர்த்தேக்கத்தில் நீராட சென்றவர் சடலமாக மீட்பு

## கொரியா செல்லவிருந்ததாக தகவல்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**



சமனலவெவ நீர்த்தேக்கத்தில் நீராடிக் கொண்டிருந்த நபரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

வென்னப்புவ கொலின்ஜாடிய பிரதேசத்தைச் சேர்ந்த யூ.எல்.கமல் பிரசாந்த என்ற 29 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வெளிநாடு செல்வதற்காக கொரிய மொழி பயின்று பரீட்சையில் சித்தியடைந்த மகிழ்ச்சியில் உல்லாசப் பயணம் சென்ற போதே இச்சம்பவத்துக்கு முகம்கொடுத்துள்ளார்.

இவருடன் சென்ற அனைவரும் நீராடிக் கொண்டிருந்த போது திடீரென இவரைச் காணவில்லையென தேடிய போதே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை சமனலவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீட்டின் கீழ், அப்புத்தளை, போவே தோட்ட பாதைச் சீர்திருத்தப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரை தோட்ட மக்கள் வரவேற்பதையும், அவர் அடிக்கல் நாட்டுவதையும் படங்களில் காணலாம்.

**படம் ஊவா சுழற்சி நிருபர்**

## மலைச்சாரல்

# ஸ்ரீ தலதாமாளிகையின் முதலாவது கும்பல் பெரஹரா 10ஆம் திகதி ஆரம்பம்

**அக்குறணை குறூப் நிருபர்**



கண்டி ஸ்ரீ தலதாமாளிகை மற்றும் நான்கு தேவாலயங்களின் எசல பெரஹரா வைபவங்கள் நேற்று ஆரம்பமாகின.

கப் நடுதல் என்ற சம்பிரதாயத்தையடுத்து பெரஹரா உள் வீதியில் வலம்வருதல் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாத்த தேவாலயம், விஷ்ணு தேவாலயம், கதிர்காம தேவாலயம், பத்தினி தேவாலயம் ஆகிய நான்கு தேவாலயங்களின் ஏற்பாட்டில் கப் நடுதல் அதிகாலை 4.10 மணிக்கான சுப நேரத்தில் ஆரம்பமாகியது. கப் நடுதலுக்கான பூஜைப்பொருட்கள் அளுத்நுவர தேவாலயத்திலிருந்து ஊர்வலமாக கண்டிக்கு கொண்டுவரப்பட்டன.

கப் நடுதலை அடுத்து 5 தினங்களுக்கு உற் பெரஹரா உள்புற வீதியில் வலம் வரும். அதனையடுத்து முதலாவது கும்பல் பெரஹரா எதிர்வரும் 10ஆம் திகதி வெளிவீதி உலாவரும். இதுவும் ஐந்து நாட்களுக்கு நடைபெறும். அதனையடுத்து ஐந்து தினங்களுக்கு முக்கிய பெரஹராவாகக் கருதப்படும் ரந்தோலி பெரஹரா ஊர்வலங்கள் நடைபெறும். கண்டி பெரஹரா ஏற்பாடுகளை அடுத்து கண்டி நகரம் களைகட்டி வருகிறது.

# இராணுவ தளபதியின் தலைமையில் கமாண்டோ வீரர்களின் விடுகை அணிவகுப்பு




கமாண்டோ பாடநெறி 51 இன் விடுகை அணிவகுப்பு அண்மையில் ஊவ குடா ஓயா கமாண்டோ படையணி பயிற்சி பாடசாலையில் இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேயின் தலைமையில் நடைபெற்றது.

இந்த விடுகை அணிவகுப்பில், ஏறக்குறைய ஒரு வருட கடினமான பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த 06 அதிகாரிகள் மற்றும் 125 சிப்பாய்கள் கபிலநிற தொப்பிகளை அணியும் வாய்ப்பை பெற்றுக் கொண்டனர்.

இப்பாடநெறியில் சிறந்த கமாண்டோ விருதை லெப்டினன் ஜி.சி.டி காரியவசம் பெற்றுக்கொண்டதுடன் சிறந்த துப்பாக்கி சுடும் வீரர் விருது லெப்டினன் ஈ.டி.சி.டி. சொய்சாவுக்கும் சிறந்த உடற்தகுதி விருது சிப்பாய் பீ.கே.கே.எஸ். குமாருக்கு வழங்கப்பட்டது.

இவ்விடுகை அணிவகுப்பு இசைக்குழுக் கண்காட்சி, கயிறு ஏறுதல் காட்சி, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை காட்சி, கமாண்டோ கே9 நாய்கள் கண்காட்சி மற்றும் திறந்த பரசூட் கண்காட்சி ஆகிய காண்காட்சிகளால் வண்ணமயமாக்கப்பட்டதுடன் இந் நிகழ்வில் இராணுவ அதிகாரிகள், பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்த அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களின் பெற்றோர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் பலர் பங்குபற்றினர்.

# நுவரெலியா மாநகர சபைக்கு வரிப்பணம் செலுத்த தவறியவர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை



நுவரெலியா மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய வரி பணத்தை செலுத்தாதவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யப் போவதாக நுவரெலியா மாநகர சபை பகிரங்க அறிவித்தலை விடுத்துள்ளது.

நுவரெலியா மாநகரசபை ஆணையாளரின் உத்தரவின் பேரில் இந்த விசேட அறிவித்தல் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் இந்த விசேட அறிவித்தலில் நுவரெலியா மாநகர சபைக்கு வரி பணம் செலுத்த தவறியவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த (30.06.2024) வரையான காலப்பகுதிக்குள் அரசாங்க சொத்துக்களிலிருந்தும், தனியார் சொத்துக்களில் இருந்தும் நுவரெலியா மாநகர சபைக்கு ரூ. 15,614,400.21 வரி பணம் வந்து சேர வேண்டுமென மாநகர சபை கணக்காளர் பிரிவுக்கு பொறுப்பான பிரதான கணக்காளர் தெரிவித்தார்.

அதேநேரம் மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய வரி பணத்தை வரி செலுத்த கூடியவர்கள் உரிய முறையில் செலுத்த தவறும் பட்சத்தில் மாநகர சபையின் ஆணையாளரின் அதிகாரத்திற்கு அமைய பொது மக்கள் பார்வைக்காக இந்த விசேட அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் மாநகர சபைக்கு வரி செலுத்த தவறியவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக வரி பணத்தை செலுத்தி தங்களது சொத்துக்களை காப்பாற்றி கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்வதாகவும் மாநகர சபை கணக்காளர் பிரிவு தெரிவித்துள்ளது.

# கண்டியில் சமாதான நீதவான் நியமனம்



கண்டி அலவத்துகொடையைச் சேர்ந்த மதார் இராசலிங்கம் அருனலிங்கம், அகில இலங்கை சமாதான நீதவானாக, மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில், நீதவான் நாமல் பெரேரா முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஊடகவியலாளரான இவர், ஊடக விபூசனம் கௌரவ நாமத்தையும் பெற்றுள்ளதோடு சிறந்த சமூக சேவையாளராகவும் திகழ்கின்றார்.

இராசலிங்கம் அருனலிங்கம், இலங்கை மனித உரிமைகள் அமைப்பிலும், சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணியமைப்பின் உறுப்பினராகவும் செயற்படுவதுடன், அலவத்துகொடட இந்து நற்பணி மன்றத்தின் செயலாளராகவும், தேர்தல் கண்காணிப்பு நிறுவனமொன்றின் தேர்தல் கண்காணிப்பு உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**மாத்தளை சுழற்சி நிருபர்**

# காரின் மீது மரம் முறிந்து வீழ்ந்து விபத்து



பதுளை நகரின் கெப்பெட்டிபொல மாவத்தையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் காரின் மீது பாரிய மரமொன்று வீழ்ந்ததில் காருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதோடு வீதியில் வாகனங்கள் செல்வதற்கும் இடையூறு ஏற்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (04) பிற்பகல் பெய்த அடைமழையுடன் பதுளை கெப்பெட்டிபொல மாவத்தை வீதிக்கு அண்மித்த வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மீது இடிந்து விழுந்துள்ளதுடன், அப்போது காரில் எவரும் இல்லாததால், யாருக்கும் காயம் ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

# காளான் வளர்ப்பு, சந்தைப்படுத்தலுக்கு நிதியுதவி

**தலவாக்கலை குறூப் நிருபர்**

பெண்களுக்கான சுய தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், அவர்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கான பொருளாதார ரீதியான தீர்வுகளை பெற்றுக்கொள்ள மற்றும் பெண் தலைமைத்துவ சிறு வியாபாரங்களை ஊக்குவித்தல் எனும் கருப்பொருளில் 'விழித்தெழு பெண்ணே' கனடா அமைப்பினால் தெரிவு செய்யப்பட்ட 30 பெண்களுக்கு காளான் வளர்ப்பு மற்றும் சந்தைப்படுத்தலுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் இணைப்பு செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ், இந்நிகழ்வுக்கான செயற்றிட்ட அதிகாரி செல்வி. கனிஷ்டா மைக்கல் ஆகியோர் கலந்து கொண்டு காசோலைகளை வழங்கி வைத்தனர்.



# பாடசாலை கல்வியில் விரைவில் மனித உரிமைகள் பாடநெறி

பாடசாலை மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் புதிதாக 'மனித உரிமைகள்' தொடர்பான பாடநெறியை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

'மனித உரிமைகள்' தொடர்பான பாடத்திட்டத்தை பாடசாலைக்கல்வித் திட்டத்தில் இணைத்துக்கொள்வதற்கு ஆவன செய்யுமாறு பெரிய பிரித்தானியாவை வதிவிடமாகக் கொண்ட தேச இலங்கையரின் கோரிக்கைகமைய மேற்படி விடயத்தை எழுத்துமூலம் கல்வியமைச்சின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அதற்கான காத்திரமான பதிலை கல்வியமைச்சின் பணிப்பாளர் ஏ.கே.பி.கே. பெரேரா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். இலங்கை பாடசாலை மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பான பாடத்தை இணைத்துக்கொள்வது மிகவும் அத்தியாவசியமானது எனக் குறிப்பிட்டுள்ள இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் இது குறித்து பாடசாலை பாடத்திட்ட சீர்திருத்த நடவடிக்கையின் போது கருத்தில் கொள்ளப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.




# கல்வி புரட்சிமூலமே மலையகத்தில் நிலையானதொரு சமூக மாற்றம்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

கல்வி புரட்சிமூலமே மலையகத்தில் நிலையானதொரு சமூக மாற்றத்தை ஏற்படுத்தலாம் என உறுதியாக நம்புகின்றோம். எனவே, மலையக கல்வி அபிவிருத்திக்கு நாம் என்றும் துணை நிற்போம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டி, மஹியாவ கலைமகள் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு உட்கட்டமைப்பு கையளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு,

"மஹியாவ கலைமகள் வித்தியாலயமானது வரலாற்று சிறப்புமிக்க பாடசாலையாகும். கண்டி நகர எல்லைக்குள் உள்ள மூன்று தமிழ்ப் பாடசாலைகளில் கலைமகள் வித்தியாலயத்துக்கென தனி சிறப்பு உள்ளது. இக்கல்லூரியின் அதிபர், எனது ஆசான் திரு சபாபதி அவர்கள், பலருக்கு கல்வி கண் திறந்தவர். மிகவும் சிறப்பாக கல்வி அமுதூட்டி பல நற்பிரஜைகளை சமூகமயப்படுத்தியவர், எனது வாழ்விலும் அவர் மறக்க முடியாத நபர். இன்று நான் சிறந்த நிலையில் இருப்பதற்கு அவர் கற்றுதந்த கணித பாடமும் பெரிதும் கை கொடுத்தது. அவரின் வழிகாட்டுல்தான் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெறமுடிந்தது.

மிகவும் தலைசிறந்த ஆசானான அவர், ஒரு அதிபராக சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி, இப்பாடசாலையில் பல மாற்றங்களை ஏற்படுத்திவருகின்றார். பாடசாலையின் சாதாரணதரம் மற்றும் உயர்தரப்பரீட்சை பெறுபேறுகள் திருப்தியடையக்கூடிய வகையில் உள்ளது. பாடசாலை நிர்வாகமும் சிறப்பாக நடைபெறுகின்றது. கலை நிகழ்வுகள், வலய, மாகாண மற்றும் தேசிய மட்ட போட்டிகளிலும் பங்கேற்று திறமையை மாணவர்கள் வெளிப்படுத்திவருகின்றனர்.

அதேபோல இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர் சிறந்த முன்னுதாரணத்தை சமூகத்துக்கு வழங்கி வருகின்றனர். இத்திட்டத்துக்குரிய நிதி உதவியை அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனையின் பிரகாரம் நாம் வழங்கி இருந்தாலும் பழைய மாணவர்களின் அர்ப்பணிப்பால் அந்த நிதிக்கும் மேலதிகமாக நிதி திரட்டி சேவைகளை செய்து, திட்டத்தை பூரணப்படுத்தியுள்ளனர். அவர்களுக்கு நன்றி கலந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

# கிழக்கின் குரல்



## திருகோணமலை மக்களுடன் ஜனாதிபதி சந்திப்பு





(தம்பலகாமம் குறூப் நிருபர்)

திருகோணமலை மக்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் (04)திருகோணமலை நகராட்சி மன்ற பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்போது வரலாற்று சிறப்புமிக்க திருக்கோணேஸ்வர ஆலய விவகாரம், மக்களுடைய காணிகள் விடுவிப்பு, மக்கெய்சர் விளையாட்டு அரங்கு தொடர்பான பல பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. இக் கலந்துரையாடலில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் மற்றும் அரசியல் பிரமுகர்கள் உட்பட 400 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திராய்க்கேணியில் படுகொலை செய்யப்பட்ட 54 பேரின் 34 ஆவது நினைவு தினம் இன்று

(காரைதீவு குறூப் நிருபர்)



அம்பாறை மாவட்டத்திலுள்ள திராய்க்கேணியில் 54 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் (06) 34 வருடங்கள் ஆகின்றன.

1990 ஆண்டு, ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி திராய்க்கேணி, ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வைத்து 54 தமிழ் மக்கள் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களில் கணவர்மாரை இழந்த 40 விதவைமார்களும் உள்ளடங்குகின்றனர்.

அதன்படி, திராய்க்கேணியில் படுகொலை செய்யப்பட்டோருக்கான 34 ஆவது வருட நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுவதுடன், உயிரிழந்தோரின் ஆத்ம சாந்திக்காக இன்று விசேட பூஜை வழிபாடுகளும் நடத்தப்படுகின்றது.

இச்சம்பவத்தில், உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென, தமிழ் அரசியல்வாதிகள் கோரி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## உள்நாட்டு துப்பாக்கிகளுடன் இருவர் கைது

திருகோணமலை, ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் இரு சந்தேக நபர்கள் கந்தளாய் இலஞ்ச ஊழல் தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் (04) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கந்தளாய் இலஞ்ச ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈச்சலம்பற்று பகுதியில் வசிக்கும் 45 மற்றும் 46 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்களிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு பயிர்விதை பொதிகள் வழங்கிவைப்பு



(பாலமுனை தினகரன் நிருபர்)

விவசாய அமைச்சினால், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், அட்டாளைச்சேனையில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பாசிப்பயறு, உழுந்து போன்ற விதைகள் அடங்கிய பொதிகள் நேற்று (05) வழங்கி வைக்கப்பட்டன.

நடைமுறைப்படுத்தப்படும் பயறு மற்றும் உழுந்து பயிர்ச் செய்கைக்கான திட்டத்தின் கீழ், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பீ.ரீ.எம்.இர்பான் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில், நிர்வாக உத்தியோகத்தர் கே.பி.சலீம், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட், விவசாய போதனாசிரியர்கள், பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரிவுக்கு பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து

## அம்பாறையில் நடைபெற்ற பிரமாண்ட மக்கள் சந்திப்பு







எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவிக்கும் பிரமாண்ட மக்கள் சந்திப்பொன்று, நேற்று (05) அம்பாறை மாவட்டத்தின் காரைதீவில் நடைபெற்றிருந்தது.

அம்பாறை மாவட்ட கிளையின் ஏற்பாட்டில், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் அழைப்பையேற்று, கடந்த ஜூன் மாதம் 23 ஆம் திகதி, மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு கட்சியின் தலைமை காரியாலயத்திற்கு சென்றிருந்தபோது, கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடியயதுடன், ஆதரவாளர்களையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்நிலையிலேயே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கான ஆதரவை தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி அறிவித்திருந்தது.

அதன்படி, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், அமைப்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் கிராமங்களை ஒன்றிணைத்து பிரமாண்டமான மக்கள் சந்திப்பொன்றை, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மைய கிளை திருக்கோவில் பிரதேசத்தில் திறந்துவைப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



அம்பாறை மாவட்ட திருக்கோவில் பிரதேசத்தில் "சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மைய" கிளையானது நேற்று முன்தினம் (04) திருக்கோவில் கடற்கரை வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மைய இலங்கை மையத்தின் பணிப்பாளர் நாயகம் டொக்டர் றிஸ்வான் காசீம் கலந்து கொண்டு இக்கிளையினை திறந்து வைத்தார்.

அத்தோடு, சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் இலங்கை தலைமை காரியாலயத்தின் உத்தியோத்தர்கள், ஏனைய பிராந்திய கிளைகளின பணிப்பாளர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இம்மனித உரிமைகள் மையத்தின் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை, சான்றிதழ் மற்றும் நினைவுப்பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டதோடு, இக்கிளையானது கிழக்கு மாகாணத்தில் திறந்து வைக்கப்படும் மூன்றாவது கிளை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிங்கள, தமிழ் மாணவர்களுக்கிடையிலான நல்லிணக்க மொழிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

சிங்கள, தமிழ் மாணவர்களுக்கிடையிலான நல்லிணக்க மொழிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொக்கட்டிச்சோலை கலாசார நிலையத்தில் நடத்தப்பட்டிருந்தது.

கிழக்குப் பாதுகாப்புப் படைத் தளபதியின் கருத்து மற்றும் வழிகாட்டுதலின் கீழ், படைத்தலைமையகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பரிசளிப்பு விழா கடந்த 03 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு பாதுகாப்பு படைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ஏ குலதுங்க, ஆர்.டபிள்யூ. பீ.ஆர்.எஸ்.பீ.வீ.எஸ்.வீ.யூ.எஸ். பீ.பீ.எஸ்.சீ கலந்துகொண்டார்.

இந்த மொழிப் பாடநெறியானது, 2024 ஜனவரி 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் மாணவர்களின் சிங்கள மொழித் திறனையும், சிங்கள மாணவர்களின் தமிழ் மொழித் திறனையும் மேம்படுத்துவதன் மூலம், தேசிய, மத மற்றும் கலாசார நல்லிணக்கத்தை மேம்படுத்துவதும் பரஸ்பர புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதே இந்த பாடநெறியின் முக்கிய நோக்கமாகும்.

மட்/இராமகிருஷ்ணா வித்தியாலயம் மற்றும் மட்/முதலிக்குடா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 115 தமிழ் மாணவர்கள் இப்பயிற்சியில் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில், மெதடிஸ்ட் திருச்சபையின் வண. எபினேசர் ஜோசப் ஆண்டகை, கொக்கட்டிச்சோலை கோட்ட கல்விப் பணிப்பாளர், சிரேஷ்ட அதிகாரிகள், அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச குர்ஆன் போட்டிக்காக இலங்கை மாணவர் மக்கா பயணம்



சர்வதேச அல்குர்ஆன் மனனப் போட்டியில், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அரபுக் கல்லூரி கலாபீட ஷரீஆப் பிரிவு மாணவர் அல்ஹாபிழ் ஏ.ஆர்.எம் ஷிபாக் மக்காவுக்கு பயணமாகவுள்ளார். இப் போட்டி, எதிர்வரும் 08 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை சவுதி அரேபியாவின் மக்கா நகரில் நடைபெறவுள்ள நிலையில், குறித்த மாணவர் நாளை 07 ஆம் திகதி மக்காவுக்கு பயணமாகவுள்ளார்.

இலங்கைக்கான சவுதி அரேபிய தூதரகமும் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும் இணைந்து கடந்த வருடம் முதன் முறையாக தேசிய ரீதியில் நடத்திய அல்குர்ஆன் மனனப் போட்டியில் வெற்றி ஈட்டிய இம் மாணவர், இவ்வருடம் நடைபெற்ற மாகாண ரீதியிலான மற்றுமொரு போட்டியிலும் முதல் நிலை பெற்று வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாயமான இலங்கை மீனவரை காப்பாற்றிய தமிழக மீனவர்கள்

### மற்றைய நபரை தேடும் நடவடிக்கைகள் தீவிரம்

(ஒலுவில் விசேட நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்திலிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்களில் ஒரு மீனவரை இந்திய தமிழக மீனவர்கள் காப்பாற்றியுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 12 ஆம் திகதி மாலை 4 மணியளவில், அட்டாளைச்சேனை கப்பலடி கடற்கரை பிரதேசத்திலிருந்து கடற்றொழிலுக்காகச் சென்ற, சின்னப்பாலமுனை 02ஆம் பிரிவைச் சேர்ந்த, 40 வயதுடைய, மூன்று பிள்ளைகளின் தந்தையான ஐ.எல். இர்பான் என்பவரும், அட்டாளைச்சேனை 06 ஆம் பிரிவைச் சேர்ந்த 24 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான கே.ஆர்.எம்.நிஸ்பர் என்பவருமே இவ்வாறு காணாமல் போயிருந்தனர்.

இந்நிலையில், படகின் இயந்திரங்கள் செயலிழந்த நிலையில், உண்பதற்கும் குடிப்பதற்கும் எதுவுமின்றி, நடுக்கடலில் உயிருக்காக போராடிக்கொண்டிருந்த, ஐ.எல்.இர்பான் என்பவரை இயந்திரப் படகுடன் இந்திய தமிழக மீனவர்கள் காப்பாற்றியுள்ளனர்.

இவ்வாறு காப்பற்றப்பட்டுள்ளவரை, நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்துள்ளதாக, மட்டுப்படுத்தப்பட்ட கல்முனை கரையோர மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எம்.ஜீ.எம். பகுர்தீன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காணமற்போன மற்றைய நபர் படகிலிருந்து கடலில் பாய்ந்துள்ளதாக, காப்பாற்றப்பட்டுள்ள மீனவர் தெரிவித்துள்ள நிலையில், அவரை தேடும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய 77 வர்த்தகர்களுக்கு 3,22,499 ரூபா அபராதம்

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில், கடந்த ஜுலை மாதம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த, 77 வர்த்தகர்களுக்கு எதிராக, 3 இலட்சத்து 22 ஆயிரத்து 499 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டுக்கமைய, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, 109 வர்த்தகர்கள் அடையாளங்காணப்பட்டதாகவும், அவர்களில் 77 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, 3 இலட்சத்து 22 ஆயிரத்து 499 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

மேலும், ஏனைய வர்த்தகர்களுக்கு நீதிமன்றிங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போதே மேற்படி வர்த்தகர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமற்ற பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலாவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்தமை, மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்நிலையில், அத்தியாவசிய பொருட்களை கூடுதலான விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக பொது மக்கள் 1977 ஆம் இலக்கத்திற்கு அல்லது மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் 0632222355 எனும் இலக்க தொலைபேசி இலக்கத்திற்கு தகவல்களை வழங்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

(காரைதீவு குறூப் நிருபர் சகா)



காரைதீவைச் சேர்ந்த பொறியியலாளர் லயன் மதுரநாயகம் சுதர்சன், தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

கல்முனை லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும் பல சமூக நிறுவனங்களில் பிரதிநிதித்துவம் வகிப்பவருமான எந்திரி லயன் எம்.சுதர்சன் கல்முனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.எம்.ரியால் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

# நகர்வலம்



## புதிய பள்ளிவாசல்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பம்



கடந்த 2019 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டில் புதிய பள்ளிவாசல்களைப் பதிவு செய்கின்ற நடவடிக்கைகளை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அமைச்சின் உத்தரவுக்கமைய நிறுத்தி வைத்திருந்த நிலையில், தற்போது புதிய பள்ளிவாசல்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் எம்.எச்.ஏ.எம். றிப்லான் தெரிவித்தார்.

தற்போது புதிதாக திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையை பொறுப்பேற்றுள்ள எம்.எச்.ஏ.எம். றிப்லான், உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட் மற்றும் இலங்கை வக்ப் சபையின் உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ. மத்தீன் ஆகியோர் இவ்விடயம் சம்பந்தமாக புத்தசாசனம் மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் செயலாளரோடு பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை முழு மூச்சாக நடாத்தி தடைப்பட்டிருந்த பள்ளிவாசல்களின் பதிவை மீண்டும் மீள ஆரம்பித்துள்ளனர்.

அதன் பிரகாரம் 01.08.2024 முதல் பள்ளிவாசல்கள் மீள்பதிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பதிவுச் சான்றிதழ்கள் பதிவு தபால் மூலம் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

## வடமேல் மாகாண கல்வித்தரத்தை மேம்படுத்த ஆளுநர் நஸீர் அஹமட் துரித நடவடிக்கை

### பாடசாலை கல்விச் சமூகத்துடன் சந்திப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



வடமேல் மாகாணத்தின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதில் தன்னாலான அனைத்து ஒத்தாசைகள் மற்றும் பங்களிப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தற்போதைய நிலையில் தனது தீவிர முயற்சியின் காரணமாக வடமேல் மாகாணத்தில் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்க முடிந்துள்ளதாக மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களிலும் கூடியளவான ஆசிரியர் நியமனங்களை மாகாணத்திற்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் அவர் இதன்போது உறுதியளித்தார்.

இதன் ஒருகட்டமாக புத்தளம் மாவட்டத்தின் அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தார்.

புத்தளம் மாவட்டத்துக்குப் பெரும்பாலும் வெளிமாவட்டங்களில் இருந்து நியமிக்கப்படும் ஆசிரிய, ஆசிரியைகள் விரைவில் இடமாற்றம் பெற்றுச் செல்வதன் காரணமாக பல்வேறு பாடசாலைகளில் நீண்டகாலமாக ஆசிரிய வெற்றிடங்கள் நிலவும் விடயம் ஆளுநரின் கவனத்துக்கு இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது.

இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் ஆசிரியர் நியமனங்களில் மாவட்ட ரீதியான நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் ஊடாக அவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தான் முயற்சிப்பதாக ஆளுநர் அதன்போது உறுதியளித்தார்.

அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் முன்வைத்த ஆசிரியர்கள், மாணவர்களின் வசதி கருதிய சிசுசெரிய பஸ்சேவைகளை விஸ்தரித்தல், பாடசாலைகளின் பௌதீக வளங்கள் மேம்படுத்தல், ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள், உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக ஏற்பாட்டில் ஊடக பயிற்சி கருத்தரங்கு





**(அஷ்ரப் ஏ. சமத்)**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் தொழிலமைச்சும் இணைந்து கொழும்பு மாவட்டத்தில் உள்ள 100க்கும் மேற்பட்ட பிரதேச ஊடகவியலாளர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய ஊடகப் பயிற்சிக் கருத்தரங்கொன்றை (28) பத்தரமுல்லையில் நடாத்தியது.

இந் நிகழ்வுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அதிகாரிகள் மற்றும் தொழிலமைச்சர் மனுச நாணயக்கார ஆகியோர் அதிதியாகக் கலந்து கொண்டு ஊடகப் பயிற்சி பட்டறையை ஆரம்பித்து வைத்தனர்.

இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்பவர்கள் அங்கு அந்நிய செலாவணியை சம்பாதித்து இலங்கையில் சிறந்து மேலோங்கும் குடும்பங்களை நேர்கண்டு அவற்றினை சிறந்த முறையில் செய்திகளாக தேசிய தொலைக்காட்சிகள், பத்திரிகைகளில் வெளிக்கொணர்வது தொடர்பாக இங்கு விளக்கமளிக்கப்பட்டன.

## நாட்டை சுற்றி வலம் வருகின்ற இளைஞன் சஹ்மி சஹீதின் பயணம் வெற்றியடையட்டும்

### இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த வாழ்த்து



இந்த நாட்டின் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலும் ஒரு சாதனை முயற்சியை உலகறியச்செய்ய வேண்டும் என்ற தூய நோக்கிலும் எனது பிரதேசமான பேருவளையைச் சேர்ந்த இளம் வாலிபன் மொஹமட் சஹ்மி சஹீத் கால்நடையாக நாட்டை சுற்றி வளம் வருகின்ற இந்த வரலாற்று நிகழ்வு, நல்லமுறையில் வெற்றிகரமாக முடிய வேண்டுமென தான் வாழ்த்துவதாக நீரியல் வளத்துறை இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் தனது செய்தியில், கடும் வெயில் நிலவி வருகின்ற இக்கால பகுதியில் கால்நடையாக ஒரு பயணம் மேற்கொள்வதென்பது மிகவும் கஷ்டமானதாகும். இருந்த போதிலும் முஸ்லிம் சகோதரரான இளம் வாலிபன் மொஹமட் சஹ்மி கால்நடையாக இந்த பயணத்தை மிகவும் தைரியமாக மேற்கொண்டு இருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும். அதுமாத்திரமன்றி, பேருவளையில் இருந்த ஆரம்பித்த அவரது பயணம், இன்று கிழக்கு மாகாணத்தை சென்றடைந்துள்ளது. அவருக்கு போகின்ற இடமெல்லாம் எல்லா சமூகங்களையும் சேர்ந்த இனத்தவர்கள், விசேடமாக முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தோர் பாரியளவு வரவேற்பு வழங்கி வருவதை நான் அவரது முகநூலினூடாக பார்த்துக்கொண்டுதான் வருகின்றேன்.

அவரது பயணம் நல்லமுறையில் பாதுகாப்பாக நிறைவடைய வேண்டுமென தான் பிரார்த்திப்பதாகவும் அவரை உற்சாகப்படுத்தி வருகின்ற அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நான் நன்றிகளை தெரிவிப்பதோடு இன்று பேருவளையின் நாமத்தை உலகறியச் செய்யும் சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ள சஹ்மி சஹீத் நிச்சயம் இலங்கை வரலாற்றில் இடம்பிடிப்பார் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறி வைக்க விரும்புகிறேன். பேருவளைக்கு அவர் மீண்டும் திரும்புகையில் பேருவளை மக்களோடு நானும் அவரை வரவேற்க ஆவலாக இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

## அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியபிரமாணம்



மாவனல்லை, ஹெம்மாதகம பள்ளிப்போர்வையைச் சேர்ந்த அதிபர் ஏ.சீ.எஸ். ஏ. ஹாஜா மொஹிடீன், அகில இலங்கை சமாதான நீதவானாக மாவனல்லை நீதிமன்றத்தில், மாவட்ட நீதிபதி டப்ளியூ. ஏ.எஸ். அனுராத வீரகொடி முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் மாவனல்லை இணக்க சபையில் பத்து வருடங்கள் சேவையாற்றியுள்ளதோடு, மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி மற்றும் கன்னத்தோட்டை சுலைமானியா கல்லூரி என்பவற்றின் அதிபராக கடமையாற்றி, ஓய்வு பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**(தகவல்: பாரா தாஹீர்)**

## பாரம்பரியம் நிகழ்ச்சியில் மௌலவி ரஷீத் எம். ராஸிக், யாழ். மௌலவி மீரான் முகிதீன் நினைவுகள்



இலங்கை வானொலி முஸ்லிம் சேவைக்கு வளம் சேர்த்து பிரபலம் தேடி நம்மை விட்டும் பிரிந்த சன்மார்க்க அறிஞர்கள் மத்தியில் மௌலவி ரஷீத் எம். ராஸிக் (பஹ்ஜி)யும் குறிப்பிடத்தக்க ஒருவர். கண்டி உடுதெனியவை பிறப்பிடமாக கொண்ட இவர், பேருவளை சீனன் கோட்டைஜாமியத்துல்பாஸியத்துஸ் ஷாதுலிய்யா அரபுக்கல்லூரியின் முன்னாள் உதவிப் பணிப்பாளராவார்.

இவரது நினைவுகளை பரிமாறும் "பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடர்" இன்று 06 ஆம் திகதி செவ்வாய் இரவு 08.10 மணியளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகின்றது.

இவரது நினைவுகளை அவரது நெருங்கிய நண்பர்களான மள்வானை மௌலவி ஹசன் (பஹ்ஜி), வெலிகமை மௌலவி எம்.ஒ.பௌசுர் ரஹ்மான் (பஹ்ஜி), அவரது மைத்துனரான கவிஞர் நஜ்முல் ஹுசைன் ஆகியோர் பரிமாறுகிறார்கள்.

1995 களில் இஸட். எல்.எம். முஹம்மத் அவர்கள் காலத்தில் முஸ்லிம் சேவையோடு தொடர்பு கொண்டார். தொடர்ந்து எம்.இஸட். அஹ்மத் முனவ்வர், ஹாபிஸ் எஸ். எம். ஹனிபா ஆகியோர் காலத்திலும் மௌலவி ராஸிக் அவர்கள் நற்சிந்தனை, குத்பாப்பிரசங்கம், துஆக்கள் என பல்வேறு சன்மார்க்க நிகழ்ச்சிகளை வழங்கினார்.

இவரது துணைவியார் மௌலவியா பௌசுல் அஸீமா பட்டதாரி ஆசிரியையாக பணிபுரிகிறார். முன்னாள், தகவல் திணைக்கள அதிகாரி நூருல் ஐன் நஜ்முல் ஹுசைன், சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸ், ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இத்துடன் மர்ஹூம் மௌலவி யாழ். மீரான் முகிதீன் பணி பற்றி அவரது பேரர் மௌலவி அப்துல் அஸீஸ் நினைவூட்டுகிறார். நிகழ்ச்சியை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவைப் பொறுப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஷியா தயாரித்தளிக்கிறார்.

### அநுராதபுரம் மாவட்ட

## உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பதாக அநுராதபுரம் மாவட்ட பொதுஜன பெரமுனவின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளுடனான சந்திப்பு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையில் கடந்த (02) அநுராதபுரத்தில் இடம்பெற்றது. இதன் போது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.



## புத்தளத்தில் SLEAS சேவைக்குள் உள்வாங்கப்பட்டோர் கௌரவிப்பு

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் அதிபர்களாக சேவையாற்றி, இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு (SLEAS) உள்வாங்கப்பட்ட ஏ.எம்.ஜவாத் மற்றும் எம். நௌசாத் ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் புத்தளம் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கல்வி மேம்பாட்டுக்கும் சீர்திருத்தத்துக்குமான புத்தளம் கல்வியியலாளர்களின் மன்றத்தினால் (PILLARS பில்லர்ஸ்) ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வைபவத்தில், புத்தளம் கல்வி வலயத்துக்குட்பட்ட தமிழ் மொழி மூல பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஓய்வு நிலை அதிபர்கள், அதிபர் ஆசிரியர் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் உட்பட புத்தளம் நகர ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவர், அதன் பிரதிநிதிகள் என பல பிரமுகர்கள் கலந்து கொண்டதுடன் கௌரவிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் இதில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. பில்லர்ஸ் அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் எக்ஸலன்ஸ் பாடசாலை அதிபருமான ஹிதாயத்துல்லாஹ் அஜ்மல் தலைமையில் இடம்பெற்ற இந்த கௌவிப்பு நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எம். ஜவாத், எம். நௌசாத் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

கல்விப் புலத்தில் அவர்களின் கடந்தகால சேவைகளை பில்லர்ஸின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் எஸ்.ஏ.சீ.பீ. மரைக்கார் சபையில் நினைவு கூர்ந்தார். நிகழ்வின் பிரதான உரையை பில்லர்ஸ் அமைப்பின் தலைவரு ம், ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பளருமான இஸட். ஏ. ஸன்ஹிர் நிகழ்த்தினார்.

## ஹம்பாந்தோட்டையில் புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டல் நிகழ்வு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு இம்முறை தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் செயலமர்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் (04) நடைபெற்றது.

பாடசாலையினால் ஏற்பாடுசெய்திருந்த இச்செயலமர்வில் சூரியவெவ இலங்கை வங்கி கிளையின் உதவி முகாமையாளர் எம். ஐ. எம். இன்ஸாப் வளவாளராக கலந்துகொண்டு பாடசாலை மாணவர்களுக்கான வழிகாட்டலினை வழங்கினார். இதில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெரும் திரளான மாணவர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

# புதுக்குடியிருப்பில் திருடர்கள் கைவரிசை; 5 கடைகள் உடைத்து திருட்டு, இருவர் கைது

(ஓமந்தை விஷேட நிருபர்)





முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் ஐந்து கடையும் கோயிலும் உடைத்து திருடிய குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடைகள், ஆலய உண்டியல் என்பன உடைக்கப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சந்தி, வைத்தியசாலைக்கு முன்பக்கம், மந்துவில், காமன்ஸ், செம்மண்குன்று ஆகிய பகுதிகளிலுள்ள ஐந்து கடைகளும் புதுக்குடியிருப்பு நாகதம்பிரான் ஆலயத்திலுள்ள உண்டியலும் உடைக்கப்பட்டு பணமும் பொருட்களும் திருடப்பட்டுள்ளன. இதனையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹெரத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேகநபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து திருடப்பட்ட ரூ.46,230 பணமும், திருடப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவ்வாறான திருட்டு சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதனால் மக்கள் மத்தியில் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால், புதுக்குடியிருப்பு பொலிஸார் அப்பகுதிகளில் பாதுகாப்பை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

## கீரிமலையில் ஆடி அமாவாசை விசேட நிகழ்வுகள்

(யாழ். விசேட நிருபர்)



ஆடி அமாவாசை பிதிர்க்கடன் நிறைவேற்றும் பூஜை வழிபாடுகள் யாழ். கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திலும் கீரிமலை கண்டகி தீர்த்த கரையிலும் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

தந்தையை இழந்தவர்கள் பிதிர்க்கடன் செலுத்தும் விரதமான ஆடி அமாவாசை விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் கீரிமலை கடற்கரையில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. தந்தையை இழந்தவர்கள் தமது பிதிர்க்கடன்களை செலுத்தி கடலில் நீராடினார்கள்.

## வவுனியாவில் யானை தாக்கி ஒருவர் மரணம்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா வடக்கு, கற்குளம், பட்டறை பிரிந்தகுளம் பகுதியில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு, கற்குளம், பட்டறை பிரிந்தகுளம் பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் நீண்ட நேரமாகியும் மகன் வீடு திரும்பாமையால் சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் மகனை தேடி கிராம வீதியூடாக சென்ற போது வீதியில் நின்ற யானை தாக்கியதில் அவர் மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்தவர் பட்டறை பிரிந்தகுளம் பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய இராசையா நாகராசா என்பவராவார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நவசம சமாஜ கட்சியின் தலைவருக்கு யாழில் அஞ்சலி

யாழ். விசேட நிருபர்



மறைந்த நவசம சமாஜ கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணரட்னவிற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது மறைந்த தலைவரின் திருவுருவப்படத்திற்கு பொது மக்களால் மற்றும் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தினால் சுடரேற்றி மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## ஆசிரியர்களுக்கு பயிற்சி சான்றிதழ் வழங்கும் விழா

(கரவெட்டி தினகரன் நிருபர்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்று பரீட்சைத்திணைக்களத்தால் நடத்தப்பட்ட தேர்வில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான பயிற்சி சான்றிதழ் வழங்கும் விழா எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை 9 மணிக்கும் 11.30 மணிக்கும் என இரண்டு அமர்வுகளாக கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இசுருபாய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தி. யோன்குயின்ரஸ் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் 238 ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய தகைமைப் பத்திரங்களைப் பெறவுள்ளதாக கலாசாலை அதிபர் தெரிவித்தார்.

## சாவகச்சேரி நுணாவில் சந்தியில் விபத்து; ஒருவர் பலி, மற்றொருவர் காயம்

(சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி நுணாவில் சந்திப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துவிட்டு வீடு சென்ற அவரை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில் நடந்து சென்ற நபர் மற்றும் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துவிட்டு வீடு நோக்கி திரும்பிச் சென்ற நுணாவில் பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு பரிதாபமாக விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# எந்தவொரு செயற்பாட்டிலும் முயற்சி திருவினையாக்கும்

## அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன்

(தலைமன்னார் விஷேட நிருபர்)



எந்தவொரு செயற்பாட்டிலும் தொடர்ந்து முயற்சி செய்தால் அது திருவினையாக்கும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

வட மாகாண கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் கரப்பந்தாட்டப் போட்டியில் ஒரு சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

இந்த கரப்பந்தாட்டம் என்பது இந்த கிராமத்தின் ஒரு பரம்பரை விளையாட்டாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை இன்றைய இந்த மாணவர்கள் எண்பித்துக் காட்டியுள்ளனர். எந்த விடயமாக இருந்தாலும் ஆரம்பத்தில் மேற்கொள்ளும்போது கடினமானதாகவே காணப்படும்.

ஆனால் இதை நாம் தொடர்ச்சியாக, பயிற்சியாக முன்னெடுக்கும் போது அது இலகுவாக அமையும். இதைத்தான் இந்த மாணவர்களும் தங்களை ஈடுபடுத்தியுள்ளனர்.

இந்த விளையாட்டை நோக்கும்போது மாணவர் அணி படிப்படியாக முன்னேற்றமடைந்திருப்பதும் இங்கு நோக்கக்கூடியதாகவிருக்கின்றது.

அதாவது இந்த அணியானது கடந்த இரண்டு வருட காலத்தில் மூன்றாவது பின்னர் இரண்டாவது தற்பொழுது மாகாண சாம்பியனாக முன்னேற்றம் கண்டுள்ளனர். அதுவும் ஒரு கிராம பாடசாலை இவ்வாறு முன்னேற்றம் காண்பது ஒரு சிறப்புமிக்க விடயமாகும். உண்மையில் இவர்களை பயிற்றுவிப்போரும் போற்றப்பட வேண்டியவர்கள். நாம் எந்த கஷ்டமும் இல்லாது எதையும் சாதிக்க முடியாது.

சூரியன் பிரகாசிப்பது அது எரிவதனாலேதான். அவ்வாறுதான் கல்வியாக இருக்கலாம் விளையாட்டாக இருக்கலாம் நாம் கஷ்டப்பட்டால் தான் நாமும் பிரகாசிக்க முடியும்.

இத்துடன் நின்று விடாது தேசிய மட்டத்திலும் நீங்கள் இவ்வாறான வெற்றியை பெற உங்கள் முயற்சி தொடர வாழ்த்துக்கள் தெரிவித்து நிற்கின்றேன். என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் பாரிய பாதிப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)



கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையில் நோய்த்தாக்கம் அதிகரித்தமையால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருபத்தி இரண்டாயிரத்து 781.25 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதில் குடமுருட்டி குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 330 ஏக்கர் நெற்செய்கை முழுமையான அறுவடை இம்மாத இறுதிக்குள் இடம்பெறவுள்ளன.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்டுள்ள சிறுபோக செய்கையில் பல்வேறுபட்ட நோய்த்தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அதாவது நெல் வயல்களில் தத்தி, மடிச்சுக்கட்டி, இலை சுருட்டி போன்ற நோய்களின் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றன.

கடந்த கால போகத்திலும் இவ்வாறான நோய்த்தாக்கம் காரணமாக பெரும் அழிவுகளை சந்தித்த விவசாயிகள் இம்முறை சிறுபோகத்திலாவது ஓரளவு விளைச்சல் கிடைக்குமென எதிர்பார்த்திருந்தனர். எனினும் நோய்த்தாக்கம் அதிகரித்து வருகின்றமையால் விளைச்சல் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## மன்னாரில் இளம் குடும்பப் பெண் மரணம்

# நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென வைத்தியசாலை பணிப்பாளர் உறுதி

(மன்னார் குறூப் நிருபர்)



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அண்மையில் உயிரிழந்த இளம் குடும்பப் பெண்ணின் மரணம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று உரிய தரப்பினருக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம். ஹனீபா தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அண்மையில் பட்டதாரி இளம் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் வன்மையான கண்டனங்கள் முன்வைக்கப்பட்டன. சம்பவத்தன்று நோயாளர் விடுதியிலிருந்த வைத்தியர் மற்றும் பணியாளர்களின் அலட்சியத்தால் இம்மரணம் இடம்பெற்றுள்ளதாக அவரின் குடும்பத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே இதுதொடர்பில் நீதியான விசாரணைகள் இடம்பெற்று உரிய வைத்தியர் மற்றும் கடமையில் இருந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சென்று அதன் பணிப்பாளர் மற்றும் வைத்தியர்களுடன் இணைந்து கலந்துரையாடலை மேற்கொண்டார். இதன்போது பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் டானியல் வசந்தன் கலந்து கொண்டிருந்தார்.

எனவே இதுதொடர்பாக பல்வேறு கட்ட விசாரணைகள் இடம்பெற்று வருவதோடு, சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை முடிவடைந்து உரிய தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம். ஹனீபா பாராளுமன்ற உறுப்பினரிடம் உறுதியளித்தார்.

## சாவகச்சேரி நுணாவில் பகுதியில் மூன்று வாகனங்கள் மோதி விபத்து

(சாவகச்சேரி விசேட நிருபர்)



சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் அண்மையில் மூன்று வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

கொடிகாமத்திலிருந்து யாழ். நோக்கிச் சென்ற குறுந்தூர பயணிகள் பஸ் நுணாவில் பகுதியில் பயணி ஒருவரை ஏற்றுவதற்காக நிறுத்திய போது பின்னால் வந்த ஹயஸ் வாகனம் பஸ்ஸின் பின்புறமாக மோதியது. இதில் பஸ் கடுமையாக சேதமடைந்துள்ளது.

அதே நேரம் ஹயஸ் வாகனத்தின் பின்பாக வந்த டிப்பர் வாகனமும் ஹயஸ் வாகனத்தின் பின்புறமாக மோதியுள்ளது.

இதில் ஹயஸ் வாகனம் கடுமையாக சேதமடைந்த போதிலும் அதில் பயணித்தவர்கள் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

மேற்படி விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(நாகர்கோவில் விசேட நிருபர்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பளை மாதா கோவில் வீதியிலுள்ள வீட்டுக் கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை (05) காலை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் செபஸ்ரியாம்பிள்ளை டேவிட் உதயராசா (வயது 47) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

வீட்டிலிருந்தவர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள மரண சடங்கு சென்றதாகவும் குடும்பஸ்தரும் மரண சடங்கு சென்று விட்டு வீடு வந்துள்ளார். ஞாயிற்றுக்கிழமை (04) இரவு கிணற்றில் தண்ணீர் எடுக்க மகள் சென்ற போது அவர் சடலமாக காணப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைக்காக சடலத்தை பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்துள்ளார்.

## மருதங்கேணியில் கவனயீர்ப்பு போராட்டம்

(நாகர்கோவில் விசேட நிருபர்)

மருதங்கேணி கிராம நிலஅபகரிப்புக்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் துணை போவதாக குற்றஞ்சாட்டி அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களால் நேற்று திங்கட்கிழமை (05) கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலகத்துக்கு முன்பாக முற்பகல் இப்போராட்டம் இடம்பெற்றது.

இதில் மருதங்கேணி கிராம நில அபகரிப்புக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறுவதாக போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

## வைத்தியர் அர்ச்சுனாவின் பிணை மனு நிராகரிப்பு; தொடர்ந்து விளக்கமறியல் உத்தரவு

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் பொது வைத்தியசாலைக்கு அனுமதியின்றி நுழைந்து முரண்பாட்டில் ஈடுபட்டதுடன் மகப்பேற்று வைத்தியர் அறைக்குள் நுழைந்து புகைப்படம் மற்றும் காணொளி எடுத்தமை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வைத்தியர் அர்ச்சுனாவை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று( 5) உத்தரவிட்டுள்ளார்.

நேற்றைய தினம் நகர்தல் பத்திரம் ஊடாக வைத்தியர் அர்ச்சுனா வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிணை மனு நிராகரிக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேநேரம் வைத்தியசாலையினுள் அனுமதி இன்றி வைத்தியருடன் நுழைந்து காணொளி பதிவுகளை மேற்கொண்ட இருவரையும் விசாரணைக்கு உட்படுத்துமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் வைத்தியர் கடந்த சனிக்கிழமை மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது வைத்தியரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

## அருட்தந்தை அல்பன் இராஜசிங்கம் அடிகளாரின் குருத்துவ வாழ்வின் பொன்விழா

(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் மக்களுக்கு சிறந்த பணிகளை மேற்கொண்டு வந்த அமல மரி தியாகி சபையைச் சார்ந்த அருட்தந்தை அல்பன் இராஜசிங்கம் அடிகளாரின் குருத்துவ திருநிலைப்பாட்டின் பொன்விழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

அடிகளாரின் குருத்துவ திருநிலைப்பாட்டின் பொன் விழாவை முன்னிட்டு அவரின் பிறப்பிடமான யாழ். குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பொன் விழா நாயகன் அருட்தந்தை அல்பன் இராஜசிங்கம் தனது ஆரம்பக் கல்வியை புனித யாகப்பர் ஆண்கள் பாடசாலையிலும் தனது இடைநிலைக் கல்வியை சென்.பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்றவர்.

இதன்பின் இவர் யாழ் மறைமாவட்டத்தில் பண்டத்தரிப்பு , 1974 தொடக்கம் 1975 வரை முருங்கன் உயிலங்குளம் பங்குகளில் உதவி பங்குத்தந்தையாகவும் 1975 தொடக்கம் 1976 வரை இளவாலை சென். கென்றிஸ் கல்லூரியில் உதவி அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.









'கல்விக்கு கரம் கொடுப்போம்' என்ற தொனிப்பொருளில் தலைநகரிலும் தலைநகரை அண்மித்த பிரதேசங்களிலும் மகத்தான கல்விச் சேவையை செய்து வருகின்ற ஐடீஎம் நேஷன் கெம்பஸின் தலைவரும் ஜனகன் அறக்கட்டளையின் ஸ்தாபகருமான கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகனின் முழுமையான அனுசரணையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில், சர்வதேச இசைக்கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவரும், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனனம் அறக்கட்டளையின் பணிப்பாளருமான அதிவணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ்.சந்துரு பெர்னாண்டோவை மலையக கலாசார ஒன்றியத்தின் தலைவர் கே.ஜே.சிவராஜேஸ்வரன் கௌரவித்தார். இந்நிகழ்வில் அதிதியாக கலந்து கொண்ட அருட்கலாநிதி எஸ்.சந்துரு பெர்னாண்டோ, பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்துடன் மலையக கலாசார ஒன்றியத்தின் பத்தாவது வருட பூர்த்தியையிட்டு ஞாபகார்த்த முத்திரையையும் வெளியிட்டு வைத்தார்.





கொழும்பு கொட்டாஞ்சேனை லயன்ஸ் கிளப் கிறேண்ட் சிட்டி சங்கத்தால் நடாத்தப்பட்ட 2024, 2025 ஆண்டுக்கான புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்களை தெரிவு செய்யும் நிகழ்வு கொழும்பு பிரைட்டன் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது புதிய உறுப்பினர்களையும், தலைவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு மருத்துவ செலவுக்கு 10,000 ரூபா காசோலை வழங்குவதையும் மற்றும் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம்.

## மயூரபதி மு பத்ரகாளி அம்மன் கோயில் 37ஆவது ஆண்டு ஆடிப்பூரப் பால்குடப் பவனி – 2024

கொழும்பு, மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் ஆலயத்தின் 37ஆவது ஆண்டு ஆடிப்பூர மஹோற்சவ பால்குட பவனி எதிர்வரும் 07.08.2024 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.00 மணிக்கு பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் மங்கல மங்கையர் கலந்து கொள்ளும் பால் குட பவனியும் நடைபெறவுள்ளது.

பம்பலப்பிட்டி மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோயில் 37ஆவது ஆண்டு ஆடிப்பூரப் பால்குடப் பவனி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து புறப்பட்டு லோரன்ஸ் வீதி, அமரசேகர மாவத்தை, ஹெவ்லொக் வீதி வழியாக மயூரபதி ஆலயத்தை வந்தடையும்.



பால் குட பவனி ஆலயத்தை வந்தடைந்ததும் அம்பாளுக்கு விசேட அபிஷேகமும் பூஜையும் நடத்தப்படும். அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜை நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்டும்.

இம் மஹோற்சவ விழாவில், எதிர்வரும் 10.08.2024 ஆம் திகதி சனிக்கிழமை பஞ்சரத தேர்த்திருவிழாவும் 11.08.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

அம்பாள் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலராய் வந்து அம்பாளை தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு அழைக்கப்படுகின்றனர்.




இந்து மக்களின் விஷேட விரதமான ஆடிஅமாவாசை விரதம் (4) இந்து ஆலயங்களில் அனுஷ்டிக்கப்பட்டது. உடப்பு இந்து பரிபாலன சபை,உடப்பூர் திவ்விய ஒளி கலை மன்றம் இணைந்து ஆடி அமாவாசை விரதத்தை ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது,இறந்த தகப்பன் மற்றும் மோட்சம் அடைந்தவர்களின் ஞாபகார்த்த பிதுர்க்கடன் தீர்த்தல் நிகழ்வுகள் உடப்பு வீரபத்திரகாளியம்மன் ஆலய அருகில் உள்ள கடற்கரையில் இடம்பெற்றது. இதன் போது அடியார்கள் அருகிலுள்ள சமுத்திரத்தில் நீராடி தமது நேர்த்திக் கடன்களை தீர்த்துக் கொண்டனர். (உடப்பு குறூப் நிருபர்)

## ஷஹ்மியுடன் சேர்ந்து நடந்த இஜ்லான் யூசுஃப்




இலங்கை முழுவதும் பேசுபொருளாக காணப்படும் பேருவளை சஹ்மி ஷஹீத், நேற்று முன்தினம் (04) 22 ஆவது நாள் பயணத்தை, புடவைக்கட்டு மக்களின் பேராதரவோடும், பிரார்த்தனைகளோடும் துவங்கி கொக்குவிலை சென்றடைந்தார்.

இவரது இந்த பயணத்தில், புல்மோட்டைமக்கள்,அவர்களதுபாரம்பரிய வரவேற்பு நிகழ்வுகளை நிகழ்த்தி சஹ்மியை வெகுபிரமாண்டமாக வரவேற்றனர்.

ஷஹ்மிக்கு உற்சாகமூட்டுவதற்காக இப்பயணத்தின் பூரண அனுசரணையாளர் சிமி ஹோல்டிங் நிறுவன உரிமையாளர் இஜ்லான் யூசுஃப், சஹ்மியுடன் சேர்ந்து நடைபயணம் மேற்கொண்டமை நெகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவர், புல்மோட்டையியிலிருந்து, கொக்கலையை செல்லும்போது ஊர் மக்கள் படகுகளில் சென்று உற்சாகமளித்ததோடு, சஹ்மி சஹீதும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நீந்திக் கடந்த இளம் சாதனையாளன் முஹம்மத் சலாமாவும் நீந்திச் சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## சமாதான நீதிவானாக இராசையா கிருஷ்ணப்பிள்ளை

ஒய்வு பெற்ற நீர்ப்பாசன திணைக்கள வேலைகள் மேற்பார்வையாளராகவும் பதில் நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தவராகவும் கடமை புரிந்த கலாபூஷணம் இராசையா கிருஷ்ணப்பிள்ளை, தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர், மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எச்.எம். முகம்மது பசீல் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், ஆரையம்பதியைச் சேர்ந்த சீனிப்பிள்ளை இராசையா தம்பதிகளின் புதல்வன் ஆவார்.



இவர் ஒருங்கிணைந்த தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கத்தின் கிழக்கு மாகாண பிரதிநிதியாகவும் மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் மண்முனைப்பற்று பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினராகவும் ஆரையம்பதி கிழக்கு சிவில் பாதுகாப்பு குழுத் தலைவராகவும் செயல்படுகிறார்.

## மட்டக்குளி பால்குட பவனி

கொழும்பு 15, 279, பர்கியூஷன் வீதி, மட்டக்குளியில் அமைந்துள்ள ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த ஆடிப்பூர பால்குட பவனி எதிர்வரும் 07 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் பாற்குட பவனி கொழும்பு 15, பர்கியூஷன் வீதி, மட்டக்குளியில் அமைந்துள்ள முனிஸ்வரர் ஆலயத்தில் இருந்து அன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்த பால்குட பவனி ஆலயத்தை வந்தடைந்ததும் அம்பாளுக்கு அபிஷேகம், என்பன நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும்.







**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460)1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28இன் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**குறிப்பு இல. :** 4/1Acq/93
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.** 4-3/7/2020/எச்டபிள்யூ/207

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசின் 07 மார்ச் 2024ஆம் திகதிய 2374/32 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி 111ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 01. மாகாணம் | :- | வடமேல் மாகாணம் |
| 02. மாவட்டம் | :- | குருநாகல் |
| 03. பிரதேச செயலாளர் பிரிவு | :- | மல்லவபிட்டிய |
| 04. கிராம சேவகர் பிரிவு | :- | இல. 713, மஹிஎல்ல வடக்கு |
| 05. கிராமத்தின் பெயர் | :- | மஹிஎல்ல |
| 06. வரைபட இல. | :- | கடஸ்ரல் வரைபட இல. 420202, வலய இல. 07, தாள் இல. 10 |
| 07. துண்டு இலக்கங்கள் | :- | 01,02 மற்றும் 03 |
| 08. விஸ்தீரணம் | :- | 0.1609 ஹெக்டயார் |

**டபிள்யூ.பீ.சி.என். பத்திரண**
**பிரதேச செயலாளர் மற்றும் சுவீகரித்தல் அதிகாரி**
**மல்லவபிட்டிய**

**பிரதேச செயலகம்,**
**மல்லவபிட்டிய,**
**திகதி : ............. 2024**

# இராணுவத்தின் கட்டுப்பாட்டில் பங்களாதேஷில் இடைக்கால அரசு



ஷேக் ஹஸீனா வங்கதேச நாட்டை விட்டு வெளியேறி விட்டார். நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தற்போது மாணவர்கள், மக்கள் என அனைவரும் அமைதி காக்க வேண்டும். வங்கதேசத்தில் இடைக்கால அரசு அமைய இராணுவம் துணை நிற்கும் என்று பங்களாதேஷ் இராணுவத் தளபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

ஷேக் ஹஸீனா நாட்டை விட்டுத் தப்பி தற்போது பிரதமர் அலுவலகம் சூறையாடப்பட்டுள்ளது. ஷே க் ஹஸீனா நாட்டை விட்டு வெளியேறிய நிலையில், வங்கதேச இராணுவத் தளபதி வாக்கர் நாட்டுமக்களிடையே உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது: ஷேக் ஹஸீனா வங்கதேச நாட்டை விட்டு வெளியேறி விட்டார். நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தற்போது மாணவர்கள், மக்கள் என அனைவரும் அமைதி காக்க வேண்டும். வங்கதேசத்தில் இடைக்கால அரசு அமைய இராணுவம் துணை நிற்கும். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இடைக்கால அரசு அமைத்து நாட்டை நடத்துவோம். போராட்டக்காரர்கள் கோரிக்கை பரிசீலிக்கப்படும். கலவரங்களால் பலரும் உயிரிழந்தது குறித்து விசாரணை நடத்தப்படும்.

இவ்வாறு இராணுவ தளபதி பேசினார்.

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலையின் புதிய வெளி நோயார் பிரிவில் அமைந்துள்ள ஊழியர் குழாம் உணவகம் மற்றும் பொது உணவகத்திற்கு சேவையை வழங்குதல் – 2024**

இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் புதிய வெளி நோயாளர் பிரிவில் அமைந்துள்ள ஊழியர் குழாம் உணவகத்திற்கு சேவையை வழங்குதல் சார்பாக 2024.08.28 மு.ப.10.00 வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. சேவை ஒப்பந்த காலம் ஒப்பந்தத்தை வழங்கும் தினம் முதல் ஒரு வருட காலமாகும்.

03. முதல் தர அரச மற்றும் தனியார், நிறுவனங்களில் திருப்திகரமான உணவக சேவையை வழங்கிய அனுபவம் மற்றும் சொத்துக்கள் உடைய இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024.08.07 முதல் 2024.08.27 வரை வேலை நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 03.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூ. 3000/- தொகையை இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் கிளைக்குச் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன், 2024.08.28 மு.ப. 10.00 இற்கு முன்பு தலைவர், பிரதேச பெறுகைக் குழு, இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு ப.த.மூலம் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து பிரதம கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். (விலைமனுக்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுமேல் மூலையில் "புதிய வெளி நோயாளர் பிரிவில் அமைந்துள்ள ஊழியர் குழாம் உணவகம் மற்றும் பொது உணவகம்" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்)

06. இதற்காக கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.08.21ஆம் திகதி மு.ப. 11.00 இற்கு நடைபெறும்.

07. இந்த இரு உணவக சேவையை வழங்குவதற்கும் ஒரு வழங்குநரை தேர்ந்தெடுத்து நியமித்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்படுகிறது.

தாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி ஏற்றுக் கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் வருகைதந்துள்ள கேள்விதாரர்கள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு - 10**

# பதவியை துறந்து நாட்டை விட்டு வெளியேறினார் ஷேக் ஹஸீனா!

## பங்களாதேஷில் கடும் பதற்றம்; மாணவர் போராட்டத்தில் 300 இற்கு மேற்பட்டோர் பலி!

பங்களாதேஷ் மாணவர்கள் புரட்சியால் ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து அந்நாட்டின் பிரதமர் ஷேக் ஹஸீனா தமது பதவியை நேற்று இராஜினாமா செய்துவிட்டார். மேலும் அவர் தனது சகோதரி ஷேக் ரெஹானாவுடன் பங்களாதேஷை விட்டு தப்பி வெளியேறி இருக்கிறார்.

வங்கதேசத்தை விட்டு தப்பி ஓடிய ஷேக் ஹஸீனாவும் அவரது சகோதரி ஷேக் ரெஹானாவும் இந்தியாவில் மேற்கு வங்க மாநிலம் அல்லது திரிபுராவில் தஞ்சமடைந்திருப்பதற்கு வாய்ப்புள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கு முன்னதாக மாணவர்களின் போராட்டத்துக்கு மதிப்பளித்து பிரதமர் ஷேக் ஹஸீனா உடனடியாக தமது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று அந்நாட்டு இராணுவம் காலக்கெடு விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வங்கதேச விடுதலைப் போரில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கான இடஒதுக்கீட்டுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டம் படிப்படியாக அரசுக்கு எதிரான போராட்டமாக உருமாறியது.

வங்கதேச பிரதமர் ஷேக் ஹஸீனாவின் அரசுக்கு எதிராக வெடித்த இந்தப் புரட்சியில் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பலியாகியுள்ளனர். இதனால் வங்கதேசம் முழுவதும் அசாதாரண பதற்றம் ஏற்பட்டது. இதனையடுத்து வெளிநாட்டவர் தங்கள் நாடுகளுக்கு திரும்பினர்.



இந்த நிலையில் நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் மாணவர்கள் புரட்சி வெடித்தது. மாணவர்களின் இடைவிடாத போராட்டம் மிகப் பெரும் வன்முறையாக வெடித்ததால் பாதுகாப்புப் படையினர் இந்த கிளர்ச்சியை ஒடுக்க முயன்றனர். இதில் மேலும் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். கடந்த 2 மாதத்தில் மட்டும் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பலியாகியுள்ளனர். இந்த நிலையில் பங்களாதேஷ் இராணுவ அதிகாரிகள் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பாக ஆலோசனை நடத்தினர். அந்நாட்டின் இராணுவத் தளபதி நாட்டு மக்களிடையே உரையாற்றினார்.

மேலும் வங்கதேச பிரதமர் ஷேக் ஹஸீனா உடனடியாக பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் இராணுவம் அறிவுறுத்தியது.

ஷேக் ஹஸீனா ராஜினாமா செய்ய 45 நிமிடம் கெடு விதித்தது இராணுவம். இதனால் வேறுவழியே இல்லாமல் ஷேக் ஹஸீனா தமது பதவியை நேற்று இராஜினாமா செய்துவிட்டதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் தமது பதவியை இராஜினாமா செய்த கையோடு வெளிநாடு ஒன்றுக்கு ஷேக் ஹஸீனா தப்பிச் சென்றதாகவும் அந்த ஊடகத் தகவல்கள் நேற்றுத் தெரிவித்தன.

இராணுவத்தின் காலக்கெடுவுக்கு மதிப்பளித்து பிரதமர் ஷேக் ஹஸீனா உடனடியாக தமது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று அந்நாட்டு ராணுவம் கெடு விதித்திருந்ததால் வேறு வழியின்றி அவர் பதவி துறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஷேக் ஹஸீனாவுடன் அவரது சகோதரி ஷேக் ரெஹானாவும் வங்கதேசத்தை விட்டு தப்பி ஓடிவிட்டார்.

சர்வதேச ஊடகத் தகவல்களின் படி, இந்தியாவுக்குதான் ஷேக் ஹஸீனாவும் ரெஹானாவும் தப்பியிருப்பதாகவும் மேற்கு வங்க மாநிலம் அல்லது திரிபுராவில் இருவரும் தஞ்சமடைந்திருக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.









# அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

***வாழைச்சேனை தினகரன் நிருபர்***

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில், புதுக்குடியிருப்பு, வாழைச்சேனையைச் சேர்ந்த திருமதி ஸோபா ஜெயரஞ்சித் அகில இலங்கை சமாதான நீதவானாக மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எச்.எம்.மொஹமட் பஷீல் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கோறளைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரான இவர், வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசியப் பாடசாலையின் பிரதி அதிபராக பணிபுரிந்து வருகின்றார்.



வாழைச்சேனை தமிழ் கலை, இலக்கிய மன்றத்தின் பொருளாளராகவும், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், பாரதி சமூக கலை, இலக்கிய மேம்பாட்டுக் கழகம், பேத்தாழை விபுலானந்தர் கலை, இலக்கிய மன்றம் போன்றவற்றின் சிரேஷ்ட உறுப்பினராகவும் விளங்கும் இவர், கோறளைப்பற்று பிரதேச கலாசாரப் பேரவையின் உறுப்பினராகவும் கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு கம்பன் கழகம் ஆகியவற்றின் ஆயுட்கால உறுப்பினராகவும் உள்ளார்.

**கல்வி அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**குளியாப்பிட்டிய, நாரங்கலயில் நிறுவப்படுவதற்குள்ள தேசிய கல்வியியல் கல்லூரியின் தொழில்நுட்பவியல் துறைக்கு விடுதிக் கட்டிடங்களை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல்**

இல. **ED/13/199/20/NCOET/HOSTEL**

மதிப்பீட்டுச் செலவாக வெட் வரியின்றி 993.5 மில்லியன் ரூபாவைக் கொண்டதும் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் குளியாப்பிட்டிய, நாரங்கலயில் நிறுவப்படுவதற்குள்ள தேசிய கல்வியியல் கல்லூரியின் தொழில்நுட்பவியல் துறைக்கு விடுதிக் கட்டிடங்களை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கல்வி அமைச்சின் செயலாளர் சார்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவின் (SCAPC) தலைவர் கோருகின்றார்.

விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் திட்ட வடிவமைப்பைத் தயாரித்தல், வடிவமைப்பு விபரம், விபரக்குறிப்புகளின் அளவுப் பத்திரத்தைத் (BOQ) தயாரித்தல், தேவையான சகல சேவைகள் மற்றும் உள்ளக வேலைகள் உட்பட பொருத்தமான அத்திவாரம் சகிதம் பல மாடிகளைக் கொண்ட ஆண் மற்றும் பெண் விடுதிக் கட்டிடத்தின் குறைபாடுகள் மற்றும் பொறுப்புடைய காலத்தில் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் மற்றும் நிர்மாணித்தல் என்பன இந்த வேலைகளில் உள்ளடங்குகின்றன. மொத்த நிர்மாணக் காலம் 450 நாட்களாகும்.

- விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் (பெறுகை வழிகாட்டி 3.2)
- CIDA பதிவுத் தேவைப்பாடு: கட்டிட நிர்மாணித்தல் விசேடத்துவத்துடன் C1 அல்லது அதற்கு மேல்.
- ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, இசுறுபாய, கல்வி அமைச்சு, செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு, KOICA NCOET - நாரங்கல்ல, செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2787282 தொலைநகல்: 011-2787282 மற்றும் பின்வரும் முகவரியில் 8.30 மணித்தியாலம் முதல் 16.30 மணித்தியாலம் வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கல்வி அமைச்சின் காசாளருக்கு மீளளிக்கப்படாத 100,000.00 ரூபாவைச் செலுத்தி மற்றும் 2024 ஆகஸ்ட் 06ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 16ஆம் திகதி வரை 8.30 மணித்தியாலம் முதல் 14.30 மணித்தியாலம் வரையில் பத்தரமுல்ல, இசுறுபாய, கல்வி அமைச்சு, காசாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

நகல் பிரதியுடனான விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 25ஆம் திகதி 14.00 மணித்தியாலத்திற்குப் பிந்தாமல் மேலதிகச் செயலாளர் அலுவலகம் - பெறுகைகள், 5ஆம் மாடி, கல்வி அமைச்சு, ''இசுறுபாய'', பத்தரமுல்ல எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் தொழில்நுட்ப முன்மொழிவுகள் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

- 2025 மார்ச் 19ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும்.
- ஒவ்வொரு விலைமனுவுடனும் 10 மில்லியன் ரூபாவிற்கான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது 2025 மார்ச் 05ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
- நிர்மாணக் காலம் 450 நாட்களாகும்.
- விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஆகஸ்ட் 23ஆம் திகதி 10.00 மணித்தியாலத்தில் நாரங்கல செயற்றிட்ட வேலைத் தளத்தில் இடம்பெறும்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு.**
**2024-08-06ஆம் திகதி.**

நீர்ப்பாசன அமைச்சு

நீர்ப்பாசனத் திணைக்களம்

# கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தி செயற்றிட்டம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பாக செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகின்றார். இலங்கை அரசாங்கத்தினால் இந்த செயற்றிட்டத்திற்கு நிதியிடப்படுகிறது.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
3. வேலை ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு கட்டிட நிர்மாணத் துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடனான (CIDA) பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக தகவல்கள் விலைக்கோரல் தரவு மற்றும் ஒப்பந்தத் தரவில் (பிரிவு 5) வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பின்வரும் 8ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை இதே முகவரியில் 2024 ஆகஸ்ட் 06ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கேள்வி வைப்பை தந்திரிமலையிலுள்ள செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகத்தில் வைப்புச் செய்து 2024 ஆகஸ்ட் 06ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 27ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது மீளளிக்கப்படாத கேள்வி வைப்பை இலங்கை வங்கி தப்ரபேன் கிளையில் பேணப்படும் 0007042374 (கணக்கின் பெயர் - கீழ் மத்துவத்துஓயா பல்துறை அபிவிருத்தில் செயற்றிட்டம்) எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து procurement.immsdp@gmail.com முகவரிக்கு மின்னஞ்சல் செய்தல் வேண்டும். (விலைமனுக்கள் மின்னஞ்சல் ஊடாக வழங்கப்படும்)
7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை இரு பிரதிகளில் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு இரு தபாலுறைகளில் இட்டு பின் அவையிரண்டும் வேறொரு தபாலுறையில் உள்ளிடப்பட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலை இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024 ஆகஸ்ட் 28ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் ஒன்றில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். செயற்றிட்டப் பணிப்பாளர், செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம், கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தி செயற்றிட்டம், தந்திரிமலை. (தபால் குறியீடு - 50016) (தொ.பே. 025-2227887, தொலைநகல்: 022-2227887) அல்லது செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
8. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-08-15ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு தந்திரிமலை, கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தி செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
9. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இணைக்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியானது ஒவ்வொரு விலைமனுவும் முடிவுறுத்தப்படும் காலம் முதல் அட்டவணையில் தரப்பட்டுள்ள காலம் வரையில் செல்லுபடியாதல் வேண்டும். செல்லுபடியாகும் விலைமனுப் பிணை இணைக்கப்பட்டிராத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
10. விலைமனுக்கள் அவைகளை முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். மேலே நிர்ணயிக்கப்பட்ட விலைமனுவை முடிவுறுத்தப்படும் திகதியில் அலுவலகம் மூடப்பட்டிருந்தால், விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியானது உடன் அடுத்து வரும் வேலை நாளாகும் என்பதுடன் விலைமனுக்கள் அதே நேரத்தில் அதே இடத்தில் திறக்கப்படும்.
11. விலைமனுக்கோரல் செயற்பாடுகள் அல்லது நடத்தையை பொருட்படுத்தாமல் அத்தகைய செலவுகளுக்கு பொறுப்பு என்பவற்றுக்கு பெறுகைக் குழு பொறுப்பு கூறாது என்பதுடன் விலைமனுக்கோரலில் விலைமனுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆகியவற்றின் தொடர்புள்ள அனைத்து கிரயச் செலவுகளுக்கான பொறுப்பு மற்றும் கடப்பாட்டை விலைமனுதாரரே ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
12. பெறுகைக் குழுவின் செயற்றிட்ட பணிப்பாளரின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதாகும். பெறுகைக் குழுவின் செயற்றிட்ட பணிப்பாளரானவர் தனியொரு, எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் அதனது சுயவிருப்பத்தில் நிராகரிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளார்.
13. எந்தவொரு தனியொரு விலைமனுதாரர்/ வழங்குநர் ஒரு அம்சத்திற்கு மேற்பட்ட அம்சத்திற்கு தனித்தனியாக விண்ணப்பிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

| விலைக் கோரல் அடையாளம் | வேலைகளின் விபரம் | மதிப்பீட்டுச் செலவு (ரூபா) மில்லியனில் (வெட் இன்றி) | ஒப்பந்தக் காலம் | தேவையான ஆகக் குறைந்த CIDA தரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனு செல்லுபடிக் காலம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| LMMSDP/P/ NCB/ 2024/08 | தந்திரிமலையில் உள்ள கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு மீள் குடியேற்றப் பிரதேசம் 1இல் முன்மொழியப்பட்ட சனசமூக நிலையத்தை நிர்மாணித்தல் | 14.1 | 180 நாட்கள் | C5 (கட்டிடம்) | 5,000.00 | 77 நாட்கள் | 200,000.00 | 105 நாட்கள் |
| LMMSDP/P/ NCB/ 2024/09 | தந்திரிமலையில் உள்ள கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு மீள் குடியேற்றப் பிரதேசம் 1இல் முன்மொழியப்பட்ட நீலபியச கட்டிடத்தை நிர்மாணித்தல் | 10.4 | 180 நாட்கள் | C6 (கட்டிடம்) | 5,000.00 | 77 நாட்கள் | 150,000.00 | 105 நாட்கள் |
| LMMSDP/P/ NCB/ 2024/10 | தந்திரிமலையில் உள்ள கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு மீள் குடியேற்றப் பிரதேசம் 1இல் முன்மொழியப்பட்ட முன்பள்ளி கட்டிடத்தை நிர்மாணித்தல் | 18.6 | 180 நாட்கள் | C5 (கட்டிடம்) | 5,000.00 | 77 நாட்கள் | 275,000.00 | 105 நாட்கள் |
| LMMSDP/P/ NCB/ 2024/11 | தந்திரிமலையில் உள்ள கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு மீள் குடியேற்றப் பிரதேசம் 1இல் முன்மொழியப்பட்ட விளையாட்டு மைதானத்தைச் சுற்றி வேலியை நிர்மாணித்தல் | 13.3 | 180 நாட்கள் | C5 (கட்டிடம்) | 5,000.00 | 77 நாட்கள் | 200,000.00 | 105 நாட்கள் |

| விலைக் கோரல் அடையாளம் | வேலைகளின் விபரம் | மதிப்பீட்டு அளவு (கியூப்) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனு செல்லுபடிக் காலம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| LMMSDP/P/ NCB/ 2024/12 | தந்திரிமலையில் உள்ள கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தி செயற்றிட்டத்தில் பிரதான குளக்கட்டின் 1,700 முதல் 2+700 இல் U/S slope பாதுகாப்பு வேலைகளின் நிர்மாணத்திற்கு விபரக் குறிப்புகளின் பிரகாரம் கிரவல் பொருட்களை வழங்குதல் மற்றும் களஞ்சியப்படுத்துதல் | 2655 | 60 நாட்கள் | - | 5,000.00 | 77 நாட்கள் | 150,000.00 | 105 நாட்கள் |
| LMMSDP/P/ NCB/ 2024/13 | தந்திரிமலையில் உள்ள கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தி செயற்றிட்டத்தில் பிரதான குளக்கட்டின் 2+700 முதல் 3+100 இல் U/S slope பாதுகாப்பு வேலைகளின் நிர்மாணத்திற்கு விபரக்குறிப்புகளின் பிரகாரம் கிரவல் பொருட்களை வழங்குதல் மற்றும் களஞ்சியப்படுத்துதல் | 1057 | 45 நாட்கள் | - | 5,000.00 | 77 நாட்கள் | 60,000.00 | 105 நாட்கள் |

**தலைவர்,
செயற்றிட்டப் பெறுகைக் குழு,
கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தி செயற்றிட்டம்,
தந்திரிமலை.
தொலைபேசி இல. 0716890308.**

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291

Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## போதனா வைத்தியசாலை - இரத்தினபுரி

## கேள்விக்கோரல்களுக்கான அழைத்தல்

பின்வரும் பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து இரத்தினபுரி, போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| Bid No. | Item/Description | Qty | Non-refundable fee per document (Rs) | Value of Bid Security (Rs) |
|---|---|---|---|---|
| THR/E15/05/2024 | Purchasing 02 Nos. of Heavy Duty High Capacity Laboratory Centrifuges | 02 | 2,500.00 | 250,000.00 |
| THR/E15/06/2024 | Purchasing 02 Nos. of Neonatal Ventilators with HFOV | 02 | 2,500.00 | 250,000.00 |
| THR/E15/07/2024 | Purchasing 01 No. of Vitrectomy | 01 | 2,500.00 | 400,000.00 |

கேள்வி ஆவணங்கள் 2024 ஒகஸ்ட் 30 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் (பொது விடுமுறைகள் நீங்கலாக திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும்) மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் வழங்கப்படுவதுடன் கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் எத்தனை எண்ணிக்கையான விலைமனுக்களையும் சமர்ப்பிக்கலாம் ஆனால் ஒவ்வொரு விலைமனுக்கோரலும் தனித்தனியான கேள்வி விண்ணபத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையிலிருந்து பெறப்படாத ஆவணங்களில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் மற்றும் மீளளிக்கப்படாத ஆவண கட்டணத்திற்காக பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டின்றி சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

கேள்வியானது 2024 செப்டம்பர் 02 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு மூடப்படுவதுடன் மூடும் நேரத்திற்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் எந்தவொரு கேள்விகளும் இரத்துச் செய்யப்படும். கேள்விகளை திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது வேறு யாராவது சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற நபரானவர் பங்கு பெறுவதற்கு அனுமதிக்கப்படுவார். (கேள்விகளை திறக்கும் வேளையில் அலைபேசிகளின் பாவனை கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது)

கீழே குறிப்பிட்டுள்ளவாறு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்துரைக்குமாறு நீங்கள் இத்தால் பணிக்கப்படுகின்றீர்கள்.

**"Tender for (Tender Name) – ( Bid No.)"**
**Eg: "Tender for 01 No. of Vitrectomy Machine – THR/E15/07/2024"**

எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் கேள்விகளின் எந்தவொரு பாகத்தையும் நிராகரிப்பதற்கும் அல்லது ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை பிரதேச பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

அவசியமற்ற தாமதங்களை தவிர்ப்பதற்காக விலைமனு ஆவணங்களை கையேற்பதற்கு முன்னராக 045 2222261 - நீடிப்பு 263 என்ற இலக்கத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,
பிரதேச பெறுகைக் குழு,
போதனா வைத்தியசாலை,
இரத்தினபுரி.**

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி

## SMIB இல் வேலை வாய்ப்புகள்

தேசத்திற்கு முன்னணி வீட்டுவசதி வங்கியாக உள்ள அரச ஈட்டு முதலீட்டு வங்கி, உயர் தரமான வாடிக்கையாளர் திருப்தி மற்றும் பரந்த வகையில் சேவைகளை வழங்கும் நோக்குடன் வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் உள்ளது. அதற்காக பின்வரும் பதவிக்காக தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் சுறுசுறுப்பான தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய மற்றும் வர்த்தக இலக்குகளை அடைவதற்கு முழு ஈடுபாடு காட்டும் அபேட்சகர்களிடம் இருந்து நாம் விண்ணப்பங்களை கோருகிறோம்.

### உதவி முகாமையாளர் - ஏற்பாட்டியல்

பணியின் முழு நோக்கம் வங்கியின் ஏற்பாட்டியல் மற்றும் நிர்வாகப் பிரிவுக்கு நாளாந்த நிர்வாக உதவியை வழங்குவதாகும். ஒருங்கிணைப்புக்கு பொறுப்பாக இருத்தல் மற்றும் விற்பனையாளர்களுக்கு கொள்வனவுக் கோரல்களை சமர்ப்பித்தல் மற்றும் கொள்வனவுக் கோரல் நடைமுறைகள்/ கோரிக்கைகளை கையாளுதல். பெறுகை வழிகாட்டல்களில் வழங்கப்பட்டுள்ளவாறு ஆவணங்களை தயாரித்தல் மற்றும் பின்தொடர்தல். இந்தப் பதவி நிலை பொருட்பதிவேடு முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருக்கும்.

**தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ நிறுவாகம் ஒன்றில் இருந்து வழங்கல் சங்கிலி முகாமைத்துவம், ஏற்பாட்டியல், வர்த்தக நிர்வாகம் அல்லது எந்த ஒரு தகைமையில் இளமாணி பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

**அனுபவம்**

புகழ்பெற்ற நிறுவனம் ஒன்றில் நடவடிக்கைகள்/ ஏற்பாட்டியல் வழங்கல் சங்கிலியில் 03 ஆண்டுகள் நிறைவேற்றுனர் அனுபவம். வங்கி ஒன்றில் ஏற்பாட்டியலில் உள்ள அனுபவம் குறிப்பிடத்தக்க அனுகூலம் ஒன்றாக அமையும். அபேட்சகர் சிறந்த தொடர்பாடல், பிரச்சினைகளை தீர்க்கும் திறன் மற்றும் சுதந்திரமாக பணியாற்றுவதற்கான ஆளிடை திறன்கள் மற்றும் பணியாளர்களை வழிநடத்தல் மற்றும் நிர்வகிக்கும் அதேநேரம் பல் திட்டங்களை கையாளுதல். அரச பெறுகை நடைமுறையில் உள்ள அறிவு பிரத்தியேக அனுகூலமாக அமையும்.

**சம்பளம்**

சம்பள அளவு: வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் சேர்த்து மாதாந்தம் ரூபா 113,040-1,880 x 20-150,640/-

**வயது:** 40 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (அரச துறை அமைப்பு ஒன்றில் ஏற்கனவே பணியாற்றுபவர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

**பொது நிபந்தனைகள்**

**தேர்வு முறை** - வங்கியின் ஆட்சேர்ப்புக் கொள்கை மற்றும் நடைமுறைகளின்படி விண்ணப்பங்கள் கோரப்படும். நேர்முகப்பரீட்சை மூலம் தேர்வு செய்யப்படும்.

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி – 2024.08.20**


**எவ்வாறு விண்ணப்பிப்பது**

ஆர்வம் கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் உறவினர் அல்லாத இரு தொழில்முறை நடுவர்களின் பெயர்கள், முகவரி மற்றும் தொடர்பு இலக்கங்கள் மற்றும் தமது கல்வி/ தொழில்முறை பதிவுகளின் பிரதிகள் மற்றும் தமது சுயவிபரக் கோவையை கீழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். அனைத்து விண்ணப்பங்களினதும் இரகசியம் கண்டிப்பாக பேணப்படுவதோடு எந்த வகையான ஆதரவு திரட்டல்களும் தகைமை இழப்பாக கருதப்படும். இந்த ஆட்சேர்ப்புக்காக தேர்வு மேற்கொள்ளல், ஒத்திவைத்தல் அல்லது ஆட்சேர்ப்பை ரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த செயற்பாடுகள் மற்றும்/ அல்லது தேர்வு அளவுகோல்களில் மாற்றங்களை செய்யும் உரிமை வங்கி வசமானது. பணிப்பாளர் சபையின் முடிவு இறுதி மற்றும் முடிவானதாகும்.

விண்ணப்பங்கள் careers@amib.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மத்திரம் அனுப்பப்படல் வேண்டும்.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்




106

### கார்கள்

விற்பனைக்கு

KV-0959 Micro Trond 2013 car அதிகூடிய விலைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு -03 தொலைபேசி- 0714 542958. 052349



117

### வேன்கள்

விற்பனைக்கு

PC-4588 Toyota 2007 van அதிகூடிய விலைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03 தொலைபேசி- 0714 542958. 052823



122

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்

விற்பனைக்கு

QG-6380 Bajaj 2006 YR-9725 Bajaj 2011 JR-3267 Bajaj 2004 YD-1284 Bajaj 2010 Threewheel அதிகூடிய விலைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு -03 தொலைபேசி- 0711 210810. 052355

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

Repeat Your Ad For Better Offers

**ஜாதிக ஜன ஜய மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

மதுர விதானகே ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் 83 ஆம் இலக்க நிலையியற் கட்டளையில் கீழ் "ஜாதிக ஜன ஜய மன்றம்" கூட்டிணைப்பதற்கானதொரு சட்ட மூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்-

(அ) ஜனநாயக செயல்முறை மற்றும் சமூக விவகாரங்களில் பங்கேற்க நாட்டு மக்களை ஊக்குவித்தல்,

(ஆ) அழுத்தமான சமூகப் பிரச்சினைகள் பற்றிய ஆராய்ச்சியை நடாத்துதல்

(இ) ஓரங்கட்டப்பட்ட மக்களின் உரிமைகள் மற்றும் நலனுக்காக வாதிடுவதற்கு ஆக்கபூர்வமான வளங்களையும் ஆதரவையும் வழங்கல்

மற்றும்

மதுர விதானகே
பாராளுமன்ற உறுப்பினர்

KÄRCHER

உபயோகிக்கப்பட்ட இயந்திரங்கள் விற்பனைக்கு

ப்ரஷர் வொஷர்ஸ் / வெக்யூம் க்ளீனர்ஸ் (ஈரமான/உலர்ந்த) மற்றும் தரையை சுத்தம் செய்யும் இயந்திரம் உள்ளிட்ட பல இயந்திரங்கள் உண்டு.

மொத்தமாக தொகையாக விற்கப்படும்

எதிர்வரும் 2024 ஆகஸ்ட் 12ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 16ஆம் திகதி வரை.
அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
077 395 9234/ 0112 369630-2

துடவ்வ ட்ரேடிங் கம்பனி (பிரைவட்) லிமிடெட்
இல. 509. எல்விடிகல மாவத்தை வீதி, கொழும்பு 05

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460)1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28இன் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**குறிப்பு இல. :** 4/1Acq/94/TOLL/206-A

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.** 4-3/7/2020/எச்டபிள்யூ/206

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசின் 11 ஜூன் 2024ஆம் திகதிய 2388/29 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி 111ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 01. | மாகாணம் | :- வடமேல் மாகாணம் |
| 02. | மாவட்டம் | :- குருநாகல் |
| 03. | பிரதேச செயலாளர் பிரிவு | :- மல்லவபிட்டிய |
| 04. | கிராம சேவகர் பிரிவு | :- இல. 715, ஹவன |
| 05. | கிராமத்தின் பெயர் | :- ஹவனவத்தை |
| 06. | வரைபட இல. | :- கடஸ்ரல் வரைபட இல. 420204, வலய இல. 01, தாள் இல. 20 |
| 07. | துண்டு இலக்கங்கள் | :- 01, 04, 05, 08, 09, 10, 11, 13, 14 |
| 08. | விஸ்தீரணம் | :- 0.2639ஹெக்டயார் |

**டபிள்யூ.பீ.சி.என். பத்திரண**
**பிரதேச செயலாளர் மற்றும் சுவீகரித்தல் அதிகாரி**
**மல்லவபிட்டிய**

**பிரதேச செயலகம்,**
**மல்லவபிட்டிய,**
**திகதி : 02.08 2024**

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமை அலுவலகம், மொணராகல
### மீட்கப்படாத அடகு பொருட்களை ஏலத்தில் விற்றல்

மக்கள் வங்கியின் மொணராகல பிராந்தியத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் என்பவற்றில் 31.05.2023ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு 26.08.2024ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முடிவடையும் வரை மீட்கப்படாத, தங்க நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பித்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடத்தப்படும் திகதி 27.08.2024 மற்றும் 28.08.2024**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | வெல்லவாய 062 |
|---|---|
| கிளை | பிபில, வெல்லவாய, மொணராகல, புத்தல, கதிர்காமம், தணமல்வில, மெதகம, படல்கும்புர, சியம்பலாண்டுவ |
| சேவை நிலையம் | மொணராகல, தம்பகல்ல, எதிலிவெவ, ஹம்பேகமுவ, ஒக்கம்பிட்டிய |

மேற் குறிப்பிடப்பட்டுள்ள படி நடத்தப்படவிருக்கும் இந்த ஏலவிற்பனையை மீண்டும் அறிவித்தல் வழங்காமல் வங்கியின் தற்றுணிபின் படி இரத்துச் செய்வதற்கு, ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், வெல்லவாய வீதி, மொணராகல.**
**தொலைபேசி இலக்கங்கள் : 055-2276350, 055-2276347**

PEOPLE'S BANK
Pride of the Nation

## பெறுகை அறிவித்தல்

### சுகாதார அமைச்சு
### பொது வைத்தியசாலை, பேராதனை

தலைவர், பிரதேச பெறுகைக் குழு, பொது வைத்தியசாலை (போதனா) பேராதனை இனால் கீழ்க்காணும் வேலை விடயங்களுக்காக 2024 ஒகஸ்ட் 06ம் திகதி முதல் 2024 ஒகஸ்ட் 27 பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. வைத்தியசாலையின் மழைநீர் வழிந்தோடுவதற்கான கால்வாய் அமைப்பை (சமையலறை அருகில்) உருவாக்குதல்

02. வைத்தியசாலை பாதுகாப்பு கெமரா அமைப்பை (CCTV) விரிவுபடுத்தல்.

03. மருந்துக் களஞ்சியத்தின் குளிர் அறையை (Cooler Room) மேம்படுத்துதல்.

04. வளிச்சீராக்கி இயந்திர சேவை மற்றும் பராமரிப்பு 2024/2025

இந்த வேலை விடயங்களின் சகல தகவல்களையும் 2024.08.06 முதல் 2024.08.27 வரை பேராதனை பொது வைத்தியசாலையின் உத்தியோகபூர்வ இணையதளமான www.peradeniya-hospital.health.gov.lk இடம் பெற்றுக்கொள்ள முடிவதுடன், அந்த வேலை விடயங்களுக்காக பெறுகை விடயங்கள் சம்பந்தந்தமான பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2024.08.13 மு.ப. 10.30 இற்கு பேராதனை பொது வைத்தியசாலையின் கலந்துரையாடல் அறையில் நடைபெறும்.

**வைத்தியர் எச்.எம்.ஏ. திலகரத்ன,**
**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை (போதனா)**
**பேராதனை**

## வரையறுக்கப்பட்ட சிலாபம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வாக்குரிமையுள்ள அங்கத்தவர் பெயர் பட்டியலை காட்சிப்படுத்தல் 1992 இல.11 மற்றும் 1983 இல.32 திருத்தப்பட்ட இல.05 கூட்டுறவு சங்க சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம் 1971.04.01ம் திகதி ஹலா/311 இலக்கத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட சிலாபம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டு 2024.06.30ம் திகதிக்கு ஒருவருட பூர்த்தி செய்யும் அங்கத்துவ வாக்குரிமையுள்ள பெயர் பட்டியல் 2024.07.30 முதல் 2024.08.20 வரை கீழ்க்காணுமாறு காட்சிப்படுத்தப்படுவதுடன் பெயரில் மாற்றம் அல்லது பெயரை உற்படுத்திக் கொள்வதற்கு மேன்முறையீடு அல்லது எதிர்ப்புக்கள் இருப்பின் அதனையும் கீழ்க்காணும் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறது. பெயரில் ஏதேனும் மாற்றம் இருப்பின் வாக்களிப்பதற்கு முடியாத காரணத்தால் இது பற்றி உங்கள் கவனத்தைச் செலுத்துமாறு அறிவித்துக் கொள்கிறேன்.

| தொடர் இல. | பிரதேச இலக்கம் | பிரதேசம் | காட்சிப்படுத்தப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | இல. 01<br>இல. 19 | சிலா/ தெற்கு லேக் வீதி | தலைமையகம் |
| 2 | இல. 02 | சிலா சிலவ் கோப்சிட்டி விற்பனை நிலையம் | சிலவ் கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 3 | இல. 06 | சோனகத் தெரு | தலைமையகம் |
| 4 | இல. 07<br>இல. 18 | அலுத்வத்த மட்டக்குளிய | தலைமையகம் |
| 5 | இல. 08<br>இல. 10 | அம்பகதவில இரணவில | அம்பகதவில |
| 6 | இல. 09 | வெல்ல | வெல்ல பிரதேச விற்பனை நிலையம் |
| 7 | இல. 11 | முன்னேஷ்வரம் | முன்னேஷ்வரம் கிராமிய வங்கி |
| 8 | இல. 12 | கன்ஜுக்குளி | தலைமையகம் |
| 9 | இல. 13 | கர/இலுப்பதெனிய | தலைமையகம் |
| 10 | இல. 14 | ஆரியகம (ஆரிகாமம்) | தலைமையகம் |
| 11 | இல. 15 | பங்கதெனிய | பங்கதெனிய கிராமிய வங்கி |
| 12 | இல. 16 | தெமட்டபிட்டிய | தெமட்டபிட்டிய பிரதேசம் |
| 13 | இல. 17<br>இல. 26 | குமாரகட்டுவ மண்டலான | குமாரகட்டுவ பிரதேச விற்பனை நிலையம் |
| 14 | இல. 20 | திகன்வெவ | தலைமையகம் |
| 15 | இல. 21 | திஸ்ஸோகம | மானுவன்கம கிராமிய வங்கி |
| 16 | இல. 22 | எலிவிட்டிய | குமாரகட்டுவ கிராமிய வங்கி |
| 17 | இல. 23 | ஊர் உடியந்தலுவ | ஊர் உடியந்தலுவ பிரதேச விற்பனை நிலையம் |
| 18 | இல. 27 | முகுனுவட்டவன | முகுனுவட்டவன கிராமிய வங்கி |

**கட்டளைப் பிரகாரம், செயலாளர்,**
**வரையறுக்கப்பட்ட சிலாபம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - சிலாபம்**
**தொ.பே. இல. 032 - 2222364**

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (SLRC)

### இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன இடப்பரப்பில் பால் உற்பத்திகள் விற்பனைக் கூடமொன்றை (கபே) குத்தகைக்கு வழங்கல்

**கேள்வி இல.:** 91/2024.08.28

ஒரு வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பிரேமகீர்த்தி டி அல்விஸ் மாவத்தையின் நடைபாதைக்கு முகப்பாக கொழும்பு - 07, டொரிங்டன் சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன இடப்பரப்பில் 120 சதுர அடியுள்ள **பால் உற்பத்திகள் விற்பனைக் கூடமொன்றை (கபே)** குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரை பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. பால் உற்பத்திகள் விற்பனைக் கூடத்தை (கபே) பரீட்சித்த பின்னரே உங்கள் முன்வைப்பானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட நபரானவர் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடப்படல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பிரதான கணக்காளரிடம் 2,500 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கொழும்பு-07, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக்கான உதவி பணிப்பாளரிடமிருந்து கேள்விப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**2024.08.27 ஆம் திகதியன்று** பி.ப. 3 மணி வரையும் கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். கேள்விகள் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம், கொழும்பு-7 என்ற முகவரிக்கு 2024.08.08 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் **2024.08.28** ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்குப் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்.**

## தேசிய வைத்தியசாலை ~ கண்டி

### SERVERS இயந்திரம் மற்றும் WIFI உபகரணங்களை கொள்வனவு செய்தல் திருத்தப்பட்ட கேள்வி அழைப்பு

கண்டி தேசிய வைத்தியசாலைக்கு ASERVES இயந்திரம் மற்றும் WIFI பெற்றுக் கொள்வதற்கு குறித்த பத்திரிகை அறிவித்தல் 2024.07.23ம் திகதி தினமின, தினகரன், டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களுடன் சம்பந்தப்பட்ட திருத்தம் கீழ்க்காணுமாறு அமையும்.

1. கேள்விக்கு முன்னரான கலந்துரையாடல் (Pre bid meeting) - 2024.08.12ஆம் திகதி மு.ப. 10.30 இற்கு
2. கேள்விகள் திறத்தல் (opening) - 2024.08.20ஆம் திகதி மு.ப. 10.30 இற்கு

1. முதலாம் அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி இருப்பதுடன் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் என்பதை கேள்விதாரர் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**தேசிய வைத்தியசாலை, கண்டி.**

## கைத்தொழில் அமைச்சு
### இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்

### விலைமனுக்கள் சமர்ப்பித்தலை நீடித்தல்

### இல்மனைட் தரத்தை மேம்படுத்துவதற்காக பெனல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் சகிதம் பிரித்தெடுக்கும் பொறித்தொகுதியொன்றை வடிவமைத்தல், கட்டமைத்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

**விலைமனு எண்:** LMSL/SUP/DPC/12/2024

மேற்கூறிய விடயம் தொடர்பாக 2024 ஜுலை 16ஆம் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தை இது குறிக்கின்றது.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள்: 2024 ஆகஸ்ட் 28ஆம் திகதி பி.ப. 2.30 மணி

ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் மாறாமல் அவ்வாறேயிருக்கும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்டின் வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பிலக்கம்: 0112883972/0112883951 அல்லது 2.

**தலைவர்,**
**திணைக்கள ஆலோசகர்கள் பெறுகைக் குழு,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்,**
**341/13, சரண மாவத்தை, இராஜகிரிய.**

### நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
### இலங்கை மதுவரித் திணைக்களம்

## விலைமனுக்கோரல் - (IFB)

### பூகொட மதுவரி ஆய்வுகூடக் கட்டிடத்திற்கான மின்சாரப் பணிகள்

1. இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சார்பில், திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரினால் தேசிய போட்டிக் கேள்விமனு நடைமுறையைப் பயன்படுத்தி இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு மேற்படி ஒப்பந்தத்தை நிறைவு செய்ய தகுதியான மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன. தேவைகள் மற்றும் விவரக்குறிப்புகள் பற்றிய விரிவான விளக்கம் கேள்விமனு ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.
2. தகுதியான கேள்வி மனுதாரர்கள நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) EM 4 அல்லது EM 3 வகையின் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும் என்பதுடன் கேள்விமனு ஆவணங்களை சேகரிப்பதற்கு முன்னர் பதிவு செய்ததற்கான ஆதாரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
3. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான கேள்வி மனுதாரர்கள் **இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 4 ஆம் மாடியில் உள்ள கணக்கு பிரிவின் பிரதம கணக்காளரிடமிருந்து** மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன், கேள்விமனுக்கோரல் ஆவணங்களை **2024.08.06 ஆம் திகதி** முதல் வார நாட்களில் (தேசிய விடுமுறை நாட்கள் தவிர்ந்த) அலுவலக நேரத்தில் **(மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி** வரை) பார்வையிடலாம். **தொலைபேசி இலக்கம் : 011-2045073**
4. ஆர்வமுள்ள கேள்வி மனுதாரர்கள், **CIDA பதிவுச்** சான்றிதழுடன் மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துமூல வேண்டுகோளொன்றை **2024 ஆகஸ்ட் 26 அன்று பிற்பகல் 3.00 மணி** வரை அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்து **இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 4 ஆம் மாடியில் உள்ள கணக்குப் பிரிவிற்கு** மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா இரண்டாயிரத்து ஐநூறு (ரூ.2,500/-)** இனைச் செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்விமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்விமனுக்களை **திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவருக்கு** பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு **2024.08.27 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு** முன்னர் இத்திணைக்களத்தை வந்தடையக் கூடிய விதத்தில் அனுப்ப வேண்டும். அல்லது **இல 353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள மதுவரி திணைக்களத்தின் நான்காம் மாடியிலுள்ள கணக்கு பிரிவில் பிரதம கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனுக்கள் சேகரிக்கும் பெட்டியில் 2024.08.27 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இட வேண்டும்.**

   தாமதமான கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். வேறு முறைகளில் அல்லது இலத்திரனியல் முறையில் அனுப்பப்படும் கேள்விமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
6. அனைத்து கேள்விமனுக்களும், கேள்விமனு ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள வங்கி உத்தரவாத படிவத்தின் வடிவிலான **ரூபா 50,000/-** பெறுமதியான **"மனுப்பாதுகாப்புடன்"** அனுப்பப்பட வேண்டும். மனுப்பாதுகாப்பானது கேள்விமனுக்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதியிலிருந்து **105 நாட்களுக்கு** செல்லுபடியானதாக இருக்க வேண்டும். **(2024.12.10 வரை)** அல்லது இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சிறாப்பரிடம் பண வைப்புச்செய்யப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட G172 பற்றுச் சீட்டின் பிரதியுடன் அனுப்பப்பட வேண்டும்.
7. கேள்விமனுக்கள், அவற்றைப் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதியிலிருந்து **77 நாட்களிற்கு** செல்லுபடியானதாக இருக்க வேண்டும்.**(2024.11.12 வரை)**
8. கேள்விமனுக்கள், அவற்றை சமர்ப்பிப்பதற்கான காலம் நிறைவடைந்தவுடனேயே மேலே பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நேரில் கலந்துகொள்ள விரும்பும் கேள்விமனுதாரர்கள் மற்றும்/அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விமனுக்களை தயாரிப்பது அல்லது வழங்குவது தொடர்பாக மனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்கும் மதுவரித் திணைக்களம் பொறுப்பேற்காது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை மதுவரித் திணைக்களம்,**
**இல 353, கோட்டை வீதி, இராஜகிரிய.**
**2024.08.06**

SELACINE

it's what you want
www.adz.lk

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்ததின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | CIDA தரம் | மனுப்பாதுகாப்பு பிணைத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| RDA/RM &M/ SAB/RMI/2024/08 | பல்லேபத்த - மெதகன்னொய - வெலிகேபொல வீதியில் 14/1 ஆம் இலக்க பாலத்தினை மீள் புனரமைத்தல் | 56.67 | 182 | C4 அல்லது அதற்கு மேல் பாலத்தில் நிபுணத்துவம் | 900,000.00 |

மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களுக்காக **தேசிய மனுக்கோரல் போட்டி முறையின்** கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.08.06** ஆம் திகதி முதல் **2024.08.26** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு இணையத்தளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

# மக்கள் வங்கி

## குருநாகல் பிராந்தியம்

### மீட்கப்படாத அடகு நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் என்பவற்றில் 2023.05.31ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு, 2024.08.23ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முடிவடையும் வரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பித்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடைபெறும் திகதி - 2024.08.24 மற்றும் 2024.08.25**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | குருநாகல் கிளை வளாகம் | குளியாபிட்டிய கிளை வளாகம் | வாரியபொல கிளை வளாகம் |
|---|---|---|---|
| கிளை | குருநாகல், மலியதேவ, எதுகல்புர, பொல்கஹவெல, அளவ்வ, பொதுஹெர, மாவத்தகம, இப்பாகமுவ, மெல்சிரிபுர, ரிதீகம | குளியாபிட்டிய, நாரம்மல, ஹெட்டிபொல, கிரிஉல்ல, மாகந்தர, பிங்கிரிய | வாரியபொல, நிகவெரட்டிய, மஹவ, கல்கமுவ, கொபெய்கனே, பொல்பிதிகம |
| சேவை நிலையம் | வைத்தியசாலை அலகு, நகர சபை அலகு, மலியதேவ வீதி, பிதுறுவெல்ல, ஹிரிபிட்டிய, மல்லவபிட்டிய, கொடவெல,போயவலான, மத்தவ, பரகஹதெனிய, கும்புக்கெடே, பானகமுவ, தொடம்கஸ்லந்த | தும்மலசூரிய, உடுபத்தாவ, பிஹல்பொல, கந்தானேகெதர, கட்டுபொத, பண்டாரகொஸ்வத்த, பம்மன்ன, தம்பதெனிய, பன்னல, வீரபொகுன | மாஸ்பொத, நிக்கவெரட்டிய, ரஸ்நாயகபுர, கிரில்ல, நாகொல்லாகம, அம்பன்பொல, பொரளுவெவ |

மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி நடத்தப்படவிருக்கும் இந்த ஏல விற்பனையை மீள அறிவிக்காமல் வங்கியின் தற்றுணிவின்படி இரத்துச் செய்வதற்கு ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமை அலுவலகம்,**
**இலக்கம் 03, வத்ஹிமி ரோட், குருநாகல்.**

1961
PEOPLE'S BANK
Pride of the Nation

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகார சபை

## கேள்விகளை அழைத்தல்

### நகர அபிவிருத்தி அதிகாரசபையுடனான முதலீடு

### நாவலப்பிட்டியில் கலப்பு அபிவிருத்தித் திட்டம்



**ஆவணங்கள் வழங்கப்படுதல்**

மீளளிக்கப்படாத எழுபத்தையாயிரம் (ரூபா 75,000.00) ரூபா தொகையை வரிகள் சகிதம் செலுத்திய பின் 2024-08-06ஆம் திகதி முதல் 2024-08-30ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கண்டி, இல. 18, கெப்பெட்டிபொல மாவத்தை, நகர அபிவிருத்தி அதிகார சபை, மத்திய மாகாண அலுவலகத்திலிருந்து அல்லது பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 8ஆம் மாடியில் அமைந்துள்ள அந்த அதிகார சபையின் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவிலிருந்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 2024-09-27ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் பத்தரமுல்ல ‘‘செத்சிறிபாய - கட்டம் 1’’, 7ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.

விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்து கொள்ளலாம்.

**காணியின் அளவு: 1 ரூட் - 20.38 பேர்ச் (60.38 பேர்ச்)**

**குத்தகைக் காலம்: 50 வருட குத்தகை அடிப்படையில்**

**விருப்பத்தேர்வு கொடுப்பனவு முறைகள்**

**விருப்பத்தேர்வு 01 -**

முதலீட்டாளர் குத்தகை தவணையின் 25% வீதத்தை அபிப்பிராய கடிதம் (LOI) வழங்கப்பட்ட நாள் முதல் 30 நாட்களுக்குள்ளும் மற்றும் மிகுதியை (75%) ஆரம்பக் கொடுப்பனவு நாள் முதல் 03 மாதங்களுக்குள் செலுத்தி முடிக்க வேண்டும்.

**விருப்பத்தேர்வு 02 -**

முதலீட்டாளர் குத்தகை தவணையின் 25% வீதத்தை ஆரம்பக் கொடுப்பனவாக அபிப்பிராய கடிதம் (LOI) வழங்கப்பட்ட நாள் முதல் 30 நாட்களுக்குள்ளும் மற்றும் மிகுதி 75% வீதத்தை வழங்கப்படும் வருடாந்த தவணையை 10 வருடங்களுக்குள் சமமான வருடாந்த தவணை அடிப்படையிலும் செலுத்த வேண்டும்.

**அடிப்படை விலை:**

**விருப்பத் தேர்வு 01 -** : ரூபா 47,725,000.00
**விருப்பத் தேர்வு 02 -** ஆரம்பக் கொடுப்பனவுத் தொகை 25%
: ரூபா 11,931,250.00
- வருடாந்த தவணை தொகை 75%
: ரூபா 4,863,000.00

**பிணை முறி ரூபா : 500,000.00**

**விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் : 2024-08-23ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு**

**விலைக்கோரல் முடிவுறுத்தல் : 2024-09-27ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு**

**மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:**
பணிப்பாளர் (ஆதன அபிவிருத்தி), ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவு,
நகர அபிவிருத்தி அதிகார சபை, 8ஆம் மாடி,
செத்சிறிபாய, கட்டம் 1,
பத்தரமுல்ல.

தொலைபேசி : 011-2875921, 011-3611950 மற்றும் 011-2875916-20, 081-2223898 (மத்திய மாகாண அலுவலகம்), நீடிப்பு 2960 - 2967

தொலைநகல் இல: 011-2875900
மின்னஞ்சல் முகவரி: directorred@uda.gov.lk
இணையதளம்: www.uda.gov.lk

**தலைவர்,**
**வருமானக் கேள்விச் சபை (கீழ்நிலை), நகர அபிவிருத்தி அதிகார சபை, 7ஆம் மாடி, செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்ல.**

## பெறுகை அறிவித்தல்

### மாவட்ட பொது வைத்தியசாலை — மாத்தளை

### வைத்தியசாலை கட்டிட பழுதுபார்த்தலுக்கான கேள்வி கோரல்

மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைபெறும் பல கட்டிடங்களின் பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளல் வேண்டும். எனவே அதற்கான இலங்கை நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள தகைமையுடைய அனுபவமுள்ள ஒப்பந்த நிறுவனங்களிலிருந்து 2024.08.16 மு.ப. 10.30 வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த வேலை | ஒப்பந்தப் பெறுமதி (வெட்வரி மற்றும் ஏனைய வரி இன்றி) | CIDA வகைப்படுத்தல் பிரகாரம் தகைமைகள் | ஒப்பந்த கால எல்லை | கேள்விப் பிணை | | கேள்விகள் செல்லுபடியாகும் கால எல்லை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெறுமதி | செல்லுபடியாகும் கால எல்லை | |
| MT/2024/10/ WARD-03 | Renovation of Ward No - 03 | ரூ. 10.0 மில்லியன் | C - 6 & C - 7 | 90 நாட்கள் | ரூ. 100,000.00 | 105 நாட்கள் | 91 நாட்கள் |
| MT/2024/11/ Quarters 09A | Renovation of Quarters 09A | ரூ. 9.6 மில்லியன் | C - 6 & C - 7 | 90 நாட்கள் | ரூ. 100,000.00 | 105 நாட்கள் | 91 நாட்கள் |
| MT/2024/12 OMF WARD | Renovation of OMF Ward | ரூ. 8.54 மில்லியன் | C - 6 & C - 7 | 90 நாட்கள் | ரூ. 90,000.00 | 105 நாட்கள் | 91 நாட்கள் |

02. கேள்வி ஆவணங்களை 2024.08.05 முதல் 2024.08.16 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் அலுவலக கணக்குப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டுதல் கடிதத்துடன் தகைமைகளை உறுதி செய்யும் ஆவணங்கள் மற்றும் மீளளிக்கப்படாத ரூ. 2000.00 கேள்விப் படிவக் கட்டணத்தை (ஒரு வேலைக்காக) மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவு காசாளருக்கு காசாக செலுத்திய பின்னர் பெற்றுக் கொண்ட பொது மாதிரியின் 172 பற்றுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு முன் வைத்தியசாலைக்கு வருகைதந்து குறித்த இடங்களை பார்வையிட்டு கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் குறித்த ஒப்பந்தம் சம்பந்தமான சிக்கல்களைத் தெளிவு படுத்திக் கொள்வதற்காக 2024.08.12 மு.ப. 11.00 இற்கு நடைபெறும் கேள்விக்கு முன்னரான கூட்டத்திற்கு சமுகமளித்தல் வேண்டும். கேள்விதாரர்களால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் திருத்தங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனித்தல் வேண்டும்.

04. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.08.16 மு.ப.10.30 அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். ஒப்பந்தக்காரர் ஒருவர் குறித்த வேலைகள் 3 இற்கும் கேள்விகளைச் சமர்ப்பிப்பதாயின் வேறுவேறு உறைகளில் இட்டு குறித்த கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறித்த வேலையைக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் அதாவது 2024.08.16 மு.ப. 10.30 இற்கு வைத்தியசாலை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லுது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகளிக்கலாம். கேள்வி ஆவணங்களை அலுவலக நேரங்களில் கொள்வனவுகள் இன்றி பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்விகளை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மாத்தளை.**
**2024.08.02**

Uva Wellassa University

## விலைக்கூற்றுக்களுக்கான அழைத்தல் [IFB]

### இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

### மருத்துவ பீடத்தின் உடற் தொழிலியல் பீடத்திற்கான நீடிப்பிற்கான நிர்மாணம்

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கான உடற் தொழிலியல் ஆய்வுகூட 3 மாடிக் கட்டிட நீடிப்பு நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விக்கோரல்களை இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் சார்பாக, பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். ஒப்பந்தக் காலப்பகுதியானது 5 மாதங்களாகும்.

கேள்விக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் நடைமுறை மூலம் அழைக்கப்படுகின்றன.

ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகுதிக்காக, எதிர்பார்க்கப்படும் கேள்விதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டிட கட்டுமான விஷேடத்துவத்தில் சி-5 அல்லது சி-4 **CIDA** பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2024 ஓகஸ்ட் 7 ஆம் திகதியிலிருந்து 2024 ஓகஸ்ட் 28 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 6,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பிரதான வேலைகள் பிரிவின் சிரேஷ்ட உதவி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள கேள்விக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம் அல்லது **www.uwa.ac.lk** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் சிறாப்பரின் கருமபீடத்தில் செலுத்தப்படல் வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெயரில் 3114820 என்ற இலங்கை வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். கேள்விக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

அனைத்து கேள்விக்கோரல்களும் கேள்விப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பிணைத் தொகையானது 495,000 ரூபாவாகும் கேள்விப் பிணையானது நிபந்தனையற்றதும் கோரும்போது பெற்றுக் கொள்ளும் வங்கி உத்தரவாதமாகவும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொண்டதாகவுமிருத்தல் வேண்டும். கேள்விப் பிணையானது 2024 நவம்பர் 29 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விக்கோரல் ஆவணங்கள் நகல்பிரதியொன்றுடன் 2024 நவம்பர் 29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முன்னராக பெறுகைக் குழுவிற்கு அனுப்பப்படல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்கோரல் ஆவணமானது ஒன்றில் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பதுளை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான கேள்விக்கோரல்கள் நிராகரிக்கப்படும்.

ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக தகவலை இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பிரதான வேலைகள் பிரிவு, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 055-3050847. தொலைநகல்: 055-2226633)

கேள்விக்கோரல்கள் 2024 டிசம்பர் 29 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

கேள்விமனுக்கள் 2024 நவம்பர் 29 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

கேள்விமனுக்கள் 2024 ஓகஸ்ட் 29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பேரவை சபை அறையில் கேள்விதாரர்/ கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2024 ஓகஸ்ட் 15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பராமரிப்பு அலுவலகத்தில் நடைபெறுவதுடன் அதன் இறுதியில் தள விஜயமானது ஒழுங்குபடுத்தப்படுவதுடன் அவ்வேளையில் எதிர்பார்க்கப்படும் கேள்விதாரர் செயற்றிட்ட தேவைப்படுத்தல்கள் தொடர்பான தெளிவுரைகளை அறிந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
2024 ஓகஸ்ட் 6 ஆம் திகதியன்று.

# உலகின் அதிவேக வீரராக தங்கம் வென்றார் லைல்ஸ்



பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் அமெரிக்காவின் நோவா லைல்ஸ் 0.005 மில்லி நொடிகளில் ஜமைக்காவின் கிஷான் தொம்சனை தோற்கடித்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

நேற்று முன்தினம் நடந்த இந்தப் போட்டியில் பங்கேற்ற 8 வீரர்களில் எழுவர் 9 விநாடிகளுக்குள் போட்டியை நிறைவு செய்ததால் வெற்றி பெற்றவரை தீர்மானிப்பதில் பெரும் குழப்பம் நேர்ந்தது. எனினும் லைல்ஸ் 9.784 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்து முதலிடத்தைப் பெற்ற நிலையில் தொம்சன் 9.789 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்து இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

இதன்போது தொம்சனின் கால் கோட்டை முதலில் தாண்டியபோதும் லைலின் தலை அவருக்கு முன்னர் கோட்டை தாண்டி இருந்ததால் அவர் முதலிடத்தைப் பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் முன்னாள் உலக சம்பியனான பிரெட் கெர்லி 9.81 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்து வெண்கலப்பதக்கத்தை வென்றார்.

போட்டியில் பங்கேற்ற எட்டு வீரர்களும் 0.12 நொடிகள் வித்தியாசத்தில் போட்டியை நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

2004 இல் ஜஸ்ட்லின் கெட்லினுக்குப் பின் ஆடவருக்கான ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் வெல்லும் முதல் வீரராக லைல்ஸ் உள்ளார். இவர் ஏற்கனவே 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் உலக சம்பியன் பட்டத்தையும் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் பிரமாண்ட விளையாட்டு திருவிழா

இலங்கையில் முதல் முறையாக ஏழு வகை குழு நிலை விளையாட்டுகளை உள்ளடக்கிய பிரமாண்ட விளையாட்டு திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 16 தொடக்கம் 18 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுத் துறை, இளைஞர்கள் விவகார மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சு ஏற்பாடு செய்திருக்கும் இந்த பிரமாண்ட விளையாட்டு நிகழ்ச்சியில் கிரிக்கெட், கால்பந்து, ரக்பி. கரப்பந்து, வலைப்பந்து, ஹொக்கி மற்றும் கூடைப்பந்து அமைப்புகளும் இணைந்துள்ளன. இதற்கு டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. அனுசரணை வழங்குகிறது.

மேற்படி ஏழு விளையாட்டுகளிலும் கழக, மாகாண மற்றும் பாடசாலை மட்டகங்களில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் டி10 போட்டிகளாக நடைபெறும் கிரிக்கெட் ஆட்டங்கள் புளூம்பீல்ட் மற்றும் தர்ஸ்டன் மைதானங்களிலும் அணிக்கு ஐவர் கொண்டதாக நடைபெறும் கால்பந்து போட்டிகள் கொழும்பு குதிரைப்பந்தய திடல் மைதானத்திலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஆடவர் 400 மீ.: அருண ஒலிம்பிக் அரையிறுதியில் இன்று பங்கேற்பு



பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் ஆடவருக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் மூன்றாவது இடத்தைப் பிடித்து தனது சிறந்த காலத்தை வெளியிட்ட அருண தர்ஷன இன்று (06) அரையிறுதிப் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த ஆரம்ப சுற்றில் பங்கேற்ற அருண 44:99 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்து முதலிடத்தைப் பிடித்தார். இந்த ஆரம்ப சுற்றில் பங்கேற்ற 44 வீரர்களில் அருண 17 ஆவது அதிவேகமான காலத்தை பதிவு செய்தார்.

இதன்போது 1997 இல் ஜப்பானின் புக்காகோவில் நடந்த போட்டியில் சுகத் திலகரத்னவுக்கு பின்னர் 400 மீற்றர் ஓட்டப்போட்டியை 45 விநாடிகளுக்கு குறைவான காலத்தில் நிறைவு செய்த முதல் இலங்கை வீரராகவும் அருண பதிவானார். முன்னர் 45.30 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்ததே அருணவின் சிறந்த காலமாக இருந்தது.

அதேபோன்று இம்முறை ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பில் இதுவரை பங்குபற்றிய ஐந்து வீர, வீராங்கனைகளும் முதல் சுற்றிலேயே வெளியேறிய நிலையில் இலங்கையின் முதல் வீரராகவும் அருண அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இதன்படி அருண தர்ஷன பங்கேற்கும் அரையிறுதிப் போட்டி இன்று இலங்கை நேரப்படி இரவு 11.05 மணிக்கு இடம்பெறவுள்ளது.

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட்: இங்கிலாந்து குழாம் அறிவிப்பு



இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்காக இங்கிலாந்தின் 14 பேர் கொண்ட குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் முடிவுற்ற மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின்போது விரலில் காயத்திற்கு உள்ளான அரம்பத் துடுப்பாட்ட வீரர் சக் கிரோலி நீக்கப்பட்டுள்ளார். அதேபோன்று வேகப்பந்து வீச்சாளர் டிலியன் பென்னிங்டனும் காயம் காரணமாக அணியில் இடம் பெறவில்லை.

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் 21 ஆம் திகதி மான்செஸ்டரில் ஆரம்பமாகவுள்ளது. ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்சிப்பின் ஓர் அங்கமாகவே இந்தத் தொடர் இடம்பெறவுள்ளது. இந்த சம்பியன்சிப் புள்ளிப் பட்டியலில் இலங்கை அணி 4 ஆவது இடத்தில் இருப்பதோடு இங்கிலாந்து அணி 6 ஆவது இடத்தில் காணப்படுகிறது.

இந்தத் தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை டெஸ்ட் அணியின் முக்கிய வீரர்கள் ஏற்கனவே இங்கிலாந்து பயணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இங்கிலாந்து குழாம்:**

பென் ஸ்டொக்ஸ் (தலைவர்), கஸ் அட்கின்சன், ஷொயைப் பஷீர், ஹரி ப்ரூக், ஜோர்டன் கொக்ஸ், பென் டக்கட், டான் லோரன்ஸ், ஒல்லி பொப், மத்தியு பொட்ஸ், ஜோ ரூட்ஸ், ஜெம்மி ஸ்மித், ஒல்லி ஸ்டொன், கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட்.



## சர்வதேச செய்திகள்

# பாரிய ஆர்ப்பாட்டத்தை அடுத்து பங்களாதேஷ் பிரதமர் ஹசீனா இராஜினாமா; தப்பியோட்டம்

## பிரதமர் மாளிகைக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைவு: இடைக்கால அரசு அமைப்பு

பங்களாதேஷில் பெரும் உயிர்ச்சேதங்களை ஏற்படுத்திய அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடுத்து நாட்டை விட்டு தப்பிச் சென்ற பிரதமர் ஷெய்க் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

நேற்று தலைநகர் டாக்காவில் திரண்ட ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்குள் நுழைந்த நிலையில் 2009 தொடக்கம் ஆட்சியில் இருக்கும் 76 வயதான ஹசீனா ஹெலிகொப்டரில் அண்டை நாடான இந்தியாவின் திரிபுரா மாநிலத் தலைநகர் அகர்தாலாவை சென்றிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

பிரதமர் இராஜினாமா செய்ததை அறிவித்த இராணுவத் தளபதி ஜெனரல் வகார் உஸ் ஸமான், இடைக்கால அரசு ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அரச தொழில்களில் இட ஒதுக்கீடு வழங்குவதற்கு எதிராக கடந்த மாதம் வெடித்த மாணவர் ஆர்ப்பாட்டம் பின்னர் அரச எதிர்ப்பு போராட்டமாக மாறியது. இதில் கடந்த ஜனவரியில் இடம்பெற்ற எதிர்க்கட்சிகள் புறக்கணித்த தேர்தலில் தொடர்ந்து நான்காவது முறையாக வெற்றியீட்டிய ஹசீனாவை பதவி விலகும்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினர்.

இதுவரை இடம்பெற்ற வன்முறைகளில் 280க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் அனைத்து பிரதான கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய இராணுவத் தளபதி சமான், ஜனாதிபதி முஹமது ஷஹாபுத்தீனை சந்தித்து அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி கலந்துரையாடியுள்ளார்.

'நாடு புரட்சிகர காலத்தில் இருக்கிறது' என்று கடந்த ஜூன் 23 ஆம் திகதியே இராணுவத் தளபதியாக பதவியேற்ற 58 வயது சமான் குறிப்பிட்டார். 'அனைத்துக் கொலைகள் மற்றும் அநீதிக்காகவும் நீதி நிலைநாட்டப்படும் என்று நான் உங்களுக்கு வாக்குறுதி அளிக்கிறேன். நாட்டின் இராணுவத்தின் மீது நம்பிக்கை வைக்கும்படி உங்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். அனைத்துப் பொறுப்பையும் நான் ஏற்பதோடு மனம் தளர வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன்' என்று தொலைக்காட்சியில் உரையாற்றிய சமான் மேலும் தெரிவித்தார். 'நீங்கள் அனைவரும் சற்று பொறுமையாக இருங்கள், எங்களுக்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்கள், நாம் அனைவரும் ஒன்றாக சேர்ந்து அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்' என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில் தலைநகர் டாக்காவில் திரண்ட ஆயிரக்கணக்கான மக்கள் கோசங்களை எழுப்பி கொண்டாட்டத்தில் ஈடுபடும் காட்சிகளை தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின. இதன்போது ஹசீனாவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்குள் நுழைய ஆயிரக்கணக்கானவர்கள் வெற்றி கோசங்களை எழுப்பி கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

அந்த வாசஸ்தலத்தில் கூட்டம் அலைமோதியதோடு சிலர் தொலைக்காட்சிகள், கதிரைகள் மற்றும் மேசைகள் என பொருட்களை சுமந்து செல்வதையும் காண முடிந்தது. இந்த வாசஸ்தலம் நாட்டில் அதிகம் பாதுகாக்கப்பட்ட இடமாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

டாக்காவில் உள்ள ஷெய்க் ஹசீனாவின் தந்தையான நாட்டின் சுதந்திரத் தலைவர் ஷெய்க் முஜிபுர் ரஹ்மானின் பிரமாண்ட சிலை மீது ஏறிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்த சிலையை கோடாரிகளால் தகர்த்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பங்களாதேஷில் இடம்பெற்ற வன்முறைகளில் சுமார் 100 பேர் வரை கொல்லப்பட்ட நிலையில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டபோதும் பிரதமர் பதவி விலகக் கோரி மாணவ செயற்பாட்டாளர்கள் நேற்று தலைநகரில் பேரணியாக வந்தனர். இதன்போது பொலிஸார் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல்களில் குறைந்தது ஆறு பேர் கொல்லப்பட்டனர்.



# பிரிட்டனில் குடியேற்ற எதிர்ப்பு வன்முறை



பிரிட்டனில் தஞ்சக் கோரிக்கையாளர்கள் தங்கியுள்ள ஹோட்டல்கள், கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் தீவைக்கப்பட்டு குடியேறிகளுக்கு எதிரான ஆர்ப்பட்டம் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் பிரதமர் கெயிர் ஸ்டாமர், பொலிஸ் தலைவருடன் நேற்று அவசர பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளார்.

வடமேற்கு இங்கிலாந்தில் உள்ள செளத்போட்டில் கத்திக்குத்து தாக்குதல் ஒன்றில் மூன்று சிறுமிகள் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து கடந்த ஒரு வாரமாக நாட்டில் பல பகுதிகளிலும் வன்முறைகள் வெடித்திருப்பதோடு 420க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கத்திக்குத்து தாக்குதலை நடத்தியவர் குடியேறியான கடும்போக்கு இஸ்லாமியவாதி என்று வதந்தி பரவிய நிலையிலேயே குடியேற்ற எதிர்ப்பு மற்றும் முஸ்லிம் எதிர்ப்புக் குழுக்கள் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றன. எனினும் சந்தேக நபர் பிரிட்டனில் பிறந்த பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர் இல்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் மீது கல்லெறிந்து, கடைகளில் கொள்ளையில் ஈடுபட்டு, பள்ளிவாசல்கள் மற்றும் ஆசியர்களுக்குச் சொந்தமான கடைகள் மீது தாக்குதலில் ஈடுபட்டு கலகக்காரர்கள் இனவாத வெறுப்புணர்வை தூண்டி வருவதாக உள்துறை அமைச்சர் யுவெட்டே கூப்பர் குறிப்பிட்டுள்ளார். பெரும்பாலும் முகமூடி அணிந்த இளைஞர்கள் பல நகரங்களில் வன்முறையில் ஈடுபட்டதோடு, குடியேறிகள் நாட்டுக்குள் வருவதை குறிக்கும் வகையில் 'படகுகளை நிறுத்து' என்று கோசம் எழுப்பினர்.

பிராந்திய பதற்றத்திற்கு மத்தியில்:

# காசாவில் மேலும் இரு பாடசாலைகளில் இஸ்ரேல் தாக்குதல்: 30 பேர் வரை பலி



பிராந்தியத்தில் போர் பதற்றம் உச்சம் பெற்றிருக்கும் சூழலில் காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதோடு அங்கு இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் மேலும் இரு பாடசாலைகள் மீது இடம்பெற்ற தாக்குதல்களில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மைல் ஹனியே ஈரான் தலைநகரில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து போர் பதற்றம் உச்சம் பெற்றிருக்கும் நிலையில் லெபனானில் இருந்து உடன் வெளியேறும்படி மேலும் பல நாடுகளும் தமது நாட்டு பிரஜைகளை அறிவுறுத்தியுள்ளன.

இஸ்ரேல் மீது பதிலடி கொடுப்பது குறித்து ஈரான் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் அங்கு நிலவும் பதற்றத்தை தணிக்கும் முயற்சியில் அமெரிக்கா மற்றும் மேற்குல நாடுகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

எனினும் ஈரான் புரட்சிக் காவல் படை தலைவர், ஹொஸைன் சலமி வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், 'ஈரானின் தீர்க்கமான பதிலடியை பெறும்போது இஸ்ரேல் தனது மதிப்பீட்டில் செய்த தவறை புரிந்து கொள்ளும். எப்படி, எவ்வாறு பதில் கிடைக்கும் என்பதை அவர்கள் பார்க்கத்தான் போகிறார்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

லெபனான் மற்றும் இஸ்ரேல் எல்லையில் தொடர்ந்து பரஸ்பரம் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதோடு தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் நேற்று இருவர் கொல்லப்பட்டதாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள ஒரே வர்த்தக விமானநிலையத்தில் விமான சேவைகள் ரத்துச் செய்யப்படுவது அல்லது இடைநிறுத்தப்படும் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், கனடா, தென் கொரிய, சவூதி அரேபியா, ஜப்பான், துருக்கி மற்றும் ஜோர்தான் உட்பட நாடுகள் தமது பிரஜைகளை லெபனானில் இருந்து விரைவாக வெளியேறுவதற்கு அறிவுறுத்தியுள்ளன.

மறுபுறம் காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது தொடர்பில் கெய்ரோவில் கடந்த சனிக்கிழமை புதிய சுற்று பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றபோதும் அதில் எந்த முடிவும் எட்டப்படவில்லை என்று செய்தி வெளியாகியுள்ளது.

இந்நிலையில் காசா நகரில் இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ஹசன் சலாமா மற்றும் அல் நாசர் பாடசாலைகள் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது. ஹமாஸ் கட்டளையகத்தை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் கூறியது.

தாக்குதலுக்கு உள்ளான பாடசாலை ஒன்றில் இருந்து சடலங்கள் மீட்கப்படும் காட்சிகள் சமூக ஊடகத்தில் வெளியான படங்களில் தெரிகின்றன. இதில் கொல்லப்பட்ட பெரும்பாலானோர் சிறுவர்கள் மற்றும் பெண்கள் என்று குறிப்பிட்டிருக்கும் பலஸ்தீன சிவில் பாதுகாப்பு அமைப்பு, மேலும் பலர் காணாமல்போயிருப்பதோடு அவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கி இருக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலியப் படை கடந்த ஒரு வாரத்தில் காசாவில் உள்ள மூன்று பாடசாலைகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக கடந்த சனிக்கிழமை காசா நகரில் உள்ள ஹமாமா பாடசாலை மீது நடத்திய தாக்குதலில் குறைந்தது 17 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் குறைந்தது 40 பேர் கொல்லப்பட்டு மேலும் 71 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. 10 மாதங்களை தொடும் காசா போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 39,623 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 91,469 பேர் காயமடைந்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 6ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.